# எங்கள் முற்றம்

கலை இலக்கிய சமூக இதழ்



யூலை- ஓகஸ்ட் 2025

விலை 100/=


## V.K. றொபின்சனின் 'அவளின் மொழி' கவிதை நூல் வெளியீடு, தே.க. இ.பே. கொக்குவில் -05.07.2025



## சிறுவர்களுடன் 'யானைத் தாத்தா' பாடல் நிகழ்வு - சிறுவர் மகிழகம், நல்லூர்








சிறுவர் பாடல்கள் காட்சியுடன் பார்க்க யானைத் தாத்தா யூர்யூப் சனல் சஸ்கிரைப் பண்ணுங்கள்

## மறுமலர்ச்சி மன்றம் - மழலைகள் மகிழகம் (சிறுவர் நூலகம்) தொடக்க நிகழ்வு



ISSN NO : 2783–8889
இதழ் : 5 ஜூலை–ஓகஸ்ட் 2025

# எங்கள் முற்றம்

## கலை இலக்கிய சமூக இதழ்

ஆசிரியர் : அழ. பகீரதன்

ஆடுதல், பாடுதல், சித்திரம் –கவி
யாதி யினைய கலைகளில் – உள்ளம்
ஈடுபட் டென்றும் நடப்பவர் – பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவார் – அவர்
நாடும் பொருள்கள் அனைத்தையும் – சில
நாளினில் எய்தப் பெறுகுவார் – அவர்
காடு புதரில் வளரினும் – தெய்வக்
காவனம் என்றதைப் போற்றலாம்!
–பாரதி

ஆக்கங்களிற்கு பொறுப்பு எழுதிய எழுத்தாளர்களே. கதைகளில் வரும் சம்பவங்கள், பாத்திரங்கள் யாவும் எழுத்தாளர்களின் கற்பனையே. ஆக்கங்களைச் சுருக்கவும், மாற்றவும் ஆசிரியருக்கு உரித்துண்டு. ஆக்கங்களின் கருத்துக்கள், இதழில் வரும் விளம்பரங்களின் கருத்துக்கள் எவற்றுக்கும் இதன் வெளியீட்டாளரான மறுமலர்ச்சி மன்றம் நம்பிக்கை பொறுப்பாகாது.

இதழ் வடிவமைப்பு: சிவ பரதன்
நிழற்படங்கள்: எஸ். அனுஜன்
ஆலோசகர்கள் :
மறுமலர்ச்சி மன்ற நம்பிக்கைச் சபை உறுப்பினர்கள்
சு. சுந்தரசிவம் – தலைவர்
கோ. சுதாகரன்– செயலாளர்
அ. பகீரதன் – பொருளாளர்
சோ. தேவராஜா
ந. சிவசுப்பிரமணியம்
சு. யாதவன்
ச. தனுஜன்
அச்சுப் பதிவு :
ஜே.எஸ். பிறின்ற்றேஸ்
சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு
வெளியீடு :
**மறுமலர்ச்சி மன்றம்,**
**காலையடி, பண்டத்தரிப்பு.**
**புத்தகப் பண்பாட்டுப் பேரவை**
**நீதிமன்ற வீதி, மல்லாகம்.**

*Email : marumalarchy1972@gmail.com*
*T.P : +94 77 104 1945*

நாம் எங்கள் முற்றம் இதழினை மீண்டும் மாத இதழாக வெளிக்கொணரும் அரியமுயற்சியில் உங்களுடன் பேசுகிறோம்.

2021 இல் 4 இதழ்கள் வெளிவந்தன. பலசவால்களுக்கு மத்தியில் வெளிவந்த இதழ்கள் வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பினைப் பெற்றிருந்தன.

நீண்ட இடைவெளிக்கு பின் மீண்டும் புதுப்பொலிவுடன் ‘எங்கள் முற்றம்’ இதழ் வெளியிடத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். 24 பக்கங்கள் வெளிவந்த இதழினை தற்போது 48 பக்கங்களுடன் வெளிக்கொண்டுவருகிறோம். உங்கள் வரவேற்பு நிச்சயம் இருக்கும் என்பது எமது நம்பிக்கை.

இதழ் உற்பத்திச் செலவினம் ரூபா 150 ஆக இருப்பினும் ரூபா 100 க்கு வாசகர்களுக்கு வழங்குவதற்காக அனுசரணையாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். மேலும் விளம்பரங்களையும் இணைத்துக்கொண்டு உங்களுக்கு 100 ரூபாவிற்கே தொடர்ந்தும் வழங்க திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

இளைஞர்களின் படைப்பாற்றல் திறனையும் வாசிப்பையும் ஊக்கப்படுத்துவதும் சிறுவர் முதல் முதியோர் வரை குடும்பத்தில் உள்ள அனைவரும் வாசிக்ககூடிய ஆக்கங்களை இணைத்துக்கொள்வதும் எமது நோக்கமாக உள்ளது.

இந்த இதழ் அட்டைப் படத்தில் அடிப்பகுதியை அண்மையில் மறைந்த மூன்று மூத்தோர் அலங்கரிக்கின்றனர்.

பேராசிரியர் தில்லைநாதன், எழுத்தாளர் வள்ளியம்மை சுப்பிரமணியம், தமிழகத்தில் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் ஆகியோரே அவர்கள். அவர்களுக்கு எமது அஞ்சலிகள். வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தில் வைக்கப்படுவர்.

அடுத்த இதழை செப்டம்பர் 01ந்திகதிக்குள் கொண்டுவருவதற்கு ஆக்கங்களை வரவேற்கின்றோம்

– ஆசிரியர்

**உள்ளே....**


தென்புலத்தார் தொழுதேற்றல்:

*வீரகாவியம் – சோ. தேவராஜா– 01*

*பேராசிரியர் தில்லைநாதன்–*
*எம்.ஏ.நு.:மான்– 40*

*பேரா தில்லைநாதன் நினைவுகள் சில –*
*சி. சிவசேகரம்–43*

*பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் –*
*ஔவை அருள் நடராசன் –47*

சிறுகதை:

*செவ்வாய் தோஷம் – இதயராசன் –35*

*சீனியும் பாகற்காயும் – எம். கே. கஜரூபன்– 19*

கவிதைகள்:

*வடிவழகையன் –10*

*ஸ்ரீலேக்கா பேரின்பகுமார் –23*

*காருண்யா – 39*

*அழ. பகீரதன் –42*

*பேரி. வேந்தன் –14*

*விநாயகர் சாந்தை மு. ரமேஷ் –14*

பயில் நிலம்:

*சிறுகதை – வெட்டிவிடப்பட்ட சிறகுகள் –*
*ஸுமைய்யா வறீஸ் –21*

*சிறுகதை – வந்தது வசந்தம் –*
*திவ்வியா ராமச்சந்திரன் –27*

சிறுவர் அரங்கம்:

*முத்தின் வழிகாட்டி –மதியழகன் விஷாந்தனா 11*

மொழியாக்கம்:

*சிங்கள மொழிக் கவிதைகள்–இப்னு அஸூமத் 06*

அலசல்:

*இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்ரர் வன்முறையும்*
*வரலாறு ஒளித்துவைத்திருக்கும் உண்மைகளும்*
*ச. தனுஜன் – 32*

சமூகப் பார்வை:

*கனவு மெய்படல் வேண்டும் –*
*அ. சந்திரஹாசன் –44*

*இலங்கை தமிழும் தமிழரும் – அழ. பகீதன் –15*

*உடற்பசிக்கு ஆளாகும்*
*குடல் வற்றிய சிறுவர் சிறுமியர்*
*–கே.எஸ. சிறீஸ்கந்தராஜா –26*

தொடர்:

*வேதாளமும் முருங்கையும் – அசன் –24*

*தீரனியனின் திருவிளையாடல் – செண்பகன் –07*

நூறுமலர்கள் மலரட்டும்:

*நாடக இணையர்களின் பொன்விழா–*
*அரங்காடி 30*


***மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளி கலைவிழா காட்சிகள்***











# வீரகாவியம்

**( "ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புக்கள்" என்ற தலைப்பில் வள்ளியம்மை சுப்பிரமணியம் எழுதிய நூல் பற்றிய விளக்கவுரை )**

*சோ. தேவராஜா*




## முன்னுரை

பண்டைத்தமிழர் வாழ்வில் தோன்றிய ஐம்பெரும் காப்பியங்கள் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை.

இவை செய்யுள்களால் வார்க்கப்பட்டவை. நாயகன், நாயகியை முன்னிறுத்தி அக்கால வாழ்வின் கோலங்களை வெளிப்படுத்தியவை. தமிழ் இலக்கிய வரலாற்றில் இன்று வரை அவை போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

வசன நடை நவீன இலக்கியத்துக்கு வாய்க்கப்பெற்ற பின்னர் காவியங்களின் தொடர்ச்சி நாவல்களாகப் பரிணமித்தன.

இலங்கை பொதுவுடமை இயக்கத்தின் தனித்துவமான தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம். அவரது இணையரான வள்ளியம்மை சுப்பிரமணியம் வரைந்த தன் வரலாற்று நூலாக 'ஒரு கம்யூனிஸ்ட் இணையர் வாழ்வின் சந்திப்புக்கள்' என்ற இந்நூல் அமைகிறது.

'இன்பத்துக்காக வாழ்கிறோம். இன்பத்துக்காகப் போராடுகிறோம். இன்பத்துக்காக மரணத்தையும் எதிர் கொள்கிறோம்' என்பது செக்கோஸ்லாவாக்கிய ஜூலியஸ் பியூசிக் பாசிசத்துக்கெதிராக போராடியபோது சிறையிலிருந்து எழுதிய தூக்குமேடைக் குறிப்புக்களாகும்.

சுண்ணாம்பறையில் பூட்டிவைத்து சிறைவாசம் அனுபவித்தவர் நாவுக்கரசர். அப்போது அச்சுண்ணாம்பறையை தனது இலட்சியத்தில் வழுவாது 'மாசில் வீணையும் மாலை மதியமும்' எனக் கொடுஞ்சிறைக் கூடத்தை வர்ணித்து 'ஈசன் எந்தை இணையடி நீழலே' எனத் துன்பத்தில் துவளாது மகிழ்ந்தார். 'நாமார்க்கும் குடியல்லோம். நமனை அஞ்சோம்' என முழங்கியவர். 'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை' என வாழ்வைப் போராட்டக் களமாக இன்புற்றவர்.

'எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னைருமைத் தாய் நாடே' என்ற பெற்றோவி எனும் ஹங்கேரியக் கவிஞர் 'மனிதனாயின் மனிதனாயிரு' என்று திசைகாட்டியவர். சர்வதேச பாட்டாளிவர்க்க வாழ்வில் தடம்பதித்தவர் வள்ளியம்மை சுப்பிரமணியம். சைவசமயப் பண்பாட்டில் தன்னைப் புடம்போட்டு விடுதலை விரும்பியாக–பாரதியின் புதுமைப் பெண்ணாகப் வார்க்கப்பட்டவர்.

> ***'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு'***

என்ற வள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாக விளங்கியவர்.

வள்ளியம்மை காலம் முழுதும் கருமமே கண்ணாகி உழைத்து வியர்வை சிந்தி– கண்ணீரில் கரைந்து – இரத்தத்தில் தோய்ந்து அவரின் வார்த்தைகளில் வரைந்த வீரகாவியமே இந்நூல் எனில் மிகையாகாது.

## குடும்ப – சமூகப் பின்புலம்

வ.சு.அம்மையார் 1938–10–07ம் திகதி அரியாலையில் பத்துப்பிள்ளைகளில் ஒருவராக அவதரித்தார். இவரது தந்தையார் ஆசைப்பிள்ளை. தாயார் செல்லமுத்து. இவருக்கு முன் பிறந்த ஏழு பிள்ளைகளும் இள வயதிலேயே காலமாகி விட்டனர். இவரது அக்காவின் ஒரே மகன் சின்னையா அப்புத்துரை, இவரது தம்பியார் பொன்னையா. தங்கைச்சி இலட்சுமிப்பிள்ளை ஆகியோர் இவரது கால இவரின் இரத்த உடன்பிறப்புக்களாவார். இவரது தங்கையார் இலட்சுமிப்பிள்ளையும் மறைந்த பின்னர் இவரது தம்பி பொன்னையா அவர்களே தற்போதும் வாழும் ஒரே உடன்பிறப்பாவார்.

1955களில் விடுதியில் இவருடன் தங்கிப்படித்தவர் தெல்லிப்பழைக் கிளானையைச் சேர்ந்த 'செல்லக்கா' எனும் அம்பலப்பிள்ளை சிவநேசம். இவரின் சின்னண்ணையே வ.சுவின் இணைஞர் கே.ஏ.சுப்பிரமணியம் ஆவார். 24 வயதில் இவரை 1955 மாசியில் ஒரு ஞாயிற்றுக்கிழமை செல்லக்கா வீட்டில் முதன் முதல் சந்தித்தார். 1962 தை மாதம் 19–ம் திகதி வெள்ளிக்கிழமை தைப்பூசத்திருநாளில் நல்லூரில் இணையர் கே.ஏ.எஸ்சுடன் வாழ்வில் சங்கமித்தார்.

1959–ம் ஆண்டில் இவரது 21 வது வயதில் ஆசிரிய நியமனம் கிடைத்தது. சின்னமகேஸ் அக்கா என்பவரின் கீழ் 6 மாத காலப்பயிற்சி இளவாலையில் பெற்றார்.

இவர் பல்வேறு இடங்களிலும் பறந்து பறந்து தனது வாழ்வை அமைத்தார். காரைநகர் (1962–1966), காலையடி, பண்டத்தரிப்பு (1967–1971) தொல்புரம் (1972–1976) ஆகிய இடங்களில் நெசவாலை ஆசிரியப்பணியை மேற்கொண்டிருந்தார். அக்காலத்தில் வாடகை வீடுகளிலேயே அவரது சீவியம் அமைந்தது.

1975–ம் ஆண்டின் இறுதியில் சத்தியமனைக்கு வ.சு, கே.ஏ.சுவுடன் குடியமர்ந்தார். '4 பரப்பு நிலம் தம்பி பொன்னையாவின் ரூபா 3000 உம் எமது அம்மா தனக்கு வாங்கிய தங்கையின் திருமணத்திற்கு வேண்டிய வெள்ளை அட்டியலை விற்று வாங்கினோம். பர்ணசாலையாக அமைந்தது மண்குடில். இராசர் வைத்த பெயர் 'வெள்ளம் சுற்றி நின்ற சிறுமண் கொட்டில்தான் எங்கள் சத்தியமனை' (பக்கம் 103) என வ.சு. குறிப்பிடுகின்றார்.

தற்போது அவர் வாழ்ந்து வரும் தொல்புரம் சத்தியமனையில் தன் சொந்த இல்லத்தில் 1977–1991 வரை வாழ்ந்தார். பின்னர் கண்டியிலும் (1992–1997) சிங்கப்பூரிலும் (1998–2011) கொழும்பிலும் (2012–2018) மீண்டும் சத்தியமனையில் 2019–லிருந்து வாழ்ந்து வருகின்றார்.

இவரது வாழ்வுக்காலம் என்பது இலங்கையின் இருள் சூழ்ந்த காலம். சமகாலக் காலமாற்றம் 2024ன் இறுதியில் தோன்றி இருள் விலகும் வெளிச்சக்கதிர்கள் ஓரளவு தென்படுகின்றன.

1938 முதல் 1948 வரை பிரித்தானிய வெள்ளையர்கள் இலங்கையை ஆண்ட கொலனித்துவக் காலம். 1948–ல் சுதந்திரம் என்ற பெயரில் வெள்ளையர் வெளியேறினாலும் 1972 வரை முடிக்குரிய குடியேற்ற நாடாக இங்கிலாந்து மகாராணியின் வாரிசாக மகாதேசாதிபதியின் முத்திரை பதிக்கப்பட்டது. இக்காலத்தில் 1958ல் சிங்களக் காடையர் தமிழர்களுக்கெதிராகக் கலவரத்தை மூட்டினர். 1948ல் மலையக மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டு ஏழு மலையக பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்த வாக்குரிமை மறுக்கப்பட்டது.

1960களில் 'தோசை வடை அபிட்ட ஏப்பா' (தோசை வடை எமக்கு வேண்டாம்) என்று தமிழ்த் துவேசம் சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டு வளர்க்கப் பட்டது. பிறப்பால் மக்கள் சிங்களவர், முஸ்லீம், தமிழர், மலையகத்தவர் எனப் பிரிக்கப்பட்டனர். சிங்கள மக்களிடம் 'அபே ரட்ட' (எங்கள் நாடு) என்ற தனிச்சிங்கள மகாவம்ச மனோபாவம் ஊட்டி வளர்க்கப்பட்டது.

நிலமானிய நீசத்தனங்கள் மக்கள் மத்தியில் வேரூன்றி விருட்சமாக விஷ விழுதுகளாய் மக்கள் மனதில் ஆட்கொண்ட காலம். மனிதர்களைக் காண்பதே அரிது. மோட்டு சிங்களவன், பற தெமில, சோனி, தோட்டக்காட்டான் என கொச்சைப்படுத்தி மனிதர்களை மனிதர்களே பார்த்துப் பரிகசித்த வில்லங்கக் காலம்.

நிலமானியப் பிரபுக்கள் கொலனித்துவ – ஏகாதிபத்திய தாசர்களாக விளங்கினர். எனவே பிறப்பால் வந்த பேதங்களை எண்ணெய் ஊற்றி மனித மனங்களை மாசுபடுத்திய மயான காலம். மக்கள் என்போர் மயானம் காத்த மன்னர்களாயினர்.

தமிழர்கள் மத்தியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சாதி அகம்பாவம் மேலோங்கி இருந்தது. செருப்புப் போடக்கூடாது, வீட்டினுள், பாடசாலையில், உணவில், உடையில், மேற்சட்டை, சால்வை, பஸ்சில், கதிரையில், தண்ணீர்க்குவளையில், கறள் பேணியில் எல்லாம் சாதி தாண்டவமாடியது. ஒடுக்கப்பட்ட தமிழர் தமிழராகவே கருதப்படாத காலம். மனிதர்களாகவே மதிக்கப்படவில்லை. சேவைத் தொழில் செய்யும் மக்கள் சாதிப்பெயர் சொல்லி அவமானப்படுத்தப்பட்டனர். தாலி, கூறை கட்டக்கூடாத காலம். பெண்கள் வணிகநுகர்வில் போகப்பொருட்களாகப் பண்டங்களாக்கப்பட்டுப் பண்பாட்டின் அடையாளங்களாகப் பரிகசிக்கப் பட்டனர்.

## வ.சு வின் ஆளுமை

மனிதர் சமூகப்பிராணிகள். சமூகம், அரசியலோடு பின்னிப் பிணைந்தமை, சமூகமனிதர் வ.சு. வும் அதற்கு விதிவிலக்கல்ல.

அவலம் மிக்க அபத்த காலத்தில் அவதரித்த அம்மையார் வள்ளியம்மை அவர்கள் எதிலும் எங்கும் எப்போதும் எதிர்நீச்சல் அடித்தே உறுதி படைத்த– அமைதியான புன்முறுவலுடன் வீரப்பெண்மணியாகத் திகழ்ந்தவர்.

சாதி அகம்பாவம், இனவெறி யுத்தம் அவற்றை மாக்சிய இணையருடனும் பிள்ளைகளுடனும் குடும்பமாக நின்று போராடிய வள்ளியம்மையின் ஆளுமை தனித்துவமாக நோக்கப்பட வேண்டியது.

1938 முதல் மழலையாக, குழந்தையாக, குமரியாக, குடும்பக்குலவிளக்காக, தாரமாக, தாயாக, போராளியாக, பரோபகாரியாக, பாட்டியாகப் பல்வித பாத்திரங்களில வள்ளியம்மை சுப்பிரமணியம் பரிணமிக்கின்றார்.

வாழ்வில் எதிர்நீச்சல் போட்டவர். உண்மைக்காக, நன்மைக்காக, நீதிக்காக, நேர்மைக்காக, தோழர்களுக்காக, ஸ்தாபனத்திற்காகப் போராடிய வீரப்பெண்மணி தோழர் வள்ளியம்மை சுப்பிரமணியம்.

கம்யூனிஸ்ட் கணவனுக்காக, விடுதலை தேசியத்தின்

மகன் மீரான் மாஸ்ரர் எனும் சத்தியராசனுக்காக– பிள்ளைகளின் கல்விக்காக – பேரப்பிள்ளைகளுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்து மகிழ்பவர்.

தோழர்களுக்காக அவர்களின் உறவுகளுக்காக ஊர்களுக்காக ஓய்வின்றி ஊடாடி இன்புறுபவர்.

தமிழ்மொழி, கவிதை, சிங்களமொழி, பிள்ளை இலக்கியம், நீதிக்கதைகள் எனக் கற்றும் எழுதியும் கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகத்திலும் அங்கு கருமமாற்றும் பிள்ளைகளுடனும் அயலவர்களுடனும் ஊரவர்களுடனும் உறவினர்களுடனும் அன்பாகப் பழகி ஆர்வமூட்டி அளவளாவுபவர்.

தோழர் வள்ளியம்மை சுப்பிரமணியம் தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் கலைஞர்கள் சில்லையூர் செல்வராசன் முதல் முருகையன், சிவசேகரம், தில்லைநாதன் என்ற பல்வகை ஆற்றல் மிகு அறிஞர்கள் பலருடனும் தன் ஆசிரியர்கள், தமிழ்ப் பற்றாளர்கள் எனப் பல்துறையினருடன் பழகும் பண்பாளர்.

'காதலும், கலியாணமுமாக 15 வருடங்கள், அவரது (கே. ஏ. சுவின்) ஆளுமைகளில் நான் கரைந்து கொண்டு இருந்தாலும், துன்பம் வந்த போதெல்லாம் பறாளை முருகனையும், பத்திரகாளி தாயையும் கும்பிட்டு வைத்துக்கொள்வேன். இது தோழருக்குத் தெரிந்தாலும் எனக்கான இடைவெளிகளில் நுழைந்ததில்லை. அன்றும் தெய்வங்கள் என்னுடன் நிற்பதாகச் சத்தியவானைக் காத்த சாவித்திரி கணக்கில் நின்றேன்.' (பக்கம் –92) இவ்வாறு அரசியலை எதிர்கொண்டார் வ.சு.

சமகாலத்தில் தான் எதிர்கொண்ட சாதிச் சவால்கள், இனவெறி ஒடுக்கல்கள் வர்க்க வேர்களில் விளைந்த விஷக் கிருமிகளைத் தனது மரபார்ந்த வீரத் தெய்வம் பத்திரகாளி அம்மனின் ஆத்ம பலத்துடன் மாக்சிய நெறியில் அமைதியாக வீரச் சமர் புரிந்தார்.

கே.ஏ.சு.வுடன் வ.சுவுக்கு ஏற்பட்ட ஈர்ப்பில் 'தேசாபிமானி' பத்திரிகை மாதாந்தம் படித்தார். கே.ஏ.சு தனது கிராமத்தில் கிளானை சனசமூக நிலையத்தை ஆரம்பித்து உடுவில் எம்.பி. வி. தர்மலிங்கம், கம்யூனிஸ்ட் தோழர் வி. பொன்னம்பலம் ஆகியோரை அழைத்துச் சொற்பொழிவுகள் நடாத்தினார். அவர்கள் மூலம் பெறும் முக்கிய நூல்களைக் கே.ஏ.சு. தனது வ.சுவுக்கு அனுப்பி வைப்பார்.

'தோழர் மணியம் தன் உத்தியோகத்தை இழந்தபின் மேற்கொண்ட வாழ்க்கையில்... ஒரேயொரு சீவனுக்கு ஆதரவாக, ஒத்துழைப்பாக என்னால் பங்களிக்க முடியுமா' என யோசித்த போது சிலர், ஒரு குடும்பத்துக்கு, சிலர் ஒரு சமூகத்துக்கு, சிலர் நாட்டிற்கு, இப்படித் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்த, வாழ்கிற, அந்த அர்த்தமுள்ள வாழ்வு எவ்வளவு அற்புதமான செயல்களை உள்ளடக்கியது என்று உணர முடிந்தது." என வ.சு. எழுதி இருந்தார்.(பக்கம்–131)

1986–ல் மூன்று குழந்தைகளுடனும் கே. ஏ. சு வுடன் எடுத்த புகைப்படத்தைப் பிரசுரித்துள்ளனர். இப் படத்தில் தான் மகள் போட்ட சட்டையை இராசாத்தி தன் கையால் தைத்து அன்பளிப்பாகத் தந்தனர். இந்தச் சீலை தோழர் மான் முத்தையா அவர்களின் மனைவி தந்தது. மஞ்சள் நிறத்தில் கறுப்பு போடர். என்னிடமிருந்த நல்ல புடவை இதுவே. அதன் நிறம் மாறும்வரை அதை உடுத்தினேன்" (பக். 81)

ஏழ்மை, எளிமை, நம்பிக்கை, துணிவு, வர்க்க சமுதாயம் பற்றிய தெளிவான பார்வை சமூக யதார்த்தம் என்பவற்றைப் புரிந்து கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்துவம் பெறாமலேயே தன்வாழ்வை – தியாக வாழ்வை சிறந்த கம்யூனிஸ்ட் புதுமைப் பெண்ணாக வ. சு. வாழ்கிறார் என்றால் மிகையன்று...

'காலையில் வீடு விட்டுப் போனவர் இரவு 12.00 மணியாகியும் வீடு திரும்பவில்லை. நானும், மூன்று பச்சைக் குழந்தைகளும் தவித்து இருந்தோம். அதிலும், மகள் பபி தகப்பனின் நெஞ்சின் மேல் ஏறிப் படுப்பா.. அதுதான் அவவுக்கு நிம்மதியான நித்திரை. இராசன் பாவம்... தங்கையின் கையைப் பிடித்தபடி... தூங்கிப்போனார். எனக்கோ... என்னில் வெறுப்பாக இருந்தது. என்னைப் போன்ற ரீச்சர்மாருக்கு ஒவ்வொருவருக்கும் ஆறு. ஏழு குழந்தைகள். பெற்றார், மாமன்–மாமி, சகோதரங்கள், இன, சனம் என்ற ஒரு பெரிய சொந்த பந்தங்களோடு வாழ்ந்தார்கள். எத்தனை பிள்ளைகளைப் பெற்றாலும் சுக துக்கங்களைப் பகிர உறவுகள் சூழ வாழ்ந்தார்கள்.'

சங்கானை நகர சபைத்தலைவர் தோழர் மான் முத்தையா வீட்டுக்கு நெருக்கடி கொடுத்து சாதிவெறியர் அவரை ஊரிலிருந்து இடம்பெயரச் செய்தனர்.

'அந்த சண்டியர்களுள் ஒருவர் வ.சு வின் தந்தையிடம் வந்து, "உங்கடை மருமேன் பள்ளரோடு சேர்ந்து அவங்களுக்காக எம்பிமாரை கூட்டிக்கொண்டு வந்து காட்டுறானாம். உங்கடை மேள் கெதியிலை வெள்ளச்சீலையோடு தான் சீவிக்கப்போறா எண்டதைத்தான் சொல்லிவிட்டு போக வந்தனான்" என்று சொல்லிச் சென்றாராம்' (பக்கம்–84)

வ.சு நெசவு ஆசிரியராக ஒவ்வொரு கிராமத்திலும் 5 வருடங்கள் என்ற ஒழுங்கின்படி காரைநகர், காலையடி, வழக்கம்பரை, பண்ணாகம் தெற்கு என இடமாற்றங்களும் ஏற்பட்டன. தொல்புரத்தில் 10 ரூபா வீட்டு வாடகை கொடுத்து தோழர்களின் உதவியுடன் காலையடியிலிருந்த பொருட்கள் தொல்புரத்துக்கு மாற்றப்பட்டன.

(அடுத்த இதழிலும்...



## மே 18

வெண் புறாக்களே
சிறகுகளின் மேல் தீ சிதைந்த
சின்ன வண்ணத்திகளே
வானவில் பள்ளத்தாக்கில் விழுந்த
நெருப்பெடுத்த நிலத்தில்
விடியலுக்கு சாம்பல் தெளிக்கும்
துப்பாக்கிச் சூடுகளுக்கு நடுவில்
நீ கொக்கின் வெண்மையை ஏற்றினாய்
எந்தவொரு மனதும் தாய்மாரின்
சிகப்பென பாலினை மாற்றிய
பிள்ளைப் பூக்கள் தூங்குகின்ற நிலத்தினில்
விழிகளின் தீர்த்தம் வார்க்கும்
தீச்சுடர்களின் மத்தியில்
பலமுறை வழிந்த ஒரே சுவையுள்ள
தாய்மாரது கண்ணீர்
பகிரப்படுகின்றன
தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும்

– மல்சா ஜே. லங்கானி
– தமிழில் – இப்னு அஸூமத்
Malsha J. Lankani

## அப்பாவின் அன்பு

அப்பாவின் பாதங்கள் மிதிபட்ட இடத்தில்
இன்று பெரியதொரு அலரி மரம் முளைத்திருக்கிறது
மரத்தைச் சுற்றிலும் பூக்கள்
நிலத்தில் விழுந்து கிடக்கின்றன சரியாக
கம்பளம் விரித்தாற்போல்
நான் பூக்களை மிதித்திடாதவாறு மெதுவாக
அங்கிருந்த வாங்கொன்றில் அமர்ந்துகொண்டேன்
பதுளையில் மலை வளையங்களின் மேலாக
சூரியன் இறங்கிச் செல்கிறது
சுற்றிலும் இருள் அடித்தோடி வருகிறது
இந்த அமைதியை நான் எப்போதும் விரும்புகிறேன்
மெல்லிய காற்றொன்று தவழ்ந்துச் செல்வதை
நான் உணர்கிறேன்
அதனிடையே அப்பா ‘மகனே' என
கூறுவதைப்போல் எனக்குத் தோன்றியது
அப்பாவின் அன்பு எனக்குப் புலப்பட்டது
இன்னும் சிறிது நேரத்தில் உலகம்
இருளின் வசப்படும்
நிலவொளி மாத்திரம் அப்பாவின் கல்லறையில்
தனிமை காத்திடும்
வாழ்க்கை அவ்வளவுதான் என
எனக்குத் தோன்றிற்று
எங்களுக்கு எப்போதுமே எஞ்சுவது
நெருக்கமானவர்களது அன்பு மாத்திரமே

– ரோஹன அகலகும்புர
– தமிழில் – இப்னு அஸூமத்
Rohana Agalakumbura



## அப்பாவின் ஜோடி சப்பாத்து

நெஞ்சினைத் தோன்றி துவாரங்கள் நடுவினில்
வேதனை நாடியை இறுக்கி
அப்பாவின் ஜோடி சப்பாத்து
வைக்கப்பட்டிருக்கிறது புதையலென

நீளக் கை கமிசையின்
கைகளை மடித்து
தாம்பூல சாயத்தைத் துப்பி முற்றத்தில்
‘பெரியவளே உனக்கு
ஏதாவது வாங்கிவர வேண்டுமா?' என
மெலிந்த பணப் பையை மறைத்து கேட்கின்ற

சைக்கிளின் பின்னால்
வறிய பாடசாலையொன்றை வைத்துக்கொண்டு
அப்பிள்ளைகளின் வினாத் தாள்களையும்
அவர்கள் பதிலளித்த தாள்களையும் கொண்டு
வலய அலுவலகததுக்குச் சென்ற

சேறு நிறைந்த சகதியில் இறங்கி
கலக்கி அதன்நடுவே தாமரையை முளைத்திடச் செய்த
நற்குணங்கள் கொண்டதொரு தந்தை
அசைத்திட இயலா பாதையில் அழைத்துச் சென்ற

காய்த்திட்ட பாதங்களைப் பாதுகாத்திட்ட
பழையது என்றாலும்
அடி போட்டுப் போட்டுத் தைத்துள்ள
தோள் தேய்ந்த பாதணி ஜோடி
எனது இதயத்தின் நடுவினில்
புதையலாக வைக்கப்பட்டிருக்கிறது

பிள்ளைகளைத் தூக்கி வைத்து
கிரீடங்கள் அவர்களது கைகள் தொடும் வகையில்
விழுந்து விழுந்து மலைத்தம்பத்தில் ஏறி
அப்பாவின் சிவனொளிபாதத்தைக் காத்த
அந்த பழுதடைந்த பாதணி
சொல்லாமலே அவர் வைத்துச் சென்ற ஆயிரங் கதைகள்
இரத்த நாளத்தை வலிக்கச் செய்கிறது


– வத்சலா கன்னங்கர
– தமிழில் – இப்னு அஸூமத்
Wathsala Kannangara



# தீரனியன் திருவிளையாடல்

**(ஓட்டிச உலகில் நானும் ... தன் வரலாறு – மைதிலி றெஜினோல்ட் –நூல் அறிமுகம்)**

*செண்பகன்*




### முன்னுரை

பஞ்சபூதங்கள் நிதர்சனமானவை. மனிதர் சுதந்திரமானவர். ஆளுமை என்பது மனிதரின் வளர்ச்சியின் அடிப்படை. மனிதர் சமூகப்பிராணி. சமூகம் என்பது மனிதரின் மகிழ்ச்சியின் மையம்.

இயற்கை இனிமையானது. அழகானது. அருமையானது. இயற்கையுடன் வாழும் மனிதர் பயமற்றவர். கவலை இல்லாதவர். வெட்கம் என்பதை விளங்க இயலாதவர்.

தனிமனிதவாழ்வு அந்தரங்கமானது. புனிதமானது. அவ்வாழ்வு திறந்த புத்தகமாக வாசகர் கரங்களில் தவழ்ந்து அதனை வாசித்து யோசித்து அடையும் இன்பம் அலாதியானது.

'ஓட்டிச உலகில் நானும் ...' தன் வரலாறு என்ற நூல் மைதிலி றெஜினோல்ட் என்பவரின் கைவண்ணத்தில் உருவானது.

இந்நூலினை 'எங்கடபுத்தகங்கள்' குலசிங்கம் வசீகரன் வெளியிட்டுள்ளார். 412 பக்கங்களைக் கொண்ட அழகிய நூலாக யாழ்ப்பாணம் நியூ எவகிறீன் அச்சகத்தில் அச்சுப்பதிப்புச் செய்யப்பட்டு ரூபா.1800/= விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வடமாகாண அரசின் சாகித்தியப் பரிசும் இந்நூலுக்குக் கிடைத்துள்ளது.

இந்நூலினுள்ளே யாத்திரை செய்வது இன்ப அதிர்வலைகளை எழுப்பவல்லது. 'மனிதர் எத்தனை உலகம் அத்தனை' என்பது உலகப் பொது மொழியாகும். பௌதீக உலகத்தை எங்கள் பயணங்களின் மூலம் கண்களாலும் காதுகளாலும் தரிசரித்துக் கொள்ளலாம்.

மனிதர் என்ற உலகத்தைத் தரிசனம் செய்வதாயின் மனித நேயமும் இதய தாகமும் அவசியமானவை. மனிதரைப் புத்தக வடிவில் அதனுள் புகுத்தி –தமிழ்மொழியின்–சொல்லின்–உயிரோட்டத்தின்– நாடி நரம்பு மயிர்த்துளைக் குழாய்களினூடாக– இரத்தத்தோடு இரண்டறக் கலந்து–தமிழ்மொழியின் வல்லமை வாலாயமாக வாய்க்கப் பெறுவது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருவதாகும்.

இம்முன்னுரை இந்நூலை வாசித்து மகிழ்ந்தபின் எழுந்து எழுதியது.

இந்நூலினுள்ளே பயணப்படுவது பயனுள்ள அனுபவமாக விரிகிறது.

றினோஷ் றெஜினோல்ட் என்ற கதாநாயகன் சுதந்திரமானவர். பஞ்சபூதங்களின் பிள்ளை. பிரபஞ்ச புத்திரன் என்பதை அறிவதும் ஆய்வதும் ஆதாரங்களைத் தேடுவதும் சமூகத்தின் மையப்புள்ளியில் றினோஷ் எவ்வாறு மகிழ்வைத் தூண்டியுள்ளார் என எழுதுதல் என் பணி என முனைகின்றேன்.

றினோஷ் என்பவர் யார்? அவரது பெற்றோர் மைதிலி றெஜினோல்ட் தமது மகன் றினோஷ் என்று உரிமை கொண்டாடுவதும் தமக்கு மட்டுமே சொந்தம் என்ற பிரமையும் பொது வெளியில் பிரபஞ்ச உலகில் றினோஷின் வகிபாகம் என்ன என்பதை அங்கீகரிப்பதில் உள்ள தயக்கம் என்பதுமே இந்நூலின் எடுத்துரைப்பு முறைமையின் உள்ளக முரண்பாடு ஆகும்.

"நான் றினோஷின் தாய். எனது பிள்ளை றினோஷ். அவனது செயல்கள் எனது கவனயீனம், அக்கறையீனம் அல்லது எனது அறிவீனம் என அயலும் சமூகமும் கருதுகின்றமை " அவரின் கவலைகளின் ஆதார சுருதி.

எனவே அவரின் தவறுகள் அனைத்திற்கும் முழுப் பொறுப்பும் நானேயாவேன் எனத் தன் மீது கழிவிரக்கம் கொள்ளும் தாயின் அவலமும், றினோஷின் அதீத ஆற்றலும் அபரிமிதமான வளர்ச்சியும் கொண்ட சிறப்பான அம்சங்களுடன் ஐம்பத்தெட்டுப் பேரில் ஒருவராக பஞ்சபூதங்களின்–பிரபஞ்சத்தின் –கடவுளின் பிள்ளையாகப் பிறந்து வளர்பவரின் சுதந்திர தாகமும் நெருப்பிலும் தண்ணீரிலும் பஞ்சபூதங்களுடன் அளைந்து பழகும் அவாவும் இயற்கையின் உற்பவிப்பு என்பதனால் ஏற்படும் சமூகப் பொறுப்பின் புரியாமையின் விளைவுமே இந்நூலில் முரண்பாடுகளாக மோதுகின்றன.

இம்மோதலின் தீர்வுகள், சமூகத்தில் துன்பம் எனவும் கெடுதிகள் எனவும் இயலாமை எனவும் தள்ளி வைக்கப்படுவன பற்றிய மறுபக்கப் பார்வையில் அவையே இன்பம் ஆகவும் நல்லனவாகவும்  இயல்பு ஆகவும் ஏற்று நாம் அனைவரும் சமூக மானுடராக பொறுப்பேற்பின் வாழ்வு என்பது சுமை இன்றிச் சுவை பயப்பதாக அமையும் என்பது இந்நூல் கூறும் செய்தியாகும்.

றினோஷ் என்னும் கதாநாயகனின் திருவிளையாடல்கள் என்பவற்றின் இனிய பதிவுகளை இரசனைக் குறிப்புகளாக வெளிப்படுத்துவதே இந்நூலுக்கான பொருத்தமான அறிமுகம் என்பது எனது அபிப்பிராயமாகும்.

மட்டக்களப்பு தீரனியர் பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியரும் வேறொரு  தீரனியனின் தாயுமாகிய திருமதி சுபாசினி அவர்களின் வாக்குமூலம் எமது கவனிப்புக்குரியது.

'கடவுள் தன்னையே ஒரு நகலெடுத்து மண்ணில் தவளவிட்டார்...கள்ளமில்லாத இந்தத் தீரனியர்கள் வடிவில் ...'

'ஒரு தாயானவள் தன்னை படைத்த இறைவனின் சாயலை தன் வயிற்றிலும் ...மடியிலும்... தோழிலும் சுமந்து காலம் முழுவதும் மனதில் சுமக்கவும் தவம் செய்திருக்க வேண்டும்'என்று நினைக்கின்றேன்(பக்கம்–06).

'பேசாத மௌனக் குழந்தையை போல ஓட்டிசம் குறித்தும் பல இடங்களில் பேசப்படாமலே போவது கவலைக்குரிய விடயமே'(பக்கம்–07).

'பலரும் பேசாத, பேசப்படத் துணியாத விடயத்தை நேரமெடுத்து எழுதி தன் அனுபவங்கள் ஊடாக எங்களுக்கு பாடத்தைத் தந்திருக்கும் மைதிலிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்'(பக்கம்.09).

தன் வரலாறு எழுதிய மைதிலி றெஜினோல்ட் எவ்வாறு தன் பிள்ளையுடன் இன்பமான வாழ்வு நடத்தினாள் என்பதை அவரது எழுத்து வாயிலாகவே  புரிந்து கொள்ள முயல்வோம்.

'ஓட்டிசக் குழந்தைகள் அபரிமிதமாக வர்ணிக்ககூடிய ஆற்றல் கொண்டவர்கள். எனது பிள்ளையும் அவ்வாறே சிறப்பான அம்சங்கள் கொண்டவனாக படைக்கப்பட்டுள்ளான் (பக்கம்–12).

'எனது பிள்ளை' என உடைமை கொள்வதுவே இன்றைய சமூகத்தில் மைதிலி தனிமைப்படுவதற்கும் குற்றக்கூண்டில் சமூகத்தால் நிறுத்தப்படுவதற்குமுரிய பிரதான காரணமாகும்.

'றினோஷ்' கடவுளின் குழந்தை, பஞ்சபூதங்களின் நண்பன். அதனைப் புரிந்து தெளிந்து ஏற்கும் மனப்பக்குவம் பெற்றால் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்படுவதற்குப் பதிலாக ஆலயத்தின் மூலஸ்தானத்தில் வைக்கப்படுவான் றினோஷ். அந்தக் கைங்காரியத்தையே இந்நூல் ஏற்படுத்துகின்றதெனத் துணிந்து சொல்வேன்.

"இன்று நான் என்று தன்னைச் சுயவிமர்சனம் செய்கிறார் மைதிலி. நீண்டகால உணர்வுப் போராட்டங்களின் ஊடாக தனிப்பட்ட சவால்களை ஏற்றுக் கொள்ளும் மனமுதிர்ச்சியை பெற்றுவிட்டேன்.

'குடும்பத்தினதும் சமூகத்தினதும் ஒன்றுபட்ட சிறந்த வாழ்க்கை வழிகாட்டலே ஓட்டிசக் குறைபாட்டைத் தீர்க்கும் சிகிச்சை முறை ஆகும்.(பக்கம்–15) எனப் பிரகடனப்படுத்துகின்றார்.

" 'பிள்ளையின் எதிர்காலம் பற்றிய அச்சம், ஏன் இந்த முடிவில்லாத சோதனை என்ற கோபம் ...போன்ற அனைத்து எதிர்மறை உணர்வுகளும் இருந்தன. நாட்கள் செல்ல செல்ல சுய அறிவோடு சிந்தித்தும் எனக்கு நானே பல கோணங்களில் கேள்விகளைக் கேட்டும், அதற்கான பதில்களைத் தேடித் தேடிக் கண்டுபிடித்தும் தெளிந்தேன்' (பக்கம்–19).

'ஊரைப் பிரிந்து, உறவை பிரிந்து, நாட்டைப் பிரிந்து அந்நிய தேசத்தில் அகதி அந்தஸ்த்து பெற்றாலும் தமிழ்மொழியுடன் உறவாட இயலாமல் பட்ட அவதி கொஞ்சமல்ல. கார்த்திகை மாதம் 27 ம் திகதியில் வரும் மாவீரர் நாள் மிக முக்கியமானதாக இருந்தது. அது தமிழ் மக்கள் அனைத்து ஊர்களிலிலுமிருந்து  வந்து ஒன்று சேரும் நாளாகும்' (பக்கம்–28) என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்.

" "றினோஷ் உடல் ...இன்று வரைக்கும்  பாடல் ஒலிக்காமலேயே அங்குமிங்கும் ஆடிக் கொண்டுதான் இருக்கிறார் (பக்கம்–46)." நடராஜபெருமானின்; தில்லைத் தாண்டவ நடனமில்லாவிடில் பூமி தன்னைத்தான் சுற்றிச் சுழன்றபடி சூரியனையும் சுற்றிக்கொள்ளாவிடின் உலகம் இயங்குமா?

"இயற்கையோடு இணைந்து நீரோடையில் இளங்காற்றில் இயற்கைச் சூழலில் சுற்றுலாச் செல்வதனையே றினோஷ் விரும்பினான். "இயற்கையின் அரவணைப்பு பெரும் காருண்யமாக அமைந்தது"(பக்கம்–61).

"றினோஷ் ஏன் இன்னும் ஒரு சொல்லைக் கூடச் சொல்லவில்லை என்பது தாயின் கவலை. "பராசக்தி எங்கேயடா பேசினார்" என்ற பராசக்தி பட வசனம் ஞாபகம் வருகிறது.கடவுள் கதைப்பதில்லை. அதனால்தான் மக்கள் ஆண்டவனிடம் தமது குறைகளை அச்சமின்றி தெரிவிக்கின்றனர்.

"தனக்குப் பிடித்தமான உணவுகளை எங்கே கண்டாலும் கட்டுப்பாடுகளற்று உடனடியாக எடுத்து உண்டு விடுவார்" (பக்கம்–71). இது மைதிலியின் முறைப்பாடு. பிட்டுக்கு மண்சுமந்ததும் பிரம்படிபட்டதும் கண்ணப்பரின் இறைச்சி உண்டதும் இயல்புதானே.

தந்தை றெஜியின் வேலைத் திறப்பைக் காணாமல் தேடிக் கொண்டிருக்க அதை கேட்ட கணத்தில் றினோஷ் அதனைக் கண்டுபிடித்துக் கொடுத்தார் என்ற அபார அறிவை அவதானிக்கின்றனர்(பக்கம்–79).

றினோஷை ஒரு முறை குழந்தை நல மருத்துவரிடம் காட்டினர். "றினோஷுக்கு ஓட்டிசம் ஸ்பெக்ரம் டிஷ்சோடர் இருக்கிறது" என வைத்தியர் கூறினார்.

"றினோஷின் உடல் வளர்ச்சி மற்றைய பிள்ளைகளை போல இருக்கும். ஆனால் மூளை வளர்ச்சியில் அல்லது செயற்பாட்டு விருத்தியில் ஓரளவு பின்தங்கி இருப்பார். இக் குறைபாடு ஓட்டிசம் என அழைக்கப்படுகிறது. முந்தைய காலத்தில் நூறில் ஒரு பிள்ளை என்ற விகிதத்தில் இக் குறைபாடு இருந்தது. ஐம்பத்தெட்டு பிள்ளைகளில் ஒரு பிள்ளை என்ற விகிதாசாரத்தில் அதிகரித்து கொண்டு வருகிறது. இக் குறைபாடு வருவதற்கான காரணம் என்ன என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை(பக்கம்–89)" என வைத்தியர் தெரிவித்தார்.

காரணம் கண்டறியப்படாத வரையில் கடவுளின் குழந்தை எனக் கூறுவதில் நியாயம் இருக்கிறதுதானே. றினோஷ் ஒரு சுதந்திர மனிதர். பஞ்சபூதங்களின் பிள்ளை. பிரபஞ்சபுத்திரன். மகிழ்வின் மையப் புள்ளி என நாம் கொண்டாடல் பொருத்தம் என்பது எனது கணிப்பு.

மைதிலி றெஜினோல்ட் "வாழ்க்கை புத்தகத்தைத் தலைகீழாகப் படித்துக் கொள்" என்று அன்றிலிருந்து காலம் என்னிடம் கட்டளையிட்டுவிட்டது (பக்கம்–92) எனத் தனக்குதானே கழிவிரக்கம் கொள்கிறார்.

வாழ்க்கைப் புத்தகத்தை எதிர்நீச்சல் கொண்டு சவால்களைச் சந்தித்து தலைகுனிந்து படித்தபடியால் தான் மைதிலி தலைநிமிர்ந்து வாழ்கிறார் என்பது எனது அனுமானம்.

தீரனியன் றினோஷின் திருவிளையாடல்களை மைதிலி அடுக்கிச் செல்கிறார்.

### திருவிளையாடல் -01

ஒரு நாள் மெழுகுதிரிச் சுவாலையை பிரமாண்டமானதாக்கிப் பார்ப்பதற்காக கையில் கிடைத்த கடதாசிகளையும் துணிகளையும் அதன் மேல் போட்டுவிட்டு சத்தமாக ரசித்து சிரித்துக்கொண்டிருந்தார்(பக்கம்–96).நெருப்பு ஒரு பஞ்சபூதம். எனவே றினோஷின் நண்பன். மெழுகுதிரி வெளிச்சம் போதாது எனத் தன் கைங்காரியத்தைக் காட்டி தனது நண்பனுடன் விளையாடியதில் என்ன தவறு இருக்கமுடியும்!

### திருவிளையாடல்-02

"'புத்தகங்கள் உடைகள் போன்றவற்றையும் அலுமாரியிலிருந்து வெளியே எடுத்து கத்தரிக்கோல் கொண்டு வெட்டிவிடுவார். அவை மட்டோடும் விடாமல் அறிக்கையாக பத்திரப்படுத்திய முக்கிய பத்திரங்கள்கூட றினோஷின் கண்களிலிருந்து தவறிவிடவில்லை. அவற்றைக் கிழித்தெறிவது அல்லது வண்ணச் சாயங்களோடு அலங்காரம் செய்வதையும் தனது பொழுது போக்காக்கினார்'(பக்கம்–134). அவரது உள் மனக் கேள்வி, ஞாயம் என்பது எனது வாதம். கதிரை மேசை வெளியே இருப்பது போலப் புத்தகங்கள் பத்திரங்கள் உடைகளும் வெளியே எல்லோருக்கும் பயன்பட வைக்காலந்தானே! எங்கே அலுமாரியில் உயரத்தில் ஒழித்துப் பத்திரப்படுத்தி அமர்ந்து கொள்ள சிறப்புரிமை ஏனென அவர் உருத்திரதாண்டவ அழிப்பு செய்ததில் என்ன தவறு! கடவுள் கணந்தோறும் செய்வதை றினோஷ் எப்போதாவது ஒருமுறை செய்தால் என்ன!

### திருவிளையாடல்-03

ஒரு நாள் தம்பி அனோஷ் றினோஷ் விளையாடிக் கொண்டிருக்க விட்டு விட்டு சமையலில் ஈடுபட்ட தாய் அவரைக் காணாமல் தவித்து "றினோஷ் றினோஷ்" என்று வீடு முழுவதும் கூவியபடி தேடினார். காணவில்லை.

"வெளியில் கடுங்குளிர். நிலத்தில் பெரும்பனி. எத்தனை வீதிகளில் இரண்டு கால்களால் மட்டும் ஓடித்தேட முடியும் " (பக்கம் –139). தாய் தவித்தாள். விவேகானந்தரின் வார்த்தை, 'உனக்குத்தேவையான வலிமையும் உதவியும் உன்னுள்ளேயே உள்ளன' என்பது மைதிலிக்கு வழிகாட்டியது.

அடுத்த வீட்டிலிருக்கும் திருமதி பெனடிக்றும் இருவருமாக தேடினர். காணவில்லை. "ஆ....ஆ....ஆ..." என றினோஷ் கூச்சலிட்டார். அடுத்த வீட்டுச் சோபாவில் சம்மாணமிட்டு குளிர்களி (ஐஸ் கிறீம்) சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

எவ்வாறு பூட்டியிருந்த வீடுகளிலிருந்து வெளியேறி அடுத்த வீட்டுக்குள் நுழைகிறார் என்பது அதிசயமாயிருந்தது. இரு வீட்டு கழிவறைச் சாளரமும் ஒழுங்கின்றித் திறக்கப்பட்டிருப்பதை அவதானித்து மிகவும் ஆபத்தான 30 சென்ரிமீற்றர் சீமெந்துத்தட்டில் பிடித்து சாளரத்தை திறந்து நுழைந்து சென்று தன் ஆவலைத் தீர்த்தார் றினோஷ்.

இயற்கை சட்டவிதி என்னவெனில் எல்லா இடமும் எல்லாப்பொருளும் எல்லோருக்கும் உரியதே. தனிச்சொத்துடைமையும் அதுசார் சட்டங்களும் பின்னாளில் ஏற்பட்டவையே. பிரபஞ்ச புத்திரனுக்கு இதுவென்ன கட்டுப்பாடு!

(அடுத்த இதழிலும்....)

# இன்னுமென்ன நடக்கணும்?

வ. வடிவழகையன்

*இன்னுமென்ன நடக்கணும்?*
*"அடிடா ஈரான்நீ... திருப்பியடி இஸ்ரேல்நீ"*
*கொம்புசீவி விடுவதனைக் குறியாகக்*
*கொண்டுள்ளோர்*
*போரில் கருகிவிழும்...,*
*போர்தின்று எச்சமிடும்...,*
*போரால் சிதிலமுறும்...,*
*போர்விளைத்த காட்சிகளைப் பெரிதாகக்*
*கொள்வதிலை*
*அடித்த அடிக்குமறு அடிதானே தீர்வென்னும்*
*படித்ததுபோல் இருக்கின்ற பலரொன்றை*
*உணர்வதிலை*
*யார்தான் அடித்தாலும் பார்வேந்தர் பதுங்கிடுவர்*
*பாவம்! அப்பாவிப் பதுமைகளே மாண்டழிவர்*
*குண்டுகளை அணிவகுப்பாய்க் கொண்டுவந்து*
*கொட்டுவதால்...*
*என்ன விளைந்திருக்கு...?*
*தாய்க்குத் தனயனிலை; தம்பிக்குத் தங்கையிலை;*
*நோய்க்கென்று போகுமிடம் நொடிவெடிப்பில் அங்கு இல்லை;*
*குழந்தை குடல்பிதுங்கி குற்றுயிராய்க்*
*கிடக்குநிலை*
*இருந்து அவர்கள் வாழ்ந்த இடம் எல்லாமே*
*புழுதிமலை*
*மருந்துகளோ அங்கு இலை; மனச்சாட்சி எங்குமிலை*
*ஈரானோ காஸாவோ*
*ஈழத்தின் அழுகுரலோ*
*எல்லாமே தசைகிழிந்து ரணமான வலி ஒலியே*
*உலகச் சட்டம்பி உலக்கையரை வளர்த்துவரும்*
*ஆதிக்க வெறித்தனமும், ஆயுதங்கள் பரீட்சிப்பும்*
*சாதிக்கச் சக்தியிலா #மைனர் சபையொன்றும்*
*போதித்து ஒன்றுசொல்லி புழக்கடையில்*
*ஒன்றுசெய்யும்*
*நீதிக்குப் புறம்பான நிட்டூர உலகொழுங்கும்*
*நீண்டு வளருமெனில் நிச்சயமாய் உலகழியும்!*
*இனியென்ன...*
*முன்நாள் யுத்தத்தில்.... வியட்நாமில்*
*பெண்குழந்தை*
*வீதிகளில் அம்மணமாய்...*
*பயத்தோடு ஓடியபோல்...*
*படமொன்று பார்த்தாலா போர் ஓய வழிபிறக்கும்?*



*பாதிக்கப்பட்ட அப்பாவிகளுக்காக*
*அனுதாபங் கொள்வதா?*
*எளியாரை வலியார் வருத்தினால்*
*வலியாரைத் தெய்வம் வருத்துமென்று*
*கறுவிக் கொள்வதா?*
*ஊழ்வினை வந்து உறுத்துமென்று*
*நியாயப் படுத்துவதா?*
*உலகச் சட்டம்பிக்கு*
*பாடம் படிப்பிக்க வேணுமென்று*
*கையை முறுக்கி*
*ஆத்திரந்தீர சுவரில் குத்திக்கொள்வதா?*
*என்னதான் செய்ய?*

*22.06.2025*

*20.06.2025.*

*-தன்றியுடன் முகநூலிலிருந்து...*

# முத்தின் வழிகாட்டி

*மதியழகன் விஷாந்தனா*

ஓர் அழகிய தீவு இருந்தது. அத்தீவை பொன்வண்ணன் எனும் அரசன் ஆட்சி செய்து வந்தான். அவன் நேர்மை தவறாத மக்களை நேசிக்கும் ஒரு மன்னன் ஆவான். இருந்தாலும் அவனுக்கு ஒரு கெட்ட நோக்கம் இருந்தது. அது தன் கண்படும் இடமெல்லாம் தன் இராச்சியம் ஆக இருக்க வேண்டும் என்பதாகும். அவனுக்கு ஓர் அழகிய மகள் இருந்தாள். அவளது பெயர் பூங்கொடி. அவள் சூதுவாது தெரியாத ஓர் அப்பாவிப் பெண்ணாக வளர்ந்தாள்.

அப்போதுதான் அத்தீவின் எல்லையில் இருந்த மலைவாழ் மக்கள் மன்னனைக் கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். மன்னன் அவர்களைப் புத்திசாதுரியமாகத் தோற்கடித்திருந்தாலும் அக்குழுவின் தலைவனான ரொஹான் என்பவன் மன்னருடன் சமாதானமாக நடந்து கொள்வது போல் பாசாங்கு செய்து அவரிடம் மன்னிப்பு வேண்டினான். இதை அறியாத மன்னன் அம் மலையகத்தையும் தனதாட்சிக்குக் கொண்டு வரவேண்டும் எனும் ஆசையால் அவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்று நன்கு உபசரித்தான். சில வாரங்களிற்குப் பின்னர் மன்னன் பொன்வண்ணன் தூங்கிக் கொண்டு இருந்த போது மன்னனை ரொஹான் எழுப்பினான். மன்னனும் அரைத்தூக்கக் கலக்கத்துடன் அவன் பின்னால் சென்றார்.

ரொஹான் அவரை ஓர் அடர்ந்த காட்டிற்கு அழைத்துச் சென்றான். மன்னனைத் தனது வாளால் சிரச்சேதம் செய்ய வரும்பொழுது ஆபத்தைப் புரிந்து கொண்ட மன்னன் அங்கிருந்து தப்பியோடி ஒரு குகையில் மறைந்து கொண்டான்.

ரொஹானும் மன்னனைத் தேடிப் பார்த்தபின் சலிப்போடு அரண்மனைக்குச் சென்றான். மறுநாள் காலையில் அனைவரும் மன்னனைத் தேடினர். ஆனால் மன்னனையோ காணவில்லை. இதையறிந்த ரொஹான் சிரித்த வாறு "பொன்வண்ணன் இறந்து விட்டான். இனி இத்தீவிற்கு நானே மன்னன். நாளை காலை பூங்கொடிக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்படும்" என்றான். இதைக் கேட்ட மக்கள் அதிர்ச்சியடைந்தனர். கலக்கத்துடன் ஒருவருக்கொருவர் பூங்கொடிக்கு வழங்கிய தண்டனையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

அரண்மனையில் இருந்த பூங்கொடி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டாள். அவளுடன் அவளது நாய்க்குட்டியும் அடைக்கப்பட்டது.

அவளுக்கும் அவளது நாய் பூஜாவிற்கும் அனைவரும் உண்டபின் மிகுதி உணவே கொடுக்கப்பட்டது. இதனால் அவள் மிகவும் கவலையடைந்தாள். இரவு நேரத்தில் எப்படியாவது தப்பிக்க வேண்டும் என்று தீர்மானித்தாள். எனினும் அவள் "எனக்கு எட்டு வயதுதானே ஆகிறது. எப்படி இக்கொடிய சிறைச்சாலையிலிருந்து தப்பிப்பது" என்று குழம்பினாள். சிறிது நேரத்தில் அவளது நாய் பூஜா அவளுடைய சட்டையைப் பிடித்து இழுத்து வந்து ஓர் இடத்தைக் காட்டியது.

அவளுக்கோ ஆச்சரியம். பூஜா சிறைச் சாலையில் யாருக்கும் தெரியாத இடத்தில் ஒரு பள்ளத்தைத் தோண்டி இருந்தது. அவள் தப்பிக்க வழி கிடைத்தது என நினைத்தாள். பகல் நேரத்திலும் இரவு நேரத்திலும் தரும் உணவைச் சேமித்தாள். பின் அனைவரும் தூங்கும் நேரத்தில் அப் பள்ளத்தினூடாக அவளும் பூஜாவும் உணவுடன் தப்பிச் சென்றனர்.

மறுநாள் காலையில் இதை அறிந்த ரொஹான் கோபத்துடன் காவலர்களைத் திட்டினான். அவர்கள் காட்டிற்குப் பூங்கொடி யைத் தேடிச் சென்றனர். துரதிஷ்ட வசமாக மன்னன் அவர்களிடம் சிக்கிக் கொண்டான். மன்னனை மக்கள் காணக்கூடாது என்பதற்காக அவனது முகத்தை மறைத்துக் கட்டி அரண்மனைக்குக் கொண்டு சென்றனர். ரொஹானோ "சிறிய முயலை தேடினால் பெரிய யானை அல்லவா கிடைத்துள்ளது"

என மகிழ்ந்தான். பொன்வண்ணனைக் கொலை செய்தான். பின் காவலர்களிடம் "இனி அந்தப் பூங்கொடியைத் தேட வேண்டாம். அவளும் சிறிது நாளில் அக்காட்டிலேயே இறந்து விடுவாள். பின் இவ்விராச்சியத்தை நானே ஆட்சி செய்வேன். எனது வம்சம் இந்நாட்டை ஆட்சி செய்ய எனக்கு ஒரு வாரிசு வேண்டும்" எனக் கூறினான்.

அயல் நாட்டின் இளவரசி மரியாவைத் திருமணம் செய்து கொண்டான். காட்டிலேயோ பூங்கொடிக்கு அதிஷ்டம். அங்கு ஒரு கோவில் இருப்பதைக் கண்டாள். அவள் அங்கு சென்று கண்ணீர் விட்டு அழுதாள். இவளின் அழுகைச் சத்தம் அக்கோவில் பிராமணருக்குக் கேட்டது. அவர் முழுவிபரத்தையும் அறிந்தார். அவர் "நானே உன்னை வளர்க்கிறேன்" எனக் கூறினார்.

சந்தோஷத்தில் நெகிழ்ந்தாள் பூங்கொடி. அப்படியே வளர்ந்தாள். பூஜாவும் வளர்ந்தது. பூங்கொடி யாரிற்கும் அடையாளம் தெரியாத வாறு வளர்ச்சியிலும் தோற்றத்திலும் மிகவும் பேரழகியாக மாறியிருந்தாள்.

அவளை வளர்த்த பிராமணர் முதுமை யால் இறந்தார். பூங்கொடி அவரின் இறுதிக் கிரியைகளை அவரது மகளாக இருந்து செய்து வைத்தாள். அவளுக்கு அப்போது பதினைந்து வயது. தனது தந்தையைக் கொன்றவர்களைப் பழிவாங்க நினைத்தாள். அப்போது பூஜா தன் வாயில் இருந்த சிறிய பெட்டியை அவளிடம் கொடுத்தது.

அது அந்தப் பிராமணர் பல்வேறு யாகங்கள் செய்து அச் சக்தியால் உருவாக்கிய சக்தி வாய்ந்த மந்திரமுத்து. அதை வைத்துக் கொண்டுதான் அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என நினைத்த அவள் பொருள் பண்டங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். முத்தை உருட்டிய வாறு அதன் பின்னால் சென்றாள். அவள் ஒருமுறை உருட்டியபோது அவ்விடத்திலேயே அம் முத்து அசையாது நின்றது. நிமிர்ந்து பார்த்தாள். அங்கே ஓர் இளைஞன் வருவதைக் கண்டாள். அவனிடம் "நீங்கள் யார்?" என வினாவினாள்.

அவன் "நான் பவளத்தீவின் அரசரான ரொஹான் மற்றும் மரியாவின் மகன் ரொபர்ட் ஆவேன். நீங்கள் யார்?" என வினாவினான்.



அவள் இதைக் கேட்டு கோபம் அடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. அவள் தன்னை நந்தினி என அறிமுகம் செய்தாள். "நானும் பவளத்தீவிற்குத் தான் சுற்றுலா செல்லவிருக்கின்றேன். நானும் உங்கள் விருந்தினராக உங்களுடன் வர முடியுமா? எனக் கேட்டாள்." அவனும் "அது என் அதிஷ்டம் வாருங்கள்" என்றான்.

அவன் அவளை பவளத்தீவிற்கு அழைத்துச் சென்றான். அவளும் பூஜாவும் முத்துடன் அரண்மனைக்கு வந்தனர். அப்பொழுது ரொஹான் பூஜாவைப் பார்த்து சந்தேகம் அடைந்தான். அவளைப் பார்த்து "நீ பூங்கொடியா?" எனக் கேட்டான். அவள் பதறாது "இல்லை அரசே நான் நந்தினி. இது என் நாய்க்குட்டி பட்டு. நான் அயல் நாட்டில் வசிக்கும் சுற்றுலாப் பயணி. இத்தீவைப் பற்றிக் கேள்விப்பட்டேன். ஆகையால் இங்கு சுற்றிப் பார்க்க வந்தேன்" எனக் கூறினாள். ரொஹானும் இதை நம்பி அவளை அரண்மனையில் தங்க அனுமதித்தான். அவள் தினமும் தன் இனிய பேச்சால் அரசனையும் அவன் மகனையும்

கவர்ந்தாள். இதனால் அவர்களுக்கு அவள் மேல் அதிக நம்பிக்கை ஏற்பட்டது. இருந்தாலும் அவள் வெறி அடங்கவில்லை. அவள் ராஜகுமாரன் ரொபர்ட்டைக் கொல்ல நினைத்தாள். அதற்காக வேலைக்காரி ரொபர்ட்டிற்காகச் சமைத்த உணவில் மிகவும் நச்சுத் தன்மை வாய்ந்த மூலிகைச் சாற்றைக் கலந்தாள். அது இனிய மணம் பரப்பியது. அந்த மணத்தால் கவரப்பட்ட ரொஹான் மகனுக்காகச் செய்த உணவைத் தான் உண்டான். இதனால் அவன் அவ்விஷத்தின் பாதிப்பால் இறந்தான். இதை அறிந்த அவன் மகன் மிகவும் கவலையடைந்தான்.

அப்போதுதான் ரொஹானின் படுக்கைக்கு அருகில் உள்ள கடிதத்தைப் பார்த்தான். அதில் எழுதப்பட்டிருந்தவற்றைப் பார்த்து அதிர்ச்சியடைந்தான். அந்தக் கடிதத்தில் ரொஹான் இவ்வாறு எழுதியிருந்தான். "இரவு நான் உண்ட உணவில் விஷம் கலக்கப்பட்டது. அப்போது அதை நான் அறியாது அவ்வுணவை உண்டு விட்டேன். அப்போது அவ்வறைக்கு நந்தினி வந்தாள். அவள் என்னிடம் நான்தான் பூங்கொடி. உன்னைப் பழிவாங்கவே வந்தேன். நான் அனுபவித்த அதே துன்பத்தை உன் மகனையும் அனுபவிக்கவைப்பேன் எனக் கூறினாள். இதனால் மிகவும் கவனமாக இரு. இப்படிக்கு உன் தந்தை" என எழுதியிருந்தது.

இதனால் கோபமடைந்த ரொபர்ட் பூங்கொடியிடம் "என் தந்தையை அநியாய மான முறையில் கொன்றுள்ளாய். இது ஒரு இராஜகுமாரிக்கு தகுமா?" எனக் கேட்டான். அவளோ "என் தந்தையை என்னிடம் கூடக் காட்டாமல் கொன்ற உன் தந்தைக்கா நீதி கேட்கின்றாய்?" எனக் கேட்டாள்.

கோபமடைந்த அவன் "நாளை நடக்கும் போரில் என்னிடம் வெற்றி கொள்ள உன்னால் முடியுமா? உன் படையில் யார் உள்ளனர்? நீயும் உன் பட்டுவும் தானே" என்று நகையாடினான். சிரித்த அவள் அனைவரிடமும் "யார் என்னுடன் வருவீர்கள்" எனக் கேட்டவுடன் அரண்மனையில் இருந்தும் தீவில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்தனர். இதைக் கண்ட ரொபர்ட் "மக்களே நீங்கள் புத்தி கெட்டவர்களா? போயும் போயும் ஒரு பெண்ணின் படைக்கு செல்கிறீர்களே. வெட்கமாகவில்லை?" எனக் கேட்டான்.

அவர்கள் "உன்னைப் போல் அநீதியின் பக்கம் இருந்து வெற்றி கொள்வதை விட நீதியின் பக்கம் இருந்து இறப்பதே மேல்" என்றனர். இதைக் கேட்ட அவன் தனது தாயாரின் நாட்டிலிருந்த மக்களை அழைத்தான். அவர்களும் வந்து ரொபர்ட்டின் படையில் சேர்ந்தனர்.

போர் நடக்கத் தொடங்கியது. பூங்கொடியின் படை அவர்களைத் தோற்கடித்தது. அப்போது ரொபர்ட்டிற்கும், பூங்கொடிக்கும் இடையில் நேருக்கு நேர் சண்டை துவங்கியது. பூங்கொடி தனது வாளால் அவனது வாளை வீழ்த்தினாள். அவனைக் கொல்ல வரும் போது அவள் திடீரென நின்றாள். தந்தை செய்த தவறுக்கு இவனைக் கொல்வது முறையல்ல என நினைத்த அவள் அவனை சிறைச்சாலையில் அடைத்து வைத்தாள்.

மறுநாள் அவள் அவனிடம் சென்று "உன் தந்தை செய்த தவறுக்கு உன்னைக் கொல்வதெனின் உங்களுக்கும் எங்களுக்கும் என்ன வேறுபாடு. என் கணக்கு முடிந்து விட்டது. நீ இங்கிருந்து உன் தாயாரின் நாட்டிற்குச் செல்" என்றாள். அவனும் சென்றான்.

அவர்கள் நாடு மீண்டும் செல்வச் செழிப்புடனும் மகிழ்ச்சியுடனும் காணப்பட்டது. அவளும் சொர்க்கபுரியின் இளவரசனான வேல்மாறனை திருமணம் செய்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தாள்.

*விபரம் :*
*பெயர் :- மதியழகன் விஷாந்தனா*
*முகவரி :- சுதுமலை கிழக்கு மானிப்பாய்*
*தொலைபேசி இலக்கம் :- 0772213926*
*பாடசாலை :- யா/கொக்குவில் இந்து கல்லூரி*
*தரம் :- 7 (2021 இல் எங்கள் முற்றம் இதழுக்காக அனுப்பிய கதை)*

# நூறாண்டு

*விநாயகர் சாந்தை*
*மு. ரமேஷ்*

*கருந் தோலணிந்த*
*செம் மஞ்சள் பழமே*
*கற்பக தருவின் கருமூலமே*
*காலம் மாறி  உனை*
*காணாது விட்டதுவோ?*

*உயிர்ச்சத் தனைத்தும்*
*உன்னுள்ளே, வேறும்தான்!*
*இருந்தும்*
*விலக்கி வைப்பதேனோ?*

*தடுக்கில் உலர்ந்து*
*மடித்து அடுக்கி வைத்து*
*எடுத்துத் தேங்காயுடன்*
*மிடுக்காய் உண்ட சுவை*
*இளையோர் அறிவரோ?*

*உச்சி முதல்*
*உள்ளங்கால் வரை*
*அத்தனையும் எமக்கு*
*முத்தாய் பயனாக!*

*வாழ்ந்தாலும் நூறாண்டு*
*வீழ்ந்தாலும் நூறாண்டென*
*வானுயர வளர்ந்திடும்*
*வரலாறு கொண்டநீ*
*அழிவின்றி வாழியவே!*




# புத்தம்புதுப் புவி

*பேரி. வேந்தன்*
*கனடா*

*கொள்ளிக்குண்டுகள் மண்ணைத் துளைக்க*
*அள்ளிக்கொண்டுபோன நள்ளிரவில்*
*கொள்ளைபோன கனவுக் கோட்டைகள்*
*வெள்ளி பூக்க விடிவென்றிருக்க*
*சாக்குருவி கேவிக் கத்த*
*பிணத்தின் நிண நெடில் மூக்கரிக்க*
*குளம் குளமாய்க் கண்ணீரும் குருதியும்*
*குவலயம் பார்த்திருக்க*
*தமிழ்க்குடி எரிந்திற்று!*

*ஆதிக்க அரசின் அனல் கரம்*
*அழித்தொழித்த மமதையில்*
*வெற்றிக் கொண்டாட்டம்*
*பத்து கோடித் தமிழரும்*
*வெட்கித் தலை குனிந்தார்*

*ஓடேந்தி வாக்குப் பிச்சை கேட்டு*
*நாடாளுமன்றத்தில்*
*நா குளறக் கத்தும்*
*நாற்காலிச் சூடேற்றிகள்*
*தன்குடி வளர்த்தார்*
*நம்பியோரைத் தவிக்கவிட்டார்!*

*கொன்றவனுடன் கூட்டு வைத்தார்*
*நல்லாட்சி என்றார்  தீர்வென்றார்*
*பொதுநலமென்றவர் சுயநலம் கொண்டார்*
*காணாமல் போனவரைக் கண்டதுமில்லை*
*கண்கலங்கி நிற்பவர்க்குக்  கை கொடுக்கவுமில்லை!*

*வந்தவன் தாய்மண்ணைப் பங்கு போட*
*கைலாகு கொடுக்கின்றார்*
*மாற்றாட்சியில் மறுமலர்ச்சி தெரிய*
*கையூட்டுக் கிடைக்காத கவலை*
*இன்னும் இன்னும் இவர்களை நம்புவதோ?*

*போர் போதும் புழுங்கியது காணும்*
*புத்தம்புது புவி சமைப்போம்*
*ஏற்றத் தாழ்வற்ற சமத்தவம் காப்போம்*
*ஏற்றம் பெறுமுலகை வெற்றி கொள்வோம்!*

*நன்றி  : வளரி வைகாசி 2025*

# இலங்கையில் தமிழரும் தமிழும்

*அழ.பகீரதன்*

வரலாற்று நோக்கில் இலங்கையின் ஆதியில் பழங்குடியினராக நாகரும் இயக்கரும் இருந்திருக்கின்றனர். நாகர் தமிழராக கருதப்பட்டதுடன் முதலில் புத்தர் வந்து இவர்களை பௌத்தராக மாற்றினர் என வரலாறு கூறும். தமிழ் பௌத்தம் தமிழகத்தில் நிலவிய காலத்தில் ஈழத்திலுள்ள தமிழரும் பௌத்தராக இருந்துள்ளனர். நைனாதீவு என அழைக்கப்படும் நாகதீவு, சம்பில்துறை என அழைக்கப்படும் ஜம்புகோளபட்டினம், மாதகல், கந்தரோடை போன்ற இடங்கள் அவ்வகையில் கொள்ளலாம். தொல்லியல் ஆய்வுகள் மேலும் நிகழும்போது தமிழர் தொன்மை மேலும் துலங்குவதோடு, சிங்களமும் தமிழுக்கு அந்நியமில்லை, திராவிட தாக்குறவு, மொழிக்கூறுகள் சிங்களத்திலும் உள்ளது என்ற உண்மை புலப்படும்.

நாயன்மாரும் ஆழ்வாரும் சைவம் வளர்த்த காலத்தில் ஈழத்திலும் தமிழர் சைவ சமயத்தைக் கைக்கொண்டனர். புத்தர்களாகிய சிங்களவர் தென்பகுதியையும் மலைப் பகுதியையும் கொண்டிருக்க, சைவர்களாகிய தமிழர்கள் கிழக்கு, வடக்கு, வடமேற்குச் சமவெளிகளைத் தமதாக்கினர்.

இலங்கைத் தீவானது மூன்று அலகுகளாக பிரிந்து அரசுகளாக பரிணமித்திருந்தன. தெற்குக் கரையோரத்தை ஆட்சிசெய்த கோட்டை சிங்கள அரசு, மத்திய மலைப்பிரதேசம் கண்டி அரசு, பொலநறுவை அரசு சோழர்காலத்தில் தமிழ் அரசாக இருந்தது. பிற்காலத்தில் தமிழ் அரசு சுருங்கி யாழ்ப்பாண இராச்சியமானது. போர்த்துக்கேயர் 1505 இல் இலங்கையை கைப்பற்றினர். கண்டி அரசு ஆங்கிலேயரிடம் வீழும்போது அதன் ஆட்சி மொழியாக தமிழ் மேம்பட்டிருந்தது.

சிங்கள அரசின் ஆள்பகுதிகளை ‘இரட்டை’ என அழைத்தனர். தமிழரின் ஆள்பகுதிகளை ‘வன்னிமை’ என அழைத்தனர். சிங்களவர் உட்பகுதிகளை ‘கோறளை’ என்றும் தமிழர் உட்பகுதிகளை ‘பற்று’ என்றும் அழைத்தனர். ஆங்கிலேயர் முழு இலங்கையையும் கைப்பற்றியபின் ஐந்து மாகாணங்களாக பிரித்து ஆண்டனர். இன்று ஒன்பது மாகாணங்கள் உருவாக்கப்பட்டு ஒற்றையாட்சியாக மாற்றப்பட்டது.. வடக்கு கிழக்கு மாகாணங்கள் இன்று தமிழ் மக்களால் தமிழர் தாயகமாக கொள்ளப்படுகின்றன.

ஆங்கிலேயரால் தேயிலைத் தோட்டத்திற்கு தமிழகத்திலிருந்து வரவழைக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர் மத்திய மாகாணத்தில் வாழ்கிறார்கள். அவர்கள் இன்று மலையகத் தமிழர் என அழைக்கப்படுகின்றனர்.

இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தில் இன்றைய நிலையை நோக்குவோம்.

அன்னியராட்சிக் காலத்தில் அச்சியந்திர வருகையின் பின் தமிழ் வளர்த்த மூதறிஞர்களில் தமிழகத்திற்கும் முன்மாதிரியாக பலர் இருந்திருக்கிறார்கள். தமிழ்த்தாத்தா தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர், விபுலானந்தர் போன்ற பல அறிஞர்கள் இருந்திருக்கின்றார்கள். இருபதாம் நூற்றாண்டில் முன்னணியில் நிற்கும் பேராசிரியர்களாக க. கைலாசபதி, சி. சிவத்தம்பி ஆகியோர் திகழ்ந்திருக்கிறார்கள். கிழக்கிலங்கையில் எம் ஏ. நுஃமான், மௌனகுரு முக்கியமானவர்கள்.

யாழ்ப்பாணம் என்பதன் அடையாளமாக ‘கந்தசட்டிக் கலாசாரம்’ என்றே பெரும்பாலும் அறிஞர்கள் குறிப்பிடுவர். ஆயினும் அன்றைய காலத்தில் உயர்சாதியினரிடம் இருந்துவந்த கலாசாரம் தான் அது. நாட்டார் தெய்வங்களை வழிபட்டுவந்த ஒடுக்கப்பட்ட மகளிடையேயும் இன்று இவ்வித கலாசாரம் ஓங்கி கந்தசட்டி, கௌரிவிரதம், வளைகாப்பு போன்றனவும் அதிகமாகவே அவர்களிடையே ஊடுருவியுள்ளது. தமிழ் சமய வழிபாட்டு முறைமையான ‘மடை’ அதாவது ‘படையல்’ வைக்கும் வழிபாட்டு முறையும் பூசை செய்வதற்கு அவரவர் சமூகத்தில் பூசாரி என ஒருவரை கொள்ளும் முறையும் முற்றாக மாறி பிராமணிய மயப்பட்டு பூநூல் தரித்த குருக்கள் செய்யும் பூசையை ஏற்றுக்கொள்ளும் வகையில் நாட்டுப்புறத் தெய்வங்களும் பெருந்தெய்வ வழிபாட்டுமுறைக்குள் ஈர்க்கப்பட்டு தமிழர் சமயம் என்பதுவே மாறிவிட்டது எனலாம்.

பண்பாட்டு ரீதியில் திருமணம் அனேகமாக டாம்பிகமாக இல்லாமல் பாரம்பரியம் சார்ந்தே நிகழ்ந்து வந்தது. போருக்குப் பிந்திய நகர்மய வளர்ச்சிப்போக்கு புலம்பெயர் தமிழ் மக்களின் ஏகோபித்த அனுசரணையுடன் கவர்ந்திழுக்கும் திருமண மண்டபங்களை உருவாக்கிய பெரு மாற்றமாக வடமொழி உச்சாடனங்களுடன் அம்மி

மிதித்து அருந்ததி காட்டும் வழக்கு எல்லோர் மத்தியிலும் பெரு வழக்காகிவிட்டது.

"இலங்கைத் தமிழ் நன்றாக இருக்கிறது. செந்தமிழில் பேசுகிறார்கள். இலங்கைத் தமிழ் கேட்க இனிமையாக இருக்கிறது. உங்கடை பேச்சைக் கேட்க ஆசையாக இருக்கிறது" என்று தமிழ்நாட்டு நண்பர்கள் குறிப்பிடுவர். 'இலங்கைத் தமிழ்' எனப் பொதுவாகக் கூறும் தமிழ் முற்றுமுழுதாக ஒற்றைத் தன்மை கொண்டதல்ல. அது பல கூறுகள் கொண்டது. வேறுபாடுகள் கொண்டது. யாழ்ப்பாணத் தமிழ், மட்டக்களப்புத் தமிழ், மலையகத் தமிழ், கொழும்புத் தமிழ் என வட்டார மொழி வழக்காறுகள் கொண்டது தான் இலங்கைத்தமிழ். பேச்சு மொழிசார்ந்து மட்டுமல்லாது இந்தவேறுபாடு தமிழர் என்று குறிப்பதிலும் உள்ளது. சாதாரணமாக மக்கள் பேசும்போது யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், கொழும்புத் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லீம் (தமிழ் பேசும் முஸ்லிம்கள்) எனக் குறிப்பிடுவதுண்டு. பிறப்பத்தாட்சிப் பத்திரத்தில் இனம் என்ற இடத்தில் இலங்கைத் தமிழர், இந்திய வம்சாவழித் தமிழர் என்றவாறாக குறிப்பிடுவர். இத்தகைய வேறுபாடு பிரதேச வேறுபாடுகள் என்றால் இன்னும் கூறுபட்டு சாதிய படிமுறையும் இலங்கைத் தமிழர் மத்தியில் வேரூன்றியுள்ளது. 1966 ஒக்ரோபர் எழுச்சி எனக் குறிப்பிடப்படும் சாதியத்திற்கெதிரான போராட்டம் இலங்கையில் வீச்சுப்பெற்றமையால் ஒடுக்கப்பட்டோர் பொதுவெளியில் சாதி ரீதியில் ஒடுக்கப்படுவதில்லை என்றாலும் சாதி என்பது இன்றும் தொடரும் ஒரு ஒடுக்குமுறையாகவே உள்ளது.

யாழ்ப்பாணத் தமிழரையும் இடம்சார்ந்தும் அவர்களது பண்பாடு சார்ந்தும் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று யாழ்ப்பாண நகர் சார்ந்த பகுதி நல்லூர், திருநெல்வேலி. இரண்டு: வலிகாமம் தெற்கு சுன்னாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி, மூன்றாவது தென்மராட்சிப் பகுதி– சாவகச்சேரி, கச்சாய், பச்சிலைப்பள்ளி உட்பட்ட பகுதிகள், நான்காவது வடமாராட்சி ஐந்தாவது தீவுப்பகுதி. இவ்வாறான பாகுபாடுகள் இளையோர் மத்தியில் அருகிவருகின்றது எனக் கொள்ளலாம்.

யுத்தகாலத்துக்கு முற்பட்ட காலங்களில், இவை ஒவ்வொன்றும் உப பண்பாட்டு வட்டங்களென்று கூறத்தக்களவுக்கு வாழ்க்கை நடைமுறை வேறுபாடுகளைக் கொண்டது. பேச்சுவழக்கு முறைகளிலும் வேறுபாடுகளைக் கொண்டது.

இவ்வாறு நுண்ணிதாகவும் வெளித் தெரிகின்றவகையிலும் மாறுபாடுகளையும் வேறுபாடுகளையும் கொண்ட குழுமத்தினர்களை ஒன்று சேர்த்தே இலங்கைத் தமிழர் என்ற பெருவட்டத்துக்குள் அடையாளப்படுத்தி அடக்குகின்றோம்.

இன்று தமிழ் இலக்கிய பரப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்கம், தேசிய கலை இலக்கியப் பேரவை, யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், கிளிநொச்சி தமிழ்ச்சங்கம், திருமறைக் கலாமன்றம் போன்ற பல்வேறு அமைப்புகள் தமிழையும் தமிழரையும் மேன்மையுறச் செய்யவென கலை இலக்கிய பண்பாட்டு விழிப்புணவர்வை ஏற்படுத்தும் விதமாகச் செயற்படுகின்றன.

ஆரம்பகாலத்தில் ஈழநாடு எனும் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் வெளிவந்து தமிழ் மக்களிற்கான அடையாளமாகத் திகழ்ந்தது. இன்று அந்த பத்திரிகை மீண்டும் வெளிவருவதோடு உதயன், வலம்புரி, யாழ் தினக்குரல்,காலைக்கதிர் என ஐந்து பத்திரிகைகள் யாழ்பாணத்திலிருந்து மட்டும் வெளிவருகின்றன. தாயகம், கலைமுகம், ஜீவநதி, சிரித்திரன், எங்கட புத்தகம், மகுடம், ஞானம் போன்ற பல இதழ்களுடன் இன்னும் பல இதழ்கள் புதிதாக வரத்தொடங்கியிருக்கின்றன.

இலங்கையில் 15 பல்கலைக்கழகங்களில் நான்கு பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறை அமைந்துள்ளது. இரண்டு பல்கலைக்கழகங்களில் முனைவர் பட்டம் வரை தமிழ் கற்பிக்கப்படுகின்றது. உள்வாரி வெளிவாரியாக படிக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. எல்லாப் பல்கலைக்கழங்களிலும் மொழித்திறன் சார்ந்த தமிழ் எல்லா மாணவர்களுக்கும் கற்பிக்கிறார்கள். அவ்வாறு கற்பித்தால் ஏன் தெருக்களில் அறிவிப்புப் பலகைகளில் தமிழைப் பிழையாக எழுதுகிறார்கள். அவ்வாறு எழுதப்படும் பலகைகள் ஏன் திருத்தப்படுவதில்லை. அச்சிடப்படும் நூல்களில் ஏன் எழுத்துப் பிழைகள், சொற்பிழைகள், வசனப் பிழைகள் மலிந்து காணப்படுகின்றன என்ற கேள்விகள் எழுகின்றன.

ஒரு காலத்தில் இலங்கை வானொலி அதன் தமிழ் ஒலிபரப்புக்காக பெயர்பெற்று விளங்கியது. தனியார் வானொலி, தொலைக்காட்சி என்பனவும் பல தோன்றியபோதும் தென்னிந்திய சினிமா, சின்னத்திரைத் தொடர்களை வழங்குவது ஆரோக்கியமான விடயமுமல்ல. தமிழும் பொதுத்தமிழாக அல்லாமல் அதுவும் யாழ்ப்பாண பேச்சு வழக்கை நிராகரித்து ஒருவகை பேச்சுத்தமிழில் அமைந்துள்ளமை பலரது விமர்சனத்திற்கு உள்ளாவதாக உள்ளது. செய்தியறிக்கைகளில் மட்டும் நல்ல தமிழ் கேட்கலாம். உருப்படியாகத் தயாரிக்கப்படுகின்ற நிகழ்ச்சிகளும் 'சுயத்தன்மை' அருந்தலாகவும் 'போலச்செய்தல்' வெளிப்பாடாகவும் திகழ்கின்றன.

வடமொழிப் பிரயோகம் கணிசமாகவே யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது. தமிழர்கள் என அழைக்கப்பட்ட எவரும் அதுபற்றிப் பெரிதாக அலட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை. அவர்கள்

தமது பிள்ளைகளுக்கு இடுகின்ற பெயர்கள் அனேகமானவை வடமொழி கிரந்த எழுத்துக்களை ஏற்றே அமைந்துவிடுகின்றன. இதற்கான காரணத்தை தெளிவாக அறிந்துகொள்ளமுடியவில்லை எனிலும் இதில் எண்சோதிடம், ஜாதகம் என்பனவும் அதிகமான செல்வாக்கைச் செலுத்து வதை மறுப்பதற்கில்லை. தங்களது பிள்ளைகளின் பெயர்கள் மோடியாக–ஸ்டைலாக அமையவேண்டும் என்பது மட்டுமல்லாது. பெயர்களில் 'சாதி தெரிந்துவிடுமோ' என்ற ஐயமும் தமிழ்ப் பெயர்களை மறுதலிக்கக் காரணமாக இருக்கலாம். இருபதாம் நூற்றாண்டின் முற்கூறுகளில் கந்தன், பொன்னன், சின்னான் போன்ற பெயர்கள் தாழ்த்தப் பட்ட மக்களைக் குறித்த பெயர்களாக இருந்தன என 'சாதியமும் அதற்கெதிரான போராட்டமும்' எனும் நூல் குறிப்பிடுகின்றது.

இன்று தமிழ் பள்ளிகளிலுள்ள தமிழ் மாணவர்களின் பெயர்கள் இப்படித்தான் அமைந்திருக்கும்., றிஷான், டியானா, திருஷா, விருஷா, றிசாந்த் என்றவாறாக இருக்கும். ஒரு பத்துவீதம் தமிழ்ப் பெயர்கள் இருக்க வாய்ப்புண்டு. ஆங்கில மோகமும் தமது பிள்ளைகளும் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லவேண்டும் என்ற உள்நோக்கமும் அவர்களது ஆள்மனதில் பதிந்துள்ளமையும் இத்தகைய பெயர்கள் வைப்பதற்குக் காரணமாக இருக்கலாம்.

சாதாரணமாக படித்த வாலிபர்களுடன் இவை பற்றி உரையாடியபோது அவர்கள் தமிழில் இவ்வாறு தமிழ், வடமொழி எனத் தாம் பிரித்துப் பார்ப்பதில்லை எனவும் எல்லாவற்றையும் நாம் தமிழாகவே ஏற்றுக்கொள்கின்றோம் எனவும் பதிலிறுத்தனர்.

யாழ்ப்பாணத்தில் தனித்தமிழில் எழுதும் முயற்சிகள் தமிழ்த்தேசிய போராட்டம் உச்சத்தில் இருந்த போது நிகழ்ந்தன எனினும் அவற்றை எந்தளவு தூரத்துக்கு மக்கள் ஏற்றுக் கொண்டனர் என்பது சிந்திக்க வேண்டியது. உதாரணத்திற்கு 'பேக்கறி' என்பதனை 'வெதுப்பகம்' எனவும் 'பாண்' என்பதனை 'வெதுப்பி' எனவும் மாற்றிய போதும் பெயர்ப்பலகை என்ற அளவுக்கு இன்றும் சில பேக்கறிகளில் 'வெதுப்பகம்' எனக் காணக்கூடியதாக இருந்தாலும் கூட உரையாடும்போது மக்கள் அவற்றை இயல்பாகப் பேசவில்லை. 'பாண்' என்றே அழைத்தார்கள். வங்கி என்பதனை வைப்பகம் என உரைத்தபோதும் மக்கள் நாவில் ஏற்கனவே பரிச்சயமான வங்கி எனும் சொல்லைப் புறந்தள்ள முடியவில்லை. 'மினிபஸ்'ஸினை ஆரும் 'சிற்றுந்து' என்று சொல்வதில்லை. பஸ்ஸை ஆரும் பேருந்து என அழைப்பதில்லை.

போருக்குப் பிந்திய காலத்திலும் கூட யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகை இத்தகை தனித் தமிழைப் பயன்படுத்திச் செய்திகளை பிரசுரித்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் வாசகர்கள் அவற்றை எவ்வளவுக்கு ஏற்றுக்கொண்டார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

எதையும் மேலிருந்து திணிப்பதன் மூலம் மாற்றிவிட முடியாது. நாம் சற்று நிதானமாக சிந்தித்துச் செயற்படுவது நன்மை பயக்கும்.

'ஒரு நிரந்தரப் பண்பாடு இன்னொன்றுடன் கலந்து ஒன்றாக அல்லது மற்றதாக அல்லது இரண்டும் கலந்து மாற்றங்களை உருவாக்கும்' என்ற கூற்று இங்கு நோக்கத்தக்கது. பண்பாட்டு மாற்றங்களுக்கு அப்பாற்பட்டு தற்போது பரவியிருப்பது நுகர்வுப் பண்பாடு. இது உலகமயமாதல், ஊடகமயமாதல் என்பன மூலம் வெளிவரும் வர்த்தக ரீதியான சாதனங்கள் பண்பாட்டை மாற்றும் கருவியாக காணப்படுகிறது.

இவ்வாறான இன்றைய இருபத்தொராம் நூற்றாண்டில் நாம் எவ்வாறு மாற்றங்களை எதிர்கொள்வது? தமிழையும் தமிழரையும் இலங்கையில் மேன்மையடைச் செய்ய என்ன செய்யலாம். இயலக்கூடிய வழிகளை நோக்குவோம்.

1. பாடசாலை மட்டத்தில் தமிழை செயற்பாட்டு மொழியாக கற்பிப்பதற்கான சூழலை ஏற்படுத்தல். பிழையற்றமுறையில் தமிழை எழுதுவதற்கும் கருத்தைச் சரியான முறையில் சொல்லக்கூடிய தொடர்பாடல் மொழியாக பிறமொழிக் கலப்பின்றி பேசக்கூடிய வகையில் மாணவர்களை உருவாக்கும் விதத்தில் மாணவர் மையக் கல்வி மூலம் தமிழ் வகுப்புகளைக் கொண்டுநடாத்துதல்.

2. அரங்கச் செயற்பாடுகளில் தமிழ் நாடகங்களை கிராம மட்டத்திலும் நகர மட்டத்திலும் கொண்டுசெல்லும் வகையில் பரவலாக்கல்

3. நூல் வாசிப்பு என்பதை இயக்கமாக முன்கொண்டு செல்லல். வீடுகள் தோறும் நூலகங்களை அமைக்கத்தூண்டல். கிராமங்கள் தோறும் நிறைவான பலதுறைசார் நூல்களைக் கொண்ட நூலகங்களை அமைத்தல்.

4. தமிழ் மூலம் தாய்மொழிக் கல்விமூலம் சிந்தனை செய்வதற்கும் அறிவியல் கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிப்பதற்கான பலதுறைகளையும் கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தல்.

5. பத்திரிகைகளை வாசிக்க சிறுவயதிலிருந்து தூண்டும் விதத்தில் பாடசாலைகளில் காலை வேளைகளில் பத்திரிகையை மாணவர்களைக் கொண்டு வாசிக்கச் செய்தல்.

6. திறன்தொலைபேசிகளில் தமிழில் பயன்படுத்தவும் தமிழில் தொடர்புகளைப் பேணவும் மாணவர்களை ஊக்குவித்தல்.

7. தமிழ் மொழி செம்மொழி எனும் உணர்வும் வேறெந்த மொழிகளிலும் இல்லாத அதன்

சொல்லாட்சியையும் வசன அமைப்புகளையும் சொல்விளையாட்டு போன்றவற்றினூடாக மாணவர்களிடம் கருத்தூன்றச் செய்தல்.

8. தமிழுடன் சிங்களத்திலும் புலமையைப் பெறுவதனூடாக தமிழ் நூல்களை சிங்களத்தில் மொழிபெயர்ப்பதும் சிங்கள நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதும் காலத்தின் தேவையாக உணர்ந்து செயற்படுதல். கொண்டும் கொடுத்தும் மொழியாற்றலை வளர்த்தல். இடைத்தொடர்பாக இருக்கின்ற ஆங்கில மொழியை இதன் மூலம் இரண்டாம்பட்ச நிலைக்குத் தள்ளுதல்

9. தமிழர் மத்தியிலுள்ள சாதிய மத வேறுபாடுகளைக் களைந்து தமிழரை அறிவார்ந்த பகுத்தறிவு சார்ந்த இனத்தவராக உருவாக்கும் விதத்தில் அகச் சாதி மணமுறையைத் தவிர்த்து கலப்புத் திருமணங்களை ஊக்குவித்து ஆரோக்கியமான மரபணு உடைய பிள்ளைகளை உருவாக்கும் வகையிலான மாற்றத்தை உருவாக்குதல்

10. தூய தமிழில் பெயரிடுவதை ஊக்குவிக்கும் விதத்திலான தமிழ் இயக்கம் ஒன்றைக் கட்டியெழுப்புவதுடன் தமிழில் கையெழுத்து எழுதுமாறு மாணவர்களை ஊக்குவித்தல், சிறுவயதிலிருந்து பழக்குதல்.

11. முற்போக்கு எண்ணங்கொண்டோர் திருமணச் சடங்குக்குப் பதிலாகத் திருக்குறளை ஓதி மூதறிஞர், கிராமத்தில் மூத்தோர் தாலி எடுத்துக்கொடுக்க அல்லது மாலை எடுத்துக்கொடுக்க மணம்புரிய தங்கள் பிள்ளைகளையாவது ஊக்குவிக்க வேண்டும்.

இவ்வாறான செயல் நோக்கில் தொன்மையான, செம்மொழியான தமிழை இயங்கு மொழியாக, ஆளுமை மிக்க மொழியாக, தொடர்பு மொழியாக, மனித நேய மொழியாக வளர்த்துச் செல்வதற்கு ஆளுக்குப் பத்துப்பேர் ஊருக்கு நூறு பேர் எனத் தமிழரை ஒன்றுபடுத்துவதன் ஊடாக மக்கள் இயக்கத்தினைக் கட்டியெழுப்புவதன் மூலம் தமிழும், தமிழரும் ஈழத்திருநாட்டில் ஏற்றம் பெறும் வகையில் செயற்படுவோம்.

# வள்ளியம்மை சுப்பிரமணியம்



வள்ளியம்மை சுப்பிரமணியம் (7 அக்டோபர் 1938 – 26 சூன் 2025) ஈழத்து எழுத்தாளரும், சமூக உணர்வாளரும், நெசவு ஆசிரியரும் ஆவார். இவர் இலங்கையின் பொது உடமை இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான கே. ஏ. சுப்பிரமணியத்தின் மனைவி ஆவார்.

சத்தியமனை நூலகத்தினை உருவாக்கியும் வாழ்வின் சந்திப்புக்கள் எமது காலையடி கிராமத்தின் அனுபவங்களை எழுதியும் எங்கள் இதயங்களில் நிறைபவர். மறுமலர்ச்சி மன்றமும் எங்கள் முற்றம் இதழும் அவரது நினைவுகளை மீட்பதோடு அஞ்சலியை தெரிவிக்கின்றோம்

*சிறுகதை*

# சீனியும் பாகற்காயும்

*என். கே. கஜரூபன்*

நேற்று வவுனியாவில் ஊரடங்கு தளர்த்தப்பட்ட நேரம் வவுனியா நகரில் எல்லாக் கடைகளிலும் மக்கள் அதிகமாகக் கூடியிருந்ததால், நகருக்குப் புறத்தே அமைந்துள்ள நீண்டகால வரலாற்றையுடைய வியாபார நிலையத்தில் சில பலசரக்குப் பொருட்கள் வாங்கச் சென்றிருந்தேன்.

735/= ரூபா கணக்கு எழுதிய துண்டு தரப்பட்டது. பணம் செலுத்தியதும் பொருட்கள் கைமாறின. வீட்டுக்கு வந்ததும், பொருட்களைச் சரிபார்த்த பொழுது உப்பு இரண்டு பைக்கற் 150/= ரூபாவுக்குப் பதிலாக 170/= ரூபா என்று , ரூபா 20/= அச்சிடப்பட்ட விலைக்கதிகமாக அறவிடப்பட்டிருந்தமை தெரியவந்தது.

ஆனால் இறுதியாக வாங்கிய மூன்று கிலோ சீனிக்கு கிலோவுக்கு (வணிகர்கள் தாங்களாக நிர்ணயித்த விலையான) 130/= ரூபா வீதம் ரூபா 390/= என்று முன்னர் கூறியிருந்தாலும், பணம் என்னிடம் அறவிடப்பட்டிருகாமை தெரியவந்ததும், நான் வாங்கிய பொருட்களுடன் மீண்டும் கடைக்குச் சென்ற பொழுது கடைக்காரரின் மகளும், மகனும், கடை உதவி பையனும் நின்றிருந்தார்கள்.

"உப்புக்கு அடித்த விலை 75/= ஆகவே இரண்டு பைக்கற் உப்பு 150/= ஏன் 170/= அறவிட்டீர்கள்?"

என நான் வினவியதற்கு

"விலையை அப்பா கவனிக்கவில்லை"

என்ற மழுப்பலான பதிலே கிடைத்தது. இப்பொழுது மகள் மட்டுமே கடையில் காசு மேசையில் இருக்கிறார்.

"விலையை அதிகரித்து விற்பது தவறு என்பதைத் தங்கள் அப்பா அறிவாரோ?"

மௌனம்.....!

"அதிக விலைக்கு விற்பவர்தானே என்று நானும் வராமல் இருந்திருக்கலாம். ஆனால் என் பெற்றோலை வீணாக்கி வந்தது இந்தச் சீனிக் காசைத் தரத்தான்"

ஐந்நூறு ரூபாவைக் கொடுக்கிறேன்.

கடைக்காரரின் மகள் 390 – 20 = 370 என அந்தக் கடைப் பெயரற்ற கடதாசித் துண்டில் எழுதி , மீதிப்பணத்தைக் கொடுக்கிறார்.

எதுவித நன்றி தெரிவிப்பும் இல்லை ....

வாகனத்தில் ஏறி வீட்டை நோக்கி விரைகிறேன். ஊரடங்குச் சட்டம் மீள அமுலாகும் நேரம் நிமிடங்களால் நெருங்கிக் கொண்டிருந்தது.

என் மனதில் எழுந்த மனச்சாட்சி என் முன்னால் தனியாக எழுந்து பக்கத்து ஆசனத்தில் அமர்ந்து கொண்டது.

"நீ ஒரு மடையன் !"

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"சும்மா கிடைத்ததை யாரும் விடுவானா?"

"அதற்காக...?"

"நீ அந்தக் கடைக்காரனை ஏமாற்றவில்லையே. அவன்தான் உன்னை உப்பிலே இருபது ரூபா அதிகமாக எடுத்து ஏமாற்றினான். விதிவசத்தால் சீனியை கடதாசித்துண்டில் எழுதாமலே 'மூன்று கிலோ சீனி' என்று கடையில் வேலை செய்யும் பொடியனிடம் சொன்னான். பணம் பெற மறந்துவிட்டான். இப்படியான ஏமாற்றுக்காரனுக்கு நாம் ஏன் பணம் செலுத்த வேண்டும்?"

"நீ சொல்வது ஒரு விதத்தில் சரி போல இருந்தாலும் பிறகு .... மூன்று கிலோ சீனி முடியும்வரை ஒவ்வொரு நாளும் நீயே இந்தச் சீனி காசில்லாமல் வாங்கியது தானே! என்று என்னைக் கொல்வாய்!"

எனது கருத்தோடு மனச்சாட்சி மௌனமாகிவிட்டது.

* * *

அப்பொழுது எனக்குப் பத்து வயது.

சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்துக்கு அருகிலுள்ள எங்கள் வீட்டிலிருந்து சூழவண்டான் குளத்தருகே உள்ள எங்கள் தோட்டத்திற்கு ஓடிச்

சென்றால் ஐந்து நிமிடம் , பாடிப் பாடி நடந்து சென்றால் பத்துப்பதினைந்து நிமிடங்கள் எடுக்கும்.

வீட்டிலிருந்து செல்லும் வழி முழுதும் அவதானித்துக் கொண்டே செல்லும் சிறுவயது ... மனதில் எந்தச் சலனமுமற்ற தூய அவதானிப்பு! இயற்கையை இரசித்தல்!



தோட்டத்திலிருந்து வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருந்தேன். வீட்டு ஒழுங்கையில் ஏறிவிட்டேன். பெரியபிள்ளை மாமி வீட்டார் இருந்த வீட்டின் பனை மட்டை வேலியில் வழமையாக நான் போய்வரும் பொழுது பார்த்த பாகற்காய் கிடக்கிறதா? என்று என் கண்கள் தேடின!

ஆம் கிடக்கிறது. இப்பொழுது அதன் நுனி சிவக்க ஆரம்பித்து விட்டது. இனியும் விட்டால் பழுத்துத் தானாக விழுந்துவிடும்.

"வீதிப்பக்கமாக வெளியில் தானே கிடக்கிறது. "

என்ற எண்ணமும் ,

"எங்கட பெரியபிள்ளை மாமிதானே ஒன்றும் சொல்லமாட்டா! "

என்ற தைரியமும் பத்து வயதுப் பாலகனான எனக்கு ,

"அந்தப் பாகற்காயை பிடுங்கிக் கொண்டுபோய் அம்மாவிடங் கொடுத்து பொரித்துச் சாப்பிட வேண்டும்"

என்று ஆசையைத் தூண்ட பாகற்காயுடன் வீட்டில் சேர்ந்துவிட்டேன்.

"இது எங்கால பாகற்காய்?"

"பெரியபிள்ளைமாமி வீட்டு வேலியில கிடந்தது. வெளியதான்!"

"கேட்டிட்டோ பிடுங்கினனி"

கேள்வியில் தெரிந்த உக்கிரம் ... இன்றைக்குத் திருவிழா நடக்கப் போகிறது. 'புல்லாந்திக் கம்பை நானே முறித்துவந்து கொடுத்து நானே அடி வாங்கும் 'உற்சவம்' அரங்கேறப் போகிறது' என்றே உள்மனதுக்குத் தோன்றியது.

" இல்லை, அடிக்காதைங்கம்மா நான்வேணுமென்றால் கொண்டு போய்க் குடுத்திற்று வாறன்"

என் கௌரவம் குறித்து யோசித்திருப்பார் போலும்...

"நீ கொண்டுபோய்க் கொடுக்க வேண்டாம். நீ பிடுங்கியது சரியா?"

"பிழை"

"பிழையான வேலையென்று தெரிந்து ஏன் பிடுங்கின்னி?"

"தெரியாமப் பிடுங்கீற்றனம்மா, இனிப் பிடுங்க மாட்டன்"

"இன்னொருவரின் பொருளை அவையிட்டக் கேட்காம நாங்கள் எடுத்தா அது 'களவு' நீ களவெடுத்துக் கொண்டு வந்திருக்கிறாய்."

ஆடிப் போய்விட்டேன் !

* * *

"பஞ்சமாபாதகங்கள் என்றால் என்னம்மா?"

"கொலை, பொய், களவு, கள்ளுண்ணல், குருநிந்தை"என்று அம்மா சொல்லித் தந்த பாடத்தில் ஒரு பாவத்தை இப்பொழுது நான் செய்துவிட்டேன்.

எனக்கு அடி விழுவது வேண்டியதுதான்.

# வெட்டிவிடப்பட்ட சிறகுகள்

*ஸுமைய்யா வறீஸ்*

"ஏன்ட ராசால்ல செல்லமில்ல, எடுத்திட்டு வாடா தம்பி, அப்பா பகல் சாப்பிடவுமில்லை. காலைல குடிச்ச கஞ்சிதான் நீ கூடத்தான் ராசா"

"என்னால ஏலாதும்மா. அது குடுக்கிறது என்ட நண்பன் மாணவன்ட வீட்டில. எங்கண்ணன் வேற அமெரிக்காவுல எண்டு அவனுக்குத் தெரியும். நான் போனா எனக்குத் தரமாட்டினம். நண்பர்களிட்ட சொல்லிக் குழப்புவான்" அடம்பிடித்தான் மாறன்.

"எதுக்கு ராசா குழப்பணும்? நாங்க ஒண்ணும் திருடுறதுக்குப் போகலயே. வறியவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கிற ஐயாயிரம் ரூபா பணம் தானே. அப்பாட இருமல் மாத்திர கூட நாளைக்கு காலைல மட்டுந்தான் குடுக்கிறதுக்கு இருக்கு. கைலகூட ஒரு பைசா இல்ல.. போனவாரம் பண்ணையார் குடுத்த ஒரு கிலோ அரிசியும் கஞ்சி காச்சே முடிஞ்சு போச்சு. உனக்குக்கூட என்னமோபொஸ்தகம் வாங்கணம் எண்டாய்"

இப்பிடித் தாய் கனகம்மாள் அடுக்கிக்கொண்டே போக அவனது விழிகளிலிருந்து நீர் தரை நோக்கிகொண்டே போயிற்று. விழியை மறைத்த நீர்ப்படலம் பலுவாய் நிற்க அதனையும் தாண்டி தாயின் நரைத்த முடிகளையும் குழி விழுந்த கண்களையும் மங்கலாய் அவனுக்குக் காட்டிற்று. ஐந்து வருடங்களாகக் கட்டிலுக்குச் சுமையாய் படுத்த படுக்கையாய் இருக்கும் தந்தையின் கண்களை அவனது கண்கள் எதேச்சையாக எதிர்நோக்க "போய் வாடா மகனே" எனக் கெஞ்சுவது போல அவரது பார்வை இருக்க ஏதோ கனத்த முட்கள் அவனது நெஞ்சை இரு பக்கமாகவும் இருந்து அழுத்துவது போல அவன் உணர்ந்தான்.

எலிவளை போல இருக்கும் அவனது வீட்டின் ஒரு பக்க மூலையில் தந்தையைச் சுமக்கும் கட்டில்... வந்தாரை அமரவைக்கக் கதிரையாகக் கைகொடுப்பதற்கு இரு பாய்கள்... இரவு நேரத்து நிலாப்போல புகைபடிந்த கருஞ்சுவற்றிலே தொங்கிக் கொண்டிருக்கும் வெண்மையான பழங்கடிகாரம்... இவ்வாறு மாறனின் வீட்டை வர்ணிக்கலாம்.

மனதிலே அடையமுடியாமல் தவிக்கும் கனவுகள் பல ரீங்காரமிட்டுக்கொண்டிருக்கும் வேளையில்...

"தம்பி தம்பி... உன்னத்தாம்பா கொஞ்சம் முன்னால போ" மேகங்களாகிய கனவுகள் காற்றிலே கரைய அப்போதுதான் அவன் உணர்ந்தான். தாயின் கெஞ்சும் வார்த்தையும் தந்தையின் கெஞ்சும் பார்வையும் அவனைச் சுட்டெரிக்கும் சூரியனையும் புறக்கண்டித்துவிட்டு நீண்டதொரு வரிசையில் நிற்க வைத்திருக்கிறது.

ஐயாயிரம் ரூபாய் பணத்துக்காக, பாசத்துக்கும் மனிதாபிமானத்துக்கும் இத்தனை சக்தியா என வியந்தவாறே தனக்கு முன்னால் இருக்கின்ற எறும்பு வரிசையினை உணர்வற்ற முகத்துடன் நோக்குகிறான்.

பத்துப்பெட்டிகள் இருக்கின்ற ஒரு புகையிரத வண்டியினை அதேபோன்ற இன்னொரு புகையிரத வண்டியுடன் இணைத்து அதில் கடைசிப் பெட்டியில் இருக்கும் ஒருவர் ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தானாயின் எவ்வாறு முதல் ரயிலின் முதல் பெட்டி விளங்குகிறதோ அதே போன்ற நீண்ட வரிசையில் முதலாவது நபர் உட்செல்வதை அவனது விழிகள் நோட்டமிட்டன. கடவுளே இதற்கு இன்னும் எவ்வளவு நேரம் ஆகுமோ என சலித்துக்கொள்ள வரிசையின் நகர்வோ ஆமையின் வேகத்தில் தோற்றுப்போனது.

எப்படியோ நேரம் கடிவாளமற்ற காற்றைப்போல பறக்க, இம்முறை மாறனோ வரிசையில் மூன்றாவது நபர். அவனது வேண்டுதலெல்லாம் நண்பன் மாதவன் அவனைப் பார்க்கக்கூடாது என்பதுதான். வேண்டுதல் இறைவனில் காலடியை அடையமுன்பே மாறனின் காலடியை மாதவன் அடைந்துவிட்டான். முகக்கவசத்தையும் தாண்டி எவ்வாறுதான் தன்னை அடையாளங்கண்டு கொண்டானோ என மாறனுக்குச் சற்று வெறுப்பாகவே இருந்தது.

"என்னடா மாறா... என்ன இந்தப்பக்கம் தலைகாட்டியிருக்கிறாய்? வரிசையில வேற... ஐயாயிரம் ரூபா பணத்துக்கா? உங்கண்ணன்தானே அமெரிக்காவுல இருக்காரு. நல்ல சம்பளம் வேறயாம். குடுப்பத்தோட சொகுசா இருக்காறாராம்... இப்புடி நான் சொல்லல. உங்கம்மாதான் பக்கத்து வீட்டு சரளா ஆன்டிகிட சொல்லியிருக்கா... உன்ட இடத்த உண்மையான ஒரு ஏழைக்கு குடுக்கலாமில்லையா? ஏன்டா இப்புடி அரசாங்கத்த ஏமாத்துறாய்?"

இந்தக் குத்தலான வார்த்தைகள் யாவும் ஏற்கனவே மாறன் எதிர்பார்த்தவைதான். நண்பனின்

முகத்தைப் பார்க்கச் சக்தியற்று கண்களால் நிலத்திலே கோலம் போடத் தொடங்கினான். தேவையற்ற எதிர்பார்ப்புக்கள் சரியாக நடந்துவிட ஏனோ அவனது சொந்த எதிர்பார்ப்புக்கள் மற்றும் கனவுகள் யாவும் இன்னும் நடக்காமல் எட்டாக்கனியாய் அப்படியே இருக்கின்றதை நினைத்து மனதால் நொந்து கொண்டான் மாறன்.

தனது தாய், சரளா ஆன்டியிடம் கூறியது ஒன்றும் பொய்யில்லை. ஆம் உண்மைதான். தனது அண்ணன் அமெரிக்காவில் தனது குடும்பத்துடன் சொகுசாக வாழ்கிறான்தான். ஆனால் தனது பெற்றோருக்கென்று தம்பியின் படிப்புச் செலவுக்கென்று ஒரு பைசாவேனும் அனுப்பாத நன்றி மறந்த பிறவி அவன். இப்போது அமெரிக்காவில் குடியுரிமை பெற்று சுமார் ஆறு வருடங்களாகிவிட்டன.

இதுவரையும் அண்ணன் ஒரு முறையேனும் சொந்த மண்ணுக்குத் திரும்பியதே இல்லை. ஏன் ஒரு போன் கூட ம்ஹூம்... "நன்றி கெட்டவன். நாயினுங்கடையன்" எனும் பழமொழியை மீட்டிப் பார்ப்பதே தவிர தங்களின் சோகக்கதையை ஊரிலே என்ன தம்பட்டமா அடிக்க முடியும்?

தனது குடும்பத்துக்குத் தெரியாது திருமணம் முடித்து எப்பொழுது அண்ணன் வெளிநாடு சென்றானோ அப்பொழுதிலிருந்தே தந்தையை நோய் அணைத்துக் கொண்டது. மகன் உபசாரம்செய்ய வேண்டிய இடத்தில் அந்த வேலையை நோய் அன்பாய்ப் பார்த்துக்கொண்டது. அண்ணன் பிரிந்த கணம்தொடக்கம் குடும்பப்பளு எனும் கிரீடம் மாறனின தலைக்கு ஏறியதுடன் அவன் வறுமை எனும் பதவிக்குத் தலைவனாக நியமிக்கப்பட்டான். "காவடிப்பாரம் சுமக்கிறவனுக்குத்தான் தெரியும்" ஊருக்கு எங்கே தெரியப்போகிறது. இவனது கதியை விதி என்று சொல்வதா அல்லது இறைவனின் சதி என்று சொல்வதா தெரியவில்லை.

ஏனோ அவனது மனம் புண்ணிலே பாய்ச்சிய வேல் போல ஆழமாக வலிக்கத் தொடங்கிற்று. ஒருபுறம் அண்ணனின் பிரிவு மறுபுறம் படுத்த படுக்கையாய் இருக்கும் தந்தை மற்றும் பிணியுற்று ஓடாய்த்தேயும் தாய். இன்னொருபுறம் தனது உயர்தரப்பரீட்சை மற்றும் வைத்தியராக வேண்டுமென்ற கனவு. இவையனைத்தும் மாறனைக் கட்டிப்போட்டு அழகு பார்த்தன.

நேரமோ மின்னல் வேகத்தில் செல்ல சூரியனும் வீடு திரும்பியாயிற்று, பணம் கொடுக்கும் படலந்தான் இன்னும் முடிந்த பாடில்லை. பணத்தைச் சரிபார்த்துப் பொறுபாய் வழங்கிக் கொண்டிருந்த சமுர்த்தி மிஸ் அலுப்புற்று எழுந்தவளாய் "தென வெலாவ மதிய அநித் அய ஹெட என்ட" என்றதுதான் விதியை நொந்தபடி மீண்டும் நாளைக்கா? மாதவன் வருவானே என மனது



மற்றும் மூளை குழம்பியவனாக நடைப்பிணம் போன்று உணர்வற்றுத் திரும்புகையில்...

"டேய் மாறா நம்ம அயல் வீட்டுக் கவிதாப் பெண்டோட புருசனுக்கு கொரொனாவாம். குடும்பத்தோட அள்ளிட்டுப் போய்ட்டாங்க, இனி நம்ப ஏரியாவும் லொக் டொவுன் தான்" பின்னால் சைக்கிளில் வந்த மாடசாமியின் பேச்சு தூக்கிவாரிப் போட்டது.

கவிதாவின் கணவனுக்கு நோய் தொற்றியதால் இனி அந்தப் பிரதேசம் முழுவதும் மூடப்படும் மீளவும் குறித்த நபருக்கு நோய்த்தொற்று பூரண சுகம் என உறுதி செய்யப்பட்டாலே மூடப்பட்ட அப்பிரதேசம் திறக்கப்படும். அதுவரைக்கும் உலகமே அவனைக் கீழே தள்ளி எழும்ப முடியாதவாறு அழுத்திப்பிடிப்பது போல உணர்ந்தான் அவன்.

மாறனுக்கு வீடு செல்ல ஏனோ மனம் வரவில்லை. பணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் பெற்றோரின் முகம் அவனுக்கு மலை மேல் தீப்போல சுவாலை விட்டு உருவெடுக்கத் தொடங்கிற்று.

"படிப்பு, அப்பா, அம்மா,,, படிப்பு, அப்பா, அம்மா..." வாய் முணுமுணுத்தபடியே சாலையோரம் பாதையைக் கடக்க எத்தனித்ததுதான். வேகமாக எங்கோ இருந்து வந்த பொலிஸ் ஜீப் கட்டுப்பாடின்றி அவனை இடித்துத் தள்ளியது.

"அம்மா...!!!" அவன் இறுதியாகப் பார்த்த உருவம் மற்றும் இறுதியாகக் கூறிய வார்த்தை.

ஏனோ கடவுளுக்கு அவனைப் பிடித்திருக்கிறது போலும். உடனே தன்வசமாக்கிக் கொண்டான். கஷ்டத்தை மாத்திரம் அனுபவித்து வேறு எந்த வகையான சொகுசினதும் வாசனையை நுகர்ந்தும் பார்க்காது அற்ப ஆயுளில் உலகத்தாரிடமிருந்து விடைபெற்றான். இதுபோன்ற எத்தனை மாறன்கள் இவ்வாறு உலகில் இருக்கின்றனரோ வெட்டிவிடப்பட்ட சிறகுகளுடன்!!!

# பாசறைச் சுவர் எழுதும் கிறுக்கல்கள்

*ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்*

*இராகம்–:சுபந்துவராளி*
*தாளம்–:ஏகம்*

*நில அறையின் இருள் நீளுகிறது*
*நீல வானில் ஒளி தொலைகிறது*
*படு களத்தில் சுடுகலம் ஏந்தி,*
*பாடும் கானம் பாதை போய் வருமா?*

*காதலியே கணம் தோறும் நினைப்பாயா?*
*களத்தில் வேட்டுக்கள் கேட்கையில் துடிப்பாயா?*
*கரையும் நாளோடு கரைந்து போவாயா?*
*தரையில் கண்ணீரால் கவி எழுதுவாயா?*

*இரும்பு பறவைகள் ஊர் தாண்டையில்,*
*கரும்பாய் உறவைச் சொல்லி விடுவாயா?*
*குண்டு மழையில் அனுப்பிய ஓலையை.*
*கண்டு நினைவில் நனைந்து வாழ்வேனே,*

*பாசறைச் சுவரில் பிரிவின் கிறுக்கல்கள்*
*நாசரால் போன வீரரின் உருக்கங்கள்*
*கிறுக்காத இடமொன்று தேடுகின்றேன்*
*மறக்காது உனக்கென்று எழுதுகின்றேன்*

*நித்தம் கந்தகப் புகையின் வாசம்*
*சித்தம் கலங்கையில் கண்மணியின் நினைவு*
*கூற்றுவன் இங்கு குடி கொண்டான்*
*நேற்று இருந்த தோழன் இல்லையே*

*ஓநாயின் ஊளை காத்திருப்பை கணக்கிடும்*
*கழுகுகள் வேளை பார்த்து வட்டமிடும்*
*பிணவறை தாண்டி நானும் போகையில்,*
*மணவறை நாயனம் எனக்குள் கேட்கும்*

*சன்னம் துளைத்த காயம் வலிக்கையில்,*
*உன் எண்ணம் மருந்து போடுதே*
*தூங்கா இரவில் கூவையை அழைத்து*
*தாங்கா உன் பிரிவைப் புலம்புகின்றேன்*

*எவர் வருவார் துரித கதியோடு*
*சமர்க் கள சரிதம் முடிக்கவே,*
*போர் முடியும் போவேன் ஊரென்று*
*மார்புக் கவசத்தினுள் இதயம் துடிக்கிறது*

*விண்ணோடும் கனையின் ஒளிப்பிழம்பில்,*
*உன்னோடு பேச ஒரு நாள் தேடுகின்றேன்*
*நீ தந்த பிரிவின் பெருமூச்சில்,*
*புதைந்த கண்ணிகள் வெடித்துப் பூவாகும்*

*இரவும் பகலும் கை அணைக்கும்*
*இரும்புக் கலத்தில் உன் பெயரிட்டு–அதில்*
*உதட்டு ஈரத்தில் நினைவோடு கனவை*
*நூறெட்டு கல்வெட்டாய் பொறிக்கின்றேன்*

*கனவுகள் தொலைந்து கல்லறை போனால்,*
*கல்லிடுக்கு நுழையும் காற்றிடம் சொல்*
*வீரன் உறங்குகிறான் என் நினைவுடனே*
*விரைவில் எனக்காய் உயிர் பெறுவானென்று*



*தொடர் :*

# வேதாளமும் முருங்கையும்

**-1-**

*அசன்*

விக்கிரமாதித்தன் யார்? இவனுக்கும் வேதாளத்துக்கும் என்ன உறவு?

இதை அறிய இந்தக் கதையை ஐம்பதுகளின் நடுக்கூற்றுக்கு பின் நோக்கி நகர்த்த வேண்டும். பனிப்புலம் என்று அயலூரவர்களாலும் பணிப்புலம் என உள்ளூரவர்களாலும் அழைக்கப்படும் பெருநிலப்பரப்பின் ஒரு சிற்றூரான காலையடியில் மருத்துவிச்சியின் உதவி யின்றியே நல்லதம்பிக்கும் சின்னம்மாவுக்கும் மகனாக அவதரித்தார் விக்ரமாதித்தன். தான் குறித்த திகதிக்கு முன்னரே அவசர அவசரமாக தன் உதவியில்லாமல் வந்தருளியதால் விக்ரமாதித்தனை மருத்துவிச்சி இன்றுவரை ஒரு எதிரியாகவே கருதிக்கொண்டாள். மேலும் அவன் நல்ல ஆரோக்கியமாக சிரித்துக்கொண்டே பிறந்தபடியால் பிசாசுக்கு பிறந்தவன் என்று கதையை வேறு கட்டிவிட்டாள்.

விக்கிரமாதித்தனுக்கு நல்லதம்பியும் சின்னம்மாவும் ஆசைஆசையாக இட்ட இயற்பெயர் பாலசிங்கம். பள்ளிக்கூடம் போகும் பருவம் வந்ததும் பாலசிங்கம் தன்னுள் கதைப்பதை அவதானித்த சின்னம்மா,

"தம்பி பாலா ஆரோடை கதைக்கிறாய்?" என்று கேட்டபோது கொஞ்சமும் யோசியாமல்

"வேதாளத்தோடு" என்று சொன்னான்.

பாலசிங்கம் வேதாளத்தோடு கதைக்கும் விசயத்தையும் பிசாசுக்கு பிறந்தவன் என்று மருத்துவிச்சி கட்டிய கதையையும் இணைத்து நண்பர்கள் அவனுக்கு விக்ரமாதித்தன் என நாமகரணம் சூடினர். பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்திலும் பாடசாலை குறிப்பேடுகளிலும் கடவுச்சீட்டிலும் மட்டுமே பாலசிங்கம் மிஞ்சி உள்ளது. எனவே நாமும் பாலசிங்கம் என்ற பெயரை மறந்துவிடுவதே நியாயமானது. விக்ரமாதித்தனிடம் நீங்கள் எதைப் பற்றி கேட்டாலும் தேவையான நேரம் எடுத்து பின்னர் படக்கென்று பதில் சொல்வான். அவன் வேதாளத்துடன் கலந்து ஆலோசித்த பின்னர்தான் வாயை திறப்பதாக மற்றவர்கள் புரிந்துகொண்டனர், அவனும் அதை ஆமோதிப்பது போலவே நடந்துகொண்டான். ஆக வேதாளத்துக்கும் விக்ரமாதித்தனுக்கும் தொப்பிள்கொடி உறவு உள்ளதாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

காலையடியில் வசிக்குமட்டும் விக்ரமாதித்தனுக்கும் வேதாளத்துக்கும் எந்தவொரு சச்சரவும் வந்ததாக வரலாற்றில் குறிப்பில்லை. முதன் முதலாக ஒரு நேர்முகப்பரீட்சைக்காக கொழும்பு வந்து மாமனார் வீட்டில் இரு தினங்கள் தங்கவேண்டிய நிலை வந்த போதுதான் முதலாவது முரண்பாடு கருக் கொண்டது.

ஊரிலே விக்ரமாதித்தனின் குளியல் ஒரு நீண்ட நெடிய சடங்கு. தினமும் நடக்கக் கூடிய விஷயம் இல்லை. நிறம் மாறிய பழைய வேட்டித்துண்டு இடுப்பில் ஏறியவுடன் சடங்கு துவங்கும். அரை மணித்தியாலத்துக்கு உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை நல்லெண்ணையில் தசைநார்களுக்கு மசாஜ் கொடுக்கப்பட்டு பின்னர் இரண்டு மணித்தியாலத்துக்கு உடம்பு நன்றாக எண்ணையில் ஊற வைக்கப்படும். இந்த இரண்டு மணி நேரத்தில் பல விசயங்கள் நடக்கும். விக்ரமாதித்தனின் பாடசாலை உடுப்புக்கள் இயல்பு நிறத்துக்கு மீளும். வீட்டு வளவிலுள்ள தென்னம் கண்டுகள் வாழை மரங்களுக்கு தண்ணி கிடைக்கும். ஆடு மாடுகளுக்கு பூவரசம் குழையும் விசேச இணைப்பாக வேப்பம் குழையும் கிடைக்கும். கிணத்து கட்டு, குண்டு, வாளி அதன் சூழல் எல்லாம் பாசி நீக்கப்படும். சமநிலை இழந்த துலா நேர் செய்யப்படும். கட்டிழந்த பனை வேலி கதியால்களுடன் இறுகக் கட்டப்படும். இப்படியான உடல் பயிற்சிகள் முடிய எண்ணையும் உடம்பிலை சுவற சுடுதண்ணியில் நன்கு ஊறிய அரப்பு அல்லது சீயாக்கைத தூளை உடம்பெல்லாம் தேச்சு ஒருவித லயத்தோடு துலாவிலை தண்ணியை அள்ளி அள்ளி விக்ரமாதித்தன் நீராடுகின்ற அழகை அயல் எல்லாம் கண்டு களிக்கும். குளிக்கிற நேரம் கூட தண்ணியை வீணாக்காமல் பக்குவமாய் பாத்தி வெட்டி வாழைக்கு இறைக்கப்படும். இந்த சடங்கு அயலவருக்கு ஒரு அலாதியான கலாஅனுபவம்

அப்படி நீராடி களித்த விக்ரமாத்திதனை கொழும்பிலை ஐந்தடி தர ஐந்தடி அறைக்குள் குளிக்கச்சொன்னால் எப்படி இருக்கும். ஜெயிலுக்கு போகிற உணர்வோடு முதல் நாள் குளித்துவிட்டு ஈரச் சாரத்தோடு வெளியே வந்தால் மச்சாள் சிரிக்கிறா.

"உங்கடை மருமகன் உடுப்பு போட்டுக் கொண்டுதான் குளிக்கிறவரோ" எண்டு தாயிடம் கொடுப்பு சிரிப்புடன் கேட்டாள்.

விக்கிரமாதித்தனுக்கு வெப்பியாரமாயிருந்தது. விக்ரமாதித்தனைப் பார்க்க மாமிக்கு பாவமாய் இருந்தது

"பாலா, இங்கை கிணறும் தேவை இல்லை. துலாவாலை இறைக்கவும் தேவை இல்லை. சும்மா பைப்பை துறந்தால் தண்ணி தானாய் வருகுது. கதவை பூட்டிப்போட்டு சுதந்திரமாய் குளிக்க வேண்டியதுதானே. ஒருத்தரும் உம்மை பாக்கமாட்டினம்." என்றாள் மாமி.

விக்கிரமாதித்தனுக்கு உண்மையாகவே இப்ப கோவம் வந்தது. ஒன்று தான் விக்கிரமாதித்தனாய் மாறிய செய்தி இன்னும் இவைக்கு தெரியவில்லையே எண்டது. இரண்டாவது கிணத்துக் கட்டையும் துலாவையும் இறக்கிப் பேசியது. பைப்பைத் துறக்க தண்ணி ஒழுகுதுதான். ஆனால் அது ஒழுகும் விதம் விக்கிரமாதித்தனுக்கு வேறு நினைப்பைத் தந்து அருவருப்பூட்டியது. பண்ணாகம் வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் ஏடு துவக்கிய காலத்தில் இருந்து வகுப்பு இடைவேளைகளில் கூட்டாளிகளுடன் போட்டி போட்டு சொந்த நீர் இறைத்து செடி வளர்த்தது ஞாபகம் வந்தது. அடுத்த நாள் வாறது வரட்டும் என்று கண்ணை மூடிக்கொண்டு நிர்வாணமாக குளிக்க சாரத்தைக் கழற்றினான்.அயல் எல்லாம் சுற்றிவர நின்று தன்னை பார்த்து எக்காளமிட்டு சிரிப்பதாக உணர்ந்தான். வெக்கம் பிடுங்கித் தின்றது. அப்போதுதான் வேதாளம் விக்ரமாதித்தன் எதிர்பாராத விதமாக பெரும் குரலெடுத்து ஓலமிட்டது. தனது அவலத்தை உணராத வேதாளத்தை பார்த்து அவனும் கத்தினான்.

"என்ன கோதாரிக்கு நீ வேறை ஊளையிடுகிறாய்"

"விக்ரமாதித்தா. இப்ப என்ன செய்யிறாய். உரிஞ்சு போட்டு நிக்க உனக்கு வெக்கம் இல்லையோ. "

"பேசாமல் கிட. இருக்கிற இடத்துக்கு ஏற்ற விதத்திலை எங்களை மாத்த வேணும். இல்லாட்டில் எங்களை பட்டிக்காடுகள் எண்டு நினைப்பினம்."

"ஆக்களுக்கேற்ற மாதிரி மாற நினைச்சால் நான் உன்னை விட்டுவிட்டு போவிடுவன். நீயும் உன்ர மாமனும் மாமியும் மச்சளுமாய் கொஞ்சிக் குலாவுங்கோ."

'அவசரப்படாதை. இங்கை நான் நிரந்தரமாய் வாழ வரேல்லை. நாளைக்கு இன்ரவியு முடிஞ்ச பிறகு வெளிக்கிடுவோம்."

ஒரு கிழமைக்கு கொழும்பில் நின்று ஊர் சுற்றி பார்ப்பதாகத்தான் திட்டம். இந்த வேதாளத் தாலை எல்லாம் மண்ணாகிப்போகுமோ எண்ட கவலை இப்போது. மாலை மாமா வேலையால் வந்ததும் நிலைமை இன்னும் மோசமாகியது. விக்கிரமாதித்தனுக்கு அறிவுரை கூறுவதாகப் பாவனை பண்ணி மாமா கேள்விப்படாத பல ஆங்கிலச் சொற்களை இடையிடை அள்ளி வீசினார். அடிக்கடி இது யாழ்ப்பாணமில்லை. கொழும்பு என்றும் ஞாபகப் படுத்தினார்.

விக்ரமாதித்தனின் பேச்சில் தற்செயலாக பணிப்புலத்திற்கே உரித்தான பாசையில் இரண்டொரு சொற்கள் இயல்பாக வந்து விழுந்தன. இதை நன்கு அவதானித்த மாமனின் முகம் கோபத்தில் இருண்டு கறுத்தது.

"தம்பி இது பணிப்புலம் இல்லை. தப்பித் தவறி உந்தப் பாசையிலை இனிமேல் கதைக்க வெளிக்கிட்டீரோ உமக்கு கொழும்பிலை இடமில்லை. இந்த விசயத்திலை மருமகன் எண்டு கூட பாக்கமாட்டன்" கொழும்பை குத்தகைக்கு எடுத்த தோரணையில் மாமா பல சட்ட விதிகளை அடுக்கிக்கொண்டே போனார்.

மாமாவை நன்கு அறிந்த விக்ரமாதித்தன் இந்த கட்டளைகளை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் 'இன்ரவியூவும் வேண்டாம். வேலையும் வேண்டாம். வெளிக்கிடு' என்று வேதாளம் முருங்கையில் ஏறியது. இந்த நரகத்தில் இருக்க மாடடேன் என்று அடம் பிடித்தது. கெஞ்சிக் கூத்தாடி அடுத்த நாள் வரை பொறுத்திருக்க வைக்க விக்ரமாதித்தன் வேதாளத்தோடு பல உடன்படிக்கைகள் செய்யவேண்டியதாயிற்று.

இன்ரவியூ முடிந்த கையோடு குளிக்காமலே கொண்டு வந்த இறங்குப் பெட்டியோடு மெயில் வண்டியைப் பிடிக்க வெளிக்கிட்டான். மாமி மட்டும் அவன் போவதை இட்டு உண்மையிலேயே வருத்தப்பட்டாள்.

'ஒரு கிழமை நிக்கிறதெண்டு வந்துவிட்டு ஏன் ரண்டு நாளிலை வெளிகிடுகிறீர். எங்கடை வீடு பிடிக்கேல்லையோ. இல்லை சாப்பாடு பிடிக்கேல்லையோ?'

'ஆடு மாடுகளைக் கவனிக்க வேணும். தோட்டத்தை பாக்கவேணும். நான் இல்லாமல் ஐயா கஷ்ரப்படுவார். அதுதான் போகவேண்டியிருக்கு'

மாமா வேலையால் வரும்வரை கூடப் பொறுக்கவில்லை. எழு மணி மெயிலுக்கு அஞ்சு மணிக்கே ஸ்டேசனில் நின்றான் விக்ரமாதித்தன்.

தொடரும்

# உடற்பசிக்கு ஆளாகும் குடல் வற்றிய சிறுவர் சிறுமியர்

*கே.எஸ். சிவஞானராஜா*

உலகத்திலே மிகவும் கொடுமையான நோய் கொரோனா அல்ல. வறுமையால் ஏற்படும் பசியே ஆகும். பணம் இல்லையேல் பிணமே! பசி வந்திடப் பத்தும் பறந்திடும். ஆம்! குலம், கோத்திரம், மானம், ரோசம், வெட்கம், நாணம், சுற்றம் சூழல் கல்வி கேள்வி பதவி அந்தஸ்து சமயம் சாத்திரம் சத்தியம் சாமர்த்தியம், ஆணவம் அதிகாரம் ஆசை எல்லாமே தலை தெறிக்க ஓடியே விடும். பசியைப் போல ஒரு கொடுமை, படைத்தவனுக்கும் வரவே கூடாது. இதனாலேதான் வள்ளுவன் குமுறுகிறான். எப்படி? அடேயப்பா!

*இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகியற்றி யான்.*

வள்ளுவனுக்கு வந்த கோபம் எவருக்கும் வரவில்லையே! எப்படி? இரக்க வைத்த இறைவனே கெட்டொழிந்து போவானாக என்று.

பதின்ம வயதுடைய பருவமடைந்த ஒரு சிறுமியை, இணையதளமூலம் வரளைத்து 120 நாட்களுக்கு மேலாக பல்வேறு நபர்களுக்குப் பாலியல் தேவைகளுக்காக விற்பனை செய்த கொடூரம் 18.06.2021 இல் ஊடக அறிக்கை மூலம் அம்பலமாகியது. இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் கைதாகியுள்ளனர்

ஆபிரிக்கா நாடுகளில்தான் வறுமை, பசி பட்டினி, சாவு என்று படித்திருக்கின்றோம். இப்போது இலங்கை, இந்தியா, பங்காளதேஷ், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் என எங்குமே வறுமை வேரோடியுள்ளது. வறுமை ஒரு சிலருக்கு மட்டுமல்ல பலருக்கு முதலீடாகியுள்ளது.

குறிப்பாக 18 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் அதற்கப்பால் உள்ள வயதினரும் வறுமையோடு சேர்ந்த பற்பல காரணங்களினால் கொள்ளையடிக்கப்படுகிறார்கள். இன்னுமொருபாங்கிலே சொல்வதானால் ஏமாற்றப் படுகிறார்கள். பாவங்கள் பிள்ளைகள்!

அறிவு சார்ந்தவர்கள் ஆலயம் சார்ந்தவர்கள், உயர்பதவி வகிப்போர், அரசு சார்ந்தவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பொறுப்பானவர்கள், செய்தியாளர்ள் – எல்லோருமே – சிறுவர் சிறுமியர் படுகின்ற வேதனைகளையும், துன்பங்களையும், நெருக்கடிகளையும் ஆழமாக எச்சரிக்க முடியாதவர்கள் இருக்கிறார்களே என்பதை இந்தமண் கண்ணீரால் நனைக்கிறது. ஏன் அவர்களால் உரத்துச் சொல்ல முடியாமைகும் காரணங்கள் இருக்கவே செய்கிறது. இது மேலிருந்து கண்டிக்கப்பட வேண்டும். மேலேயே பிரச்சினை என்றால் அதனை யார் தண்டிப்பது.

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவத்தகொட பிரதேசத்தில் ஒரு பெரியாரிடம் வறுமையின் நிமித்தம் இரண்டு சிறுவன்கள் பாஇயல் வன்கொடுமைக்குள் சிக்கித் தவித்த சம்பவம் அண்மையில் அம்பலமாகியது. ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் பால் மாறிய விபச்சாரமாய் நடைபெறும் சம்பவங்கள் அண்மையில் அதிகரித்துக் காணப்படுகிறது. ஒவ்வொருநாளும் பார்க்கப்போனால் நாடு முழுவதுமாக 50 சிறுவர் சிறுமியர்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகிறார்கள்.

இதன்பிரகாரம் மாதம் ஒன்றுக்கு 1500 சிறுவர் சிறுமியர்களும், வருடமொன்றிற்கு 18,000 சிறுவர் சிறுமியரும் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

சிறுவர் சிறுமியர் மற்றும் இருபத்தைந்து வயதுக்குட்பட்டோர் அனைவருமே மிகவும் இயற்கை அழகுடையவர்களாக மிளிர்கின்றார்கள். இந்த அழகு ஆளுமையோடு குறிப்பாக வயதுவந்தோரை ஆட்டிப் படைப்பதனால் இந்த அக்கிரம்ம் நடக்கிறது. ஆசை வெட்கமறியாது. அறிவு கூட மங்கிவிடும். சத்தியம் தோற்றுவிடும். வாய்மை தடுமாறும். முனிவர்கள் கூட தம் மௌன விரத்ததைக் கைவிட ஏதுவாக ஆசை ஆட்சி புரியும்.

எமது நாடு கற்புள்ள நாடு என்று அனைவராலும் போற்றிவளர்க்கப்பட்ட நாடு. சித்தர்களும் முனிவர்களும் கற்புள்ள பெரியார்களும் பொற்புடன் விளங்கும் குருமார்களும் பேறாகி எமது நாட்டை பேறாக்கிய புனிதர்களாக விளங்கினார்கள். ஆனால் இன்றோ அவை எப்படியாகிற்றென்பதைப் பாரக்கும் போது எல்லாமே வர்த்தகமாகிவிட்டன.

பாவம் குழந்தைகள், சிறுவர், சிறுமியர்கள்! பல குயில்களின் தந்திரமே நாட்டுக்குள், வீட்டுக்குள், சாலைகளுக்குள், பெரும் பெரும் மாட மாளிகைகளுக்குள் மூலை முடுக்குகளுக்குள் எல்லாவற்றிலும் ஏன் காகங்களின் கூட்டுக்குள்ளும் பலிக்கத் தொடங்கிவிட்டன. இன்றைய மாற்றத்தில் இந்தப் போக்குகளுக்கு தீர்வுகள் கிடைக்குமா?

*சிறுகதை*

# வந்தது விடியல்

*திவ்வியா ரவிச்சந்திரன்*



நேரம் காலை ஆறு இருபத்தைந்தை எட்டி விட்டது. ஏழு முப்பதுக்கு முன்பள்ளி ஆரம்பித்துவிடும். அதற்கு முன்னரே அங்கு நிற்கவேண்டுமென்றால் இந் நேரத்திற்கு இலக்கியா குளியலறைக்குச் சென்றிருக்க வேண்டும். ஆனால் அவளோ அசந்து உறங்கிக்கொண்டிருந்தாள்.

"பிள்ளை! பிள்ளை! வேலைக்குப் போகேல் லேயோ?" என்று சற்று அதட்டலாகவே அம்மா கலையரசியின் குரல் கேட்டு கண் விழித்தாள் அவள்.

"இண்டைக்கு வேலைக்குப் போகத்தான் வேணுமா?" என்று சலிப்போடு தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டாள்.

நேற்று மைதிலி மாமியின் மகனின் பத்தாவது பிறந்தநாள் விழாவில் அருமைச் சொந்தங்களின் ஆர்ப்பரிக்கும் பேச்சுக்கள் அவளை இரவு முழுவதும் தூங்கவிடவில்லை. அவள் கண்ணுறங்கவே சாமம் ஒரு மணி கடந்துவிட்டது.

பௌதிகவியலில் விஞ்ஞான இளமாணிப் பட்டதாரி இவள். படிப்பிற்குத் தகுந்தாற்போல வேலை தேடினாள். கிடைக்கவில்லை!பாடசாலையொன்றிலே ஆசிரியராகப் பணி புரிவதே அவளின் அதிகபட்ச ஆசை. அதுவே அவளுக்குப் பொருத்தமான தொழில். "இலவுகாத்த கிளி போல" அவளும் பொறுமையாய்க் காத்திருந்து ஒன்றரை ஆண்டுகள் கழிந்துவிட்டது.

"ஏதோ பெரிய படிப்பெல்லாம் படிச்சாள், இப்ப வெறும் ப்ரீ ஸ்கூல் ரீச்சர்"

"இவள்ட வயசுப் பிள்ளையெல்லாம் கையில் ஒண்டு,வயித்தில ஒண்டு எண்டு இருக்குதுகள்"

"பிள்ளையப் பேசாம வெளிநாட்டு மாப்பிள்ளைக்குக் கட்டிக் குடுத்துவிடு. சீதனமே வேண்டாம். கட்ட ரெடியா இருக்கிறாங்கள்"

"கிழவியாப் போனாப் பிறகுதான் கொம்மா பிள்ளையைக் கட்டிவைக்கப்போறா போல" போன்ற பேச்சுக்கள் எல்லாம் அவளுக்குப் பழகிப்போனவை தான். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமுதமே நஞ்சாகும்' போது இது எல்லாம் எம் மாத்திரம். சலிப்படைந்து ஒடிந்துவிட்டாள் இன்று!

"என்ன பிள்ள? உடம்பு ஏதும் சரி இல்லையா?" என்று தாய் கலையரசி அவளின் அறை வாயிலில் நின்று தன்மையாய்க் கேட்டாள்.

"ஓம் அம்மா! இண்டைக்கு நான் வேலைக்குப் போகேல்ல!" என்றாள்.

"ஏன் பிள்ள? காய்ச்சல் ஏதும் காயுதா?" என்று கேட்டுக்கொண்டே அவளருகில் அமர்ந்தாள் கலையரசி.

எந்த ஓர் விடயத்திற்கும் அவ்வளவு எளிதாக அசராதவள், இன்று தொனி மாறா அதே தொடர் பேச்சக்களால் நலிந்து ஒடிந்து விட்டாள். இதனால் தானோ மாலினி மச்சாளின் வீடுகுடிபுகுதலிற்குக் கூடப் போகாம நின்றாள். அவளைக் கண்டால் போதும்! நச்சரிக்கத் தொடங்கி விடுவார்கள்.

"என்ர பேத்டேக்கு நீங்க கட்டாயம் வரவேணும்.

வராட்டி, நான் கதைக்க மாட்டன்" என்று ரிஷி உரிமையாய்க் கேட்டுக் கொண்டதால் அல்லவா பிறந்தநாள் விழாவிற்குப் போனாள். ரிஷிக்கு இலக்கியா விடத்தில் அத்தனை பாசமும் உரிமையும் உண்டு. பாசத்திற்குக் கட்டுபட்டவளாச்சே! தவிர்க்க முடியாமல் தானே போனாள்.

ஆனாலும் இந்தச் சொந்தங்களின் பேச்சின் ஆழம் அவளைச் சற்றே கலங்க வைத்துவிட்டது. "பெற்றோருக்கு பாரமாய்ப் போய்விட்டேனோ?" என்ற உள்ளுணர்வு அவளின் இதயத்தைத் துளைத்து விடவே, வார்த்தைகள் வரமுன் கண்ணீர் முந்திக் கொண்டது தாயிடத்தில்.

"ஏன் பிள்ளை அழுறா?" என்ற தாயின் கேள்வி சற்று பதறமாகவே வெளிப்பட்டது.

"எனால தானே மா... உங்களுக்கு இத்தன மனக்கஸ்ரம்!" என்றாள் அழுதவாறே.

"ஏனம்மா இப்படியெல்லாம் கதைக்கிறா? அழாத பிள்ள...! நீ இப்பிடி எல்லாம் கவலப்படுறத அப்பா அறிஞ்சார் எண்டா... இன்னும் வேதனைப்படுவார்." என்று சொல்லும் போதே தாயின் கண்கள் குளமாகி விட்டது.

உண்மைதான். தந்தை கந்தசாமி சலரோகத்தால் ஒற்றைக் காலை இழுத்து ஐந்து மாதங்கள் கடந்தாகி விட்டது.

"இந்தா.. வலக்கால் இருக்குத்தானே! அது காணும் சம்பாதிக்க" என்று காலை இழந்த அடுத்த மாதமே சொல்லத்தொடங்கி விட்டார்.

"இனி ஆட்டோ எல்லாம் ஓட ஏலாது.. ஒற்றைக்கால் இல்லாம.. ப்ரீ ஸ்கூல வருமானத்தோட வீட்டிலையும் டியூஷன் குடுத்தா எல்லாத்தையும் சமாளிச்சிடுவன்" என்று கந்தசாமியின் வாயை அடைத்து வீட்டில் ஓய்வெடுக்கச் சொன்னவளை, கண்ணும் கருத்துமாய் தகப்பனைப் பராமரித்து வருபவளைப் பாரமாய் நினைப்பாங்களோ கந்தசாமியும் கலையரசியும்!! தகப்பனைப் பார்க்க நேரம் தேவை எண்டதால் கிடைக்க இருந்த வங்கி வேலையைக் கூட வேண்டாம் என்று உதறித்தள்ளியவள். வீட்டு வாடகை, கரண்ற் பில், வீட்டுச் செலவு, அப்பாவின் பராமரிப்பு என்று எல்லாம் அவளின் பொறுப்பாய்ப் போனது. மகளின் சம்பாத்தியத்தில் காலத்தைக் கழிக்கப் போவதை கந்தசாமி கனவிலும் நினைத்திருக்கவில்லை.

"அவள்ட... கதைய நேற்று நீ கேட்டதுல இருந்து.. உன்ர முகமே சரியில்லை! அத நினைச்சோ அழுறா?" என்றாள் தாய்.

ஆம் என்று சொல்வதைப்போல தலையசைத்தாள் இலக்கியா. "இப்படி ஆயிரம் விமர்சனங்கள் வரும், போகும். இதுக்கெல்லாம் சோர்ந்து போகக்கூடாது பிள்ள! தைரியமாய் இரு... எப்பவும் போல!" என்று அரவணைப்பாய் அறிவுரை சொன்ன அம்மாவின் வார்த்தைகள் அவளின் இயக்கத்திற்கு உந்து சக்தியாக அமைந்தது.

அப்பா ஆட்டோ ஓடிச் சம்பாதித்ததை விட இவளின் வருமானம் உயர்வுதான்... அரசாங்க வேலை இல்லை! நல்ல வரன்கள் அமையவில்லை! என்ற மனக்கவலைகள் மாத்திரம் மிதமிஞ்சியிருந்தது. 'சொந்த வீடாவது இருக்க வேண்டும்" என்பது வந்த வரன்களின் குறைந்தபட்ச நிபந்தனை. இப்போதுபணத்திற்குத் தரும் மதிப்பு, குணத்திற்கு இல்லையே!

"சும்மா... சும்மா... போட்டோக்களைக் காட்டி அவனைப் பிடிச்சிருகா. இவனைப் பிடிச்சிருக்கா எண்டு இனிமேல் என்னட்டை கேக்கப்படாது! எனக்கு கலியாணம் இப்ப வேண்டாம்" என்று அதட்டலாய்ச் சொல்லி அனைவரின் வாயையும் அடைத்து விட்டாலும், இந்தச் சொந்தங்களின் குத்தல் கதைகளுக்குக் குறைவேயில்லை.

மாற்றங்கள் ஏதும் நிகழவில்லை. ஆனால் மாதங்கள் மாத்திரம் ஒவ்வொன்றாய்க் கழிந்துகொண்டிருந்தது. ஒரு நாள் படலை வாயிலில் மணியொலித்தது. தபாற்காரன் தான்! அவனை நோக்கிச் செல்லும் போது "அரசாங்க வேலைக்கான நியமனக் கடிதமாயிருக்க வேண்டும்" என்ற சிறிய பிரார்த்தனையோடு கையில் வாங்கிக் கொண்டாள் இலக்கியா. என்றோ ஓர் நாள் அதிசயம் நிகழப் போவதை அவளின் ஆழ் மனது அடிக்கடி அசைபோடும். அந்தநாள் இன்றே வரும் என்று அவள் கற்பனை கூட செய்யவில்லை. இன்ப அதிர்ச்சியில் திழைத்திருந்தாள்.

"அம்மா! அம்மா.. ! இங்க பாருங்கோ! எனக்கு ரீச்சிங் அப்பொயின்மென்ற் வந்திட்டுது...!" என்றவளின் முகத்தைப் பார்த்திருக்க வேண்டுமே! அத்தனை பிரகாசம். அவளின் சிரிப்பைப் பார்த்த கலையரசிக்கும் கந்தசாமிக்கும் அது மறு ஜென்மமே!

"நான் சொன்னனான் தானே, கடவுள் கைவிடவே மாட்டார்... சாமித்தட்டில் இதக் கொண்டுபோய் வச்சுக் கும்புடு, போ!" என்றார் கந்தசாமி. "இப்புடியே இந்தக் கடவுள் நல்ல வரன் ஒன்றையும் அவளுக்கு அமைச்சுக் குடுத்திட்டார் எண்டா... நான் நிம்மதியாக் கண்ண மூடிடுவன்" என்று பெருமூச்சுடன் சொல்லி முடித்தார் கந்தசாமி கலையரசியிடம்.

அம்மா, அப்பாவிடத்தில் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டு மனதில் சுடர்விட்ட புது நம்பிக்கையுடனும்,

மகிழ்ச்சியுடனும் பாடசாலைக்குச் சென்றாள். அங்கும் நல்ல வரவேற்பே கிடைத்தது.

"புது ரீச்சர் வந்திருக்கிறா" என்று சொன்னவாறு ஓர் ஆசிரியர் இலக்கியாவை ஆசிரியர்களின் ஓய்வறைக்கு அழைத்துச் சென்ற போது, அவளின் சாந்தமான சுபாவம் அனைவரையும் கவர்ந்தாற்போல முகுந்தனையும் வெகுவாக அன்றே கவர்ந்து விட்டது. அவனும் இலக்கியாவைப் போல பௌதிகவியல் ஆசிரியர்தான். அனைவரிடத்திலும் தன்னை அறிமுகப்படுத்தி விட்டு தனக்கான ஓர் இடத்தில் அமைதியாய் அமர்ந்து கொண்டாள்.

சில நாட்கள் நகர்ந்தன. வெறுமனே பார்வை மாத்திரம் வீசிக் கொண்டிருந்த முகுந்தன் அன்றொருநாள், "நாளைக்கு நான் ஸ்கூலுக்கு லீவு, என்ர வகுப்புக்கு பாடம் எடுத்து விட ஏலுமோ?" என்று கேட்டான்.

"ஓம் சேர். எனக்கும் பெரிசா வகுப்புகள் தரேல்ல எண்டதால நான் ஃப்ரீயாத்தான் இருக்கிறன். நாளைக்கு நான் பாக்கிறன் சேர்" என்று ஒத்துழைத்தாள். இவ்வாறாக வேலை நிமித்தம் மெல்ல மெல்ல பேச்சுக்கள் வளர்ந்தன. " எனக்கும், என் குடும்பத்துக்கும் ஏற்றவள் இவள் தான்... இவள் மட்டும் தான்!" என்றெல்லாம் நினைப்புகள் அடிக்கடி முகுந்தனின் மனதை ஆட்கொண்டவண்ணமிருந்தது. அவனுக்குத் தந்தையில்லை. அவர் இறந்து ஆறரை வருடங்கள் ஆகிவிட்டது. தாயும் ஒரு தங்கையும். தங்கைக்கும் கடந்த ஆண்டு நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்திருந்தான் பொறுப்பாக. யாரிடம் விசாரித்தாலும் அருமையான பிள்ளை என்றே சொல்வார்கள் அவனை.

அவனுக்கும் மணமகள் தேடும் படலம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. பாதி பொருந்தவில்லை. மீதி அவனுக்கு பிடித்தாற்போல் இல்லை.

"முகத்தில் படிச்ச திமிர் தெரியுது"

"லக்ஷ்மி கடாட்சமாக இல்லை"

"எனக்கு இது ஒத்துவராது போலத் தெரியுது"

"ஏதோ ஒண்டு குறையுது" என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தவன், இன்று இலக்கியா விடத்தில் அத்தனை நிறைகளையும் கண்டுவிட்டாற் போல உணர்ந்தான்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. அம்மாவுடன் கோயிலுக்குச் சென்றிருந்தாள் இலக்கியா.. முகுந்தனும் அங்கு வந்திருந்ததை அவர்கள் அறியவில்லை.

"அம்மா வணக்கம்! என்ர பேர் முகுந்தன். இலக்கியாவோட ஸ்கூலில் ரீச் பண்ணிறன். இலக்கியாவ எனக்கு நல்லா பிடிச்சுப் போச்சு! ஆறுதலா யோசிச்சுச் சொல்லுங்கோ அம்மா" என்று கோபுர வாசலில் வைத்து மொத்தமாய் போட்டு உடைத்து விட்டான். அம்மாவுக்கு ஒரே ஆச்சரியம். இவ்வளவு ஏன், இலக்கியா திறந்த வாயை வீட்டிற்கு வந்த பின்தான் மூடினாள் என்றே சொல்லலாம்.

"அவனாவே ஆசையாக் கேட்டு வாறான் எண்டா.. பிள்ளய நல்லா வச்சுப் பாத்துக் கொள்ளுவான் போல தான் தெரியுது" என்றார் கந்தசாமி.

"ஓம் எனக்கும் நல்ல பிள்ள மாதிரித்தான் படுகுது. எதுக்கும் அவர்ட குடும்பத்தப்பற்றி விசாரிச்சுப் போட்டு இலக்கியாவோட கதைப்பம்" என்று கலையரசியும் ஒப்புதல் தெரிவித்தாள்.

முகுந்தனைப் பற்றியும் அவன் குடும்பம் பற்றியும் விசாரித்தறிந்த பின், அவனை இன்னும் பிடித்து விட்டது. ஒரு நாள் மாலை நாலரை இருக்கும். இலக்கியா வீட்டில் ரியூஷன் எடுத்துக்கொண்டிருந்தாள். முகுந்தன் தாயுடன் அவளின் வீட்டிற்கே வந்துவிட்டான். இலக்கியாவோ அவளின் தாய் தந்தையோ இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"இதுதான் என்ர அம்மா" என்று தன் தாயை அறிமுகப்படுத்தினான். "உங்கட பமிலி பெக்ரவுண்ட் எல்லாம் வடிவா தெரிந்துதான இப்பிடி ஒரு முடிவுக்கு வந்தனான். அம்மாவையும் வச்சுக் கொண்டுதான் சொல்லுறன். எனக்கு சீதனமே வேண்டாம். யோசிச்சு நல்ல முடிவாச் சொல்லுங்கோ" என்று தன்மையாய் உரைத்தான். இந்தப் பண்பு அவனை மனப்பூர்வமாக ஏற்க வைத்தது அவளிடத்தில்.

"எவ்வளவோ இடம் பாத்தம். வேண்டாம் எண்டு சொல்லிக்கொண்டு இருந்தவன், திடீரெண்டு வந்து உங்கட குடும்பத்தப் பற்றிச் சொன்னான். நானும் சரி எண்டுட்டன்" என்றார் முகுந்தனின் தாய்.

இதோ, இன்று உற்றார் உறவினர் முன்னிலையில் முகுந்தன்– இலக்கியா சம்பந்தக்கலப்பு நடைபெற்றுக்கொண்டிருகிறது. கல்யாணத் தேதியும் நிச்சயமாகி விட்டது. இலக்கியா இப்போதுமுன்பு போல் இல்லை. மகிழ்ச்சியின் உச்சத்திலிருந்தாள். அதற்காகக் காணாததைக் கண்டதைப் போல ஆர்ப்பரிக்கவில்லை. பொறுமையும், அனுபவமும் அவளைப் பக்குவசாலியாக மாற்றிவிட்டிருந்தது.

"சீதனமே வேண்டாமக் கல்யாணம் கட்டுற நல்ல மனசுக்காரர் எங்கட ஊர்லயும் தான் இருக்கிறாங்கள்" என்று உரக்கச் சொன்னாள் கலையரசி சபை முன்னே!!

# நாடக இணையர்களின் பொன்விழா அடையாளம்

*அரங்காடி*




நூல்: பிரத்தியேகக் காட்சி ஏழுநாடங்களும் பதிவுகளும்
தொகுப்பாசிரியர் : க. பாலேந்திரா
வெளியீடு : எங்கட புத்தகங்கள்
அட்டை வடிவமைப்பு :
ஓவியம் : வாசுகன்
பக்க வடிவமைப்பு: எஸ்.ரி. ரிஸ்னுகன்
பக்கம் : 212
விலை : ரூபா 950/=
அச்சுப் பதிப்பு : நியூ எவகிறின் அச்சகம்.

பாலேந்திராவின் தொகுப்பில் இடம்பெறும் ஏழுநாடகப் பனுவல்களும் பதிவுகளும் பலரும் பகிரப்படவேண்டிய நாடக நூல். இப்பனுவல்கள் மீண்டும் மீண்டும் நாடகர்கள் பலராலும் பலகாலும் தொடர் மேடையேற்றங்களைவேண்டி எங்கள் கரங்களில் தவழுகின்றன.

இந்நூலின் மூலம் சர்வதேச நாடக விற்பன்னர்களுடன் நிஜத்தில் உரையாட உறவாட இடமுண்டு.

இலக்கியத்துக்காக நோபல்பரிசு பெற்ற லண்டன் ஹரோல்ட் பின்ரர், பிரபல நாடகாசிரியர் அன்ரன் செக்கோவ், அவைக்காற்றுக் கலைக் கழக நடிகர் ச.வாசுதேவன், கழகத்தின் மூலஸ்தானம் க. பாலேந்திரா, கவிஞர், எழுத்தாளர் செக் குடியரசின் முன்னாள் அரச தலைவர் வஸ்லவ் ஹாவல், வங்காள எழுத்தாளர் ரஞ்சித்ரேய் சௌத்ரி, ஞானச்செல்வி சிவரத்தினம் () ஆகியோருடன் அளவளாவி மகிழும் வாய்ப்பு இந்நூல் மூலம் எமக்கு வாய்க்கிறது.

நாடகப் பனுவல்கள் நாடக அரங்கில் நிழலுரு நீங்கி நிஜங்களாக உயிர்பெற்று எம்முடன் உறவாடும் அரங்க அநுபவத்தை பாலேந்திரா+ ஆனந்தராணி இணையர்களின் கலைப்பயணத்தின் ஐம்பது ஆண்டுகளின் அடையாளமாக இந்நூல் வெளிவந்து எம்மை குதூகலிக்கச் செய்கிறது.

'இத்தொகுப்பில் மொழிபெயர்ப்பு நாடகங்கள், புதிதாக எழுதப்பட்ட நாடகங்கள்,புத்துருவாக்க முறையில் எழுதப்பட்ட நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. (பக். )

'புலம்பெயர் நாடகங்களில், மொழிபெயர்ப்பு என்பது வெறும் சொற்கள் மட்டுமன்றி, ஒரு பண்பாட்டு மீள்சூழமைவாக்கம் (Recontextualization) ஆகும்' என்பது கலாநிதி நவதர்ஷினி கருணாகரனின் கருத்தாகும். (பக். 8).

'புலம்பெயர் நாடக மரபை ஆவணப்படுத்தும் ஒரு ஆவணமாகவும், வரலாற்றுச் சாட்சியாகவும் பாலேந்திரா ஆனந்தராணி எனும் இணையரின் நாடகப் பயணத்துக்கான ஆவணமாக அமைகிறது. (பக்–9)

நாடகர் ஸ்ரீஸ்கந்தனின் அணிந்துரையும் 'நம்மவர் கதைகள்' என்ற மகுடத்தில் ஏழுநாடகங்கள் பற்றிய புரிதலைச் செய்துள்ளார்.

மொழிபெயர்ப்பில் சி. சிவசேகரம், ஞாநி ஆகியோரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள ஏழு நாடகங்களின் பனுவல்கள் மட்டுமன்றி, மேடையேற்றிய நாடுகள், நகரங்கள், பங்குபற்றிய நடிகர்கள், அரங்க ஆற்றுகைகள் பற்றிய விமர்சனக் குறிப்புகள் என சகல பதிவுகளும் வரலாற்றுப் பதிவுகளாகின்றன.

இந்நாடகங்கள் சுவிற்சர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, இந்தியா, இலங்கை, நோர்வே, ஜேர்மனி, ஒஸ்ரேலியா, ஒல்லாந்து ஆகிய பத்து நாடுகளில் பல தடவைகள் மேடையேற்றப்பட்டுள்ளன.

மேலும், இந்நூலில் நாடகப்பாத்திரங்களின் படங்களை அச்சிட்டு, அப்பாத்திரங்கள் பேசிய வசனங்களையும் போட்டிருப்பது வாசிப்பைத் தூண்டும் ஒரு புதிய யுக்தியாகும்.

1. 'போகிற வழிக்குஒன்று' நாடகத்தில் ச.வாசுதேவன், சசிகலா வாசுதேவன், த. ராஜேந்திரன், ஆனந்தராணி பாலேந்திரா, லிங்கேஸ்வரன், க.பாலேந்திரா பங்குபற்றினர்.

2. 'சம்பந்தம்' நாடகத்தில் அ. பரமேஸ்வரன், சுகன்யா, ஞானஸ்கந்தன், சி. சாந்தகுணம், மனோ மனுவேற்பிள்ளை, பா. சந்தியேந்திரன், கு. ரமேஸ், ஆனந்தராணி, ச. வாசுதேவன் பங்கேற்றனர்.

3. 'காத்திருப்பு' நாடகத்தில் ஆனந்தராணி, க.கிருஷ்ணராஜா, ச. வாசுதேவன், சஞ்ஜீவ்ராஜ், வி.சிவசுதன், மனோ மனுவேற்பிள்ளை. கு. ரமேஷ், சந்தோஷ ஆனந்தன், சாருஷன் வாசுதேவன் ஆகியோர் பங்குபற்றினர்.

4. 'பார்வையாளர்' நாடகத்தில் ஜனார்த்தனன், கே.விஜயன், சீ. ராஜ்குமார். ந.கமலகாந்தன், சபேஸ் சுகுண சபேசன், ஆனந்தராணி, பா. சத்தியேந்திரன் ஆகியோர் நடித்தனர்.

5. 'பிரத்தியேகக் காட்சி'யில் மனோ மனுவேற்–பிள்ளை, ஆனந்தராணி, க. கிருஷ்ணராஜா, பா. சத்தியேந்திரன், ச. வாசுதேவன் ஆகியோர் நடிகர்களாவர்.

6. 'தரிசனம்' நாடகத்தில க. பாலேந்திரா, க.கிருஷ்ணராஜா ஆகியோர் பாத்திரமேற்றனர்.

7. 'பாரத தர்மம்' நாடகத்தில் க. கிருஷ்ணராஜா, ஆனந்தராணி, நிர்மலா, சி. சாந்தகுணம், பாலாம்பிகை வீரவாகு ஆகியோர் பங்கேற்று நடித்தனர்.

விமர்சனக் குறிப்புகளை, Tamil times எஸ். சிவபாதசுநரம், சி. சிவசேகரம், சி. அமுதன், பைரவி (தமிழோசை), அ. சிவபாதசுந்தரம், உயிர்நிழல், கலைச்செல்வன், லிங்கா தர்மலிங்கம் (மஞ்சரி, கனடா), Dr. சிறீகரன், சபேஸ் சுகுணசரூபகன், எஸ். மகரா சிங்கம், த.பாலகணேசன், தேவபுத்திரன், லண்டன் தமிழன், தமிழன் வானம்பாடி, நாரந்தனையூர் ஆ. சபாரத்தினம், கோப்பாய் சிவம், மு. புஸ்பராஜன் (காலச்சுவடு), அ. இரவி, யமுனா ராஜேந்திரன் ஆகியோர் எழுதியுள்ளனர்.

ஐன்ஸ்டீன் – 'பிரபஞ்சத்தின் மையம் நானே என்பதில் விடுதலை

ஸ் ரீபன் ஹொக்கிங் பால் மண்டலத்தில் ஒருசிறு சூரியக் குடும்பத்தில் மனிதர் இரசாயனக் குளம்பு. எனவே ஒன்றுமில்லை nothing விட்டுவிடுதலை என பாரதி பாடியபடி நான் என்பதிலிருந்து விடுதலை பெற்றால்– இந்நாடகங்களில் சுட்டும் விடுதலை பெற்றால் இந்நாடங்களில் சுட்டும் கதாமாந்தரின் துன்பத்திலிருந்து விடுதலை பெறலாம் என்பதுடன் அறிவு, மானம், சுயமரியாதை, சமூகநீதியை நிதர்சனமாக்கமுடியும்.


*'எங்கட புத்தகங்கள்' ஏற்பாட்டில் 'பிரத்தியேகக் காட்சிகள்' நூல் அறிமுக நிகழ்வு*



# இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்ரர் வன்முறையும் வரலாறு ஒளித்துவைத்திருக்கும் உண்மைகளும்

## – சுனந்த தேசப்பிரியவின் "உயிர்த்த ஞாயிறு தாக்குதல்" நூலை முன்வைத்த ஒரு அலசல்

*எஸ். தனுஜன்*




உயிர்த்த ஞாயிறு தாக்குதல் – ஆழ் அரசின் நிழலுருவும் தீர்க்கப்படாத மர்மங்களும் என்ற தலைப்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர், எழுத்தாளர், மனித உரிமைச் செயற்பாட்டாளர் சுனந்த தேசப்பிரிய அவர்களால் சிங்களத்தில் எழுதப்பட்டு (2024) செல்லையா மனோரஞ்சன் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு (2025) 'நாங்கள்' வெளியீடாக பிரசுரிக்கப்பட்டுள்ள இந் நூல், அண்மையில் (2019 ஏப்ரல் 21) இலங்கையில் இடம்பெற்ற மிகவும் அழிவை ஏற்படுத்திய ஈஸ்ரர் தின தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களின் பின்னால் இருந்த பிரதான குற்றவாளிகளை இனங்காட்ட முயல்கின்றதொரு முக்கியமான ஆய்வாக உள்ளது.

ஈஸ்ரர் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டோர் சார்பில் தொடரப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழு, பாராளுமன்றத் தெரிவுக் குழு ஆகியவற்றின் அறிக்கைகள், பாராளுமன்ற விவாதங்கள், உரைகளின் ஹன்சாட் அறிக்கைகள், றொஹான் குணவர்த்தன, ராஜன் கூல் ஆகியோரின் புத்தகங்கள், பத்திரிகைச் செய்திகள் மற்றும் கட்டுரைகள் குறிப்பாக டி.பி. எஸ்.ஜெயராஜ் இன் ஆங்கிலக் கட்டுரை ஆகிய பல ஆவணங்கள் மிகவும் நுணுகி ஆராயப்பட்டு இந் நூல் ஆக்கப்பட்டுள்ளமை அதன் கனதியை அதிகரிக்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்குப் பொறுப்பாய் இருந்து வழிநடத்திய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும், அதற்காகப் பல்வேறு பழிவாங்கும் நடவடிக்கைகளை எதிர்கொண்டவரும், இன்றைய புதிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் மீளவும் அவ் விசாரணைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளவருமான சிரே';ட பொலிஸ் பரிசோதகர் 'hனி அபேசேகர அவர்கள், இப் புத்தகம் பற்றி,

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சுனந்த தேசப்பிரியவின் புத்தகத்தை நான் முழுமையாகப் படித்தேன். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஆர்வமுள்ள அனைவரும் இந்தப் புத்தகத்தைப் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது மிகவும் சிக்கலான மற்றும் முக்கியமான தகவல்களைக் கொண்டது."

என அப் புத்தகத்தின் முதற் பக்கத்திலேயே சிபாரிசு செய்கின்றார்.

இந் நூலைத் தமிழில் கொண்டுவருவதற்கான காரணத்தைத் தனது மொழிபெயர்ப்பாளன் குறிப்பில் செல்லையா மனோரஞ்சன் அவர்கள்,

"இலங்கையின் அரசியலில் பதவியில் இருந்த ஒரு அரசாங்கம், அதன் சட்டபூர்வ பாதுகாப்பு படைகள், உளவுப் பிரிவுகள், சட்டவிரோத சிங்கள–தமிழ் ஆயுதக் குழுக்கள் மற்றும் அரச நிர்வாகம் என சகலதும் ஒன்றுடன் ஒன்று நேரடியாகவும் மறைமுகமாகவும் இணைந்தும், இணையாது தனித்தனியாகவும் எப்படி ஒரு மோசமான மக்கள் விரோத அரசியலை நடத்துகிறார்கள் என்கின்ற மிகச் சிக்கலான "குற்றவியல் அரசியல் நடைமுறை" எப்படி இருக்கிறது என்பதை தமிழ் மக்களும் புரிந்துகொள்ள வேண்டும்." (பக். 6)

எனக் குறிப்பிடுகின்றார்.

இவ் அழிவுகளுக்கு அடிகோலிய ஆழ் அரசின் கைக்கூலிகளாக அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி நிலந்த ஜெயவர்த்தன, அவரைப் பதவியில் அமர்த்திப் பாதுகாத்த சனாதிபதி மைத்திரிபால சிரிசேன, நிலந்த ஜெயவர்த்தனவிற்குப் பக்கபலமாய் இருந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் இருந்துள்ளனர் என்ற சந்தேகத்தை வலியுறுத்துவதன்மூலம், சுனந்த தேசப்பிரிய

பாரிய சதியின் ஒரு பகுதியாக இத் தாக்குதல்கள் இருந்திருப்பதனை ஆதாரங்களுடன் நிறுவ முயன்றுள்ளார்.

இப் புத்தகத்தின் நடுப் பகுதியில் நூலாசிரியர்,

"உண்மையில் இங்கு அதுதான் நடந்துள்ளது. தாக்குதல் மேற்கொள்ளப்படும் எனத் தெரிந்திருந்தும், அவர்கள் அனைவரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், மக்கள் படுகொலை செய்யப்படும் வரை பார்த்துக்கொண்டிருந்தார்கள்." (பக். 161)

எனக் குறிப்பிடுவதன் மூலமும், இறுதிப் பகுதியில் இதுவரை விடை காணப்படாத, இத் தாக்குதல் தொடர்பான விசாரணை நிறைவடைய வேண்டுமாயின் அவசியம் விடை காணப்படவேண்டியதான இருபத்தைந்து வினாக்களை முன்வைப்பதன் மூலமும் வெளிப்படுத்த முயல்கிறார்.

அதேநேரம், இந் நூலின் இடைவெளிகளையும் ஆராயவேண்டியது இங்கு மிகவும் அவசியமானதாகும். அந்தவகையில் கீழ்வரும் வினாக்கள் எழுவது தவிர்க்கப்படமுடியாததாகின்றது.

### *ஈஸ்ரர் தாக்குதல்களின் வரலாற்றை வெறுமனவே சஹ்ரானில் இருந்து மாத்திரம் தொடங்க முடியுமா?*

இந் நூலில் இதன் ஆசிரியர் இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாத சிந்தனையின் ஆரம்பம் மற்றும் பின்புலம் தொடர்பாகப் பெரிதாக அக்கறை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. யுத்த காலத்தில் புலனாய்வு மற்றும் எல்லைப்படைத் தேவைகளுக்காகச் சில இஸ்லாமியர்கள் ஆயுதபாணிகள் ஆக்கப்பட்டமையை மாத்திரம் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், ஈஸ்ரர் வன்செயலின் வரலாற்றை தேசிய தஃவித் ஜமாத் என்ற பெயரிலான சஹ்ரான் குழுவினரினால் சுதேசிய சூபி முஸ்லிம்களிற்கு எதிராகக் காத்தான்குடியில் 2017 இல் நடாத்தப்பட்ட வன்முறைகளில் இருந்தே தொடங்குகின்றார்.

ஆனால், 1980 களில் இருந்து முஸ்லீம் மக்கள் மத்தியில் முழு வீச்சுடன் முன்னெடுக்கப்பட்ட வாஹாபியிச சிந்தனையின் திணிப்பும், அதிக பொருட்செலவில் மேற்கொள்ளப்பட்ட அதன் பரவலாக்கமும், 2017, 2018 களில் நாடு முழுவதும் முஸ்லீம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாத வன்செயல்களும் இவ் விடயத்தில் இன்னும் அதிகமாக கவனத்தில் கொள்ளப்படவேண்டிய வரலாற்றுக் காரணிகளாக அமைகின்றன.

### *சிலவற்றை மாத்திரம் வலிந்து நிறுவும் முயற்சியாக அமைகின்றதா இந் நூல்?*

இத் தாக்குதல் தொடர்பான இந்தியப் புலனாய்வுப் பிரிவால் வழங்கப்பட்ட தகவல்களை வேண்டுமென்றே மறைத்ததாகச் சந்தேகிக்கப்படும் அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி நிலந்த ஜெயவர்த்தன மற்றும் தான் தப்பினால் போதும் எனப் பாதுகாப்பு அமைச்சினைப் பதிலாள் ஒருவரிடம் பொறுப்பளிக்காது வெளிநாட்டுக்குச் சென்ற மைத்திரிபால சிறிசேன ஆகியோரை மாத்திரம் மிகவும் அதிகமாகக் குற்றம் சாட்டும் போக்கு இப் புத்தகத்தில் வெளிப்படுகின்றது. அத்துடன், பாதுகாப்பு செயலர் மற்றும் பொலிஸ்மா அதிபர் மீதும் விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், பிரதானிகளின் பாதுகாப்புப் பிரிவைச் (MSD) சேர்ந்த அனைத்து அதிகாரிகளுக்கும் இத் தகவல் தெரிந்திருந்தமை ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, பாதுகாப்பு மற்றும் அரச பதவிகளில் அப்போதிருந்த அநேகர் இதற்கான பொறுப்பாளிகள் ஆவர். குறிப்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முப்படைத் தளபதிகள், சிரேஷ்ர பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் என அப் பட்டியல் நீண்டு செல்லும்.

### *இந்தியக் கரங்கள் இதில் ஊடுருவி இருக்கவில்லையா?*

2019 ஏப்ரல், மே மாதங்களில் இந்திய பொதுத் தேர்தல் இடம்பெற இருந்தது. மத அடிப்படைவாத சிந்தனை, இஸ்லாமிய வெறுப்பு ஆகியவற்றை வைத்து ஆட்சி நடத்தி வந்த பாரதிய ஜனதா கட்சிக்கு இத் தேர்தல் அவ்வளவு சாதகமானதாக அமையுமா என்ற சந்தேகம் காணப்பட்டது. அதற்கு அண்மித்து 2019 பெப்ரவரி 14 இல் இடம்பெற்ற புல்வாமா பயங்கரவாதத் தாக்குதல் மோடி அரசுக்குப் பெரியளவில் சாதகமாக அமையவில்லை. அவ் இறப்புகளுக்கு அரசாங்கத்தின் தவறே காரணம் எனப் பரவலாகக் குற்றம்சாட்டப்பட்டது. எனவே, அவர்களின் வெற்றியை உறுதி செய்ய இன்னொரு இஸ்லாமியப் பயங்கரவாதத் தாக்குதல் தேவைப்பட்டது. அதற்காகப் பயன்படுத்தப்பட்டதே அபுகிந் என்கிற செயற்திட்டம், என அரசியல் நோக்கர்கள் பலர் தமது அவதானிப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

இத் தாக்குதல்கள் இடம்பெறுவதற்குப் பதினைந்து தினங்களுக்கு முன்னர் இந்திய புலனாய்வுப் பிரிவு வழங்கிய தகவல்கள், தாக்குதல் நடத்த உள்ள நபர்கள் பற்றிய சரியான விபரத்தினைக் கொண்டிருந்த அதேநேரம், தாக்குதல் இலக்குகள் தொடர்பில் குழப்பகரமானதாக இருந்துள்ளமை அவதானிக்கத்தக்கது. குறிப்பாக மைத்திரி, கோத்தாபய கொலைச் சதி எனவும், இறுதி நேரத்தில் இந்திய தூதரகம் மற்றும் கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த தேவாலயம் ஆகியனவே தாக்குதல் இலக்குகள் எனவும் மாறி, மாறிக் குறிப்பிடப்பட்டு வந்தது. ஆனாலும் அவ் வேளையில்

இலங்கையில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் கைது செய்யப்படுவது கூட அவர்களது பிரச்சாரத்திற்குப் போதுமானதாய் இருந்திருக்கலாம்.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்திய பிரதமரைத் தீர்மானிக்குப் பொதுத் தேர்தலின் 7 கட்ட வாக்கெடுப்பில் இரண்டு கட்டங்களே ஏப்ரல் 11, 18 ஆகிய திகதிகளில் நிறைவுபெற்றிருந்தன. 545 ஆசனங்கள் கொண்ட லோக்சபாவில் 148 உறுப்பினர்களின் தெரிவிற்கான தொகுதிகளின் தேர்தல்கள் மட்டுமே முடிவடைந்திருந்த நிலையில், தீர்மானகரமானதொரு தருணத்தில் மக்களைத் திசை திருப்பும் தேவை, ஆட்சியைப் பிடிக்கும் அவாவில் இருந்தோருக்கு அவசியமாக இருந்துள்ளது என ஊகிக்கலாம்.


இதேபோன்றதொரு சம்பவம் 1991 ஆம் ஆண்டு இந்தியப் பொதுத் தேர்தலின்போது இடம்பெற்றதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுவர். அதாவது முதற்கட்ட வாக்குப் பதிவு முடிவடைந்த நிலையில் மே 20 ஆம் திகதி ராஜீவ் காந்தி கொலை இடம்பெற்றது. இது இடதுசாரிகளின் வெற்றியைத் தடுக்க முன்னெடுக்கப்பட்ட கூட்டுச் சதி என அவர்களால் குறிப்பிடப்படுகின்றது. ஏனெனில், முதற்கட்ட வாக்களிப்பில் இடதுசாரிக் கட்சிகளின் வேட்பாளர்கள் அதிகம் வெற்றிபெற்றிருந்தனர்.

மேலும் ஈஸ்ரர் தாக்குதல்கள் இடம்பெற்ற வேளையில், குறிப்பிட்ட பகுதிகளில் சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடிய இந்தியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். இச் சம்பவத்தினை இந் நூலாசிரியர்,

> "மனவளர்ச்சி குன்றிய மார்சலின் தோமஸ் என்ற இந்தியரும் சிறிசேனவை கொலை செய்வதற்கான திட்டத்தில் ஈடுபட்டதற்காகக் கைது செய்யப்பட்டார்." (பக். 242)

எனக் குறிப்பிடுகின்றார். ஆனால், பின்னர் மிக விரைவாக அவர் விடுவித்து விடுதலை செய்யப்பட்டார். இலங்கைக்கு வந்து முக்கியமானதொரு சுற்றாடலில் மிகவும் பாதுகாப்பாக நடமாடிய ஒருவரை மனவளர்ச்சி குன்றியவராக எந்த மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் முடிவெடுத்தார்கள் என்பது இதுவரை புரியாத புதிரே. பொதுவாகவே புலனாய்வாளர்கள் தம்மை மனவளர்ச்சி குன்றியவர்கள் போலப் பாவனை செய்து தப்பித்தலானது, மிகவும் மலிவான பழைய உத்தி என்பது பலரும் அறிந்தது.

சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப்படத்தில் பிள்ளையானின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் ஹன்சிர் அசாத் மௌலானாவால் இத் தாக்குதலின் சூத்திரதாரிகளில் ஒருவர் எனச் சுட்டப்பட்ட அரச



புலனாய்வுப் பிரிவின் தலைவராகப் பின்னர் பதவி வகித்த மேஜர் ஜெனரல் சுரேஸ் சலே அவர்கள் ஏப்ரல் 21 இல் இந்தியாவில் இருந்துள்ளார். (பக். 279)

அப்போதைய சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இக் காலப்பகுதியில் இந்தியா சென்றே சிங்கப்பூர் சென்றுள்ளார்.

இதேபோன்ற மிக அண்மைய உதாரணமான, 2022 இல் சனாதிபதியாக இருந்த கோத்தாபய ராஜபக்சவை விரட்டியடித்த மக்கள் எழுச்சியின்போது, அவரது அதிகாரத்தைப் பாதுகாக்க மறுத்த இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் அவ்வேளை இந்தியாவில் இருந்தே இறுதி நாட்களில் இலங்கை வந்தமையானது தற்செயலானதாக இருக்க வாய்ப்பில்லை.

இந்திய முதலாளிகளுக்குச் சொந்தமானதாகக் கருதப்படும் தாஜ் சமுத்திரா ஹொட்டேலில் வெடிக்கவேண்டிய தற்கொலைக் குண்டுதாரி, கடைசி நேரத்தில் வெளியில் இருந்து கிடைத்த கட்டளைக்கு இணங்க, குண்டுகளை வெடிக்க வைக்காது கொண்டு சென்று, தெகிவளையில் இருந்த சிறிய விடுதி ஒன்றின் அறையில் வைத்து தனிமையில் வெடிக்கச் செய்து இறந்தமையைச் சுட்டிக்காட்டிய தயாசிறி ஜெயசேகர போன்ற அரசியல்வாதிகள் இது விசேடமாக ஆராயப்படவேண்டியது எனப் பாராளுமன்றத்தில் மீள மீள வலியுறுத்தி வந்தமையும் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமொன்றாகும்.

அதேநேரத்தில் இன்னொரு ஹொட்டேலில் தங்கியிருந்த இந்தியர்களான காங்கிரஸ் கூட்டணியைச் சேர்ந்த கர்நாடகா அரசியல்வாதிகள் ஏழு பேரும் இத் தாக்குதலில் இறந்துள்ளனர். இவர்கள் தமது

தொகுதிகளில் வாக்கெடுப்பு முடிந்திருந்த நிலையில் இலங்கைக்கு ஓய்வெடுக்க வந்ததாகச் சொல்லப்பட்டது.

அத்துடன் இத் தாக்குதலின் இன்னொரு சூத்திரதாரி எனப் பரலாகச் சந்தேகிக்கப்படும் சாறா ஜஸ்மின் என்ற பெயரை இஸ்லாத்திற்கு மதம் மாறிய பின்னர் பெற்றுக்கொண்ட புலஸ்தினி மகேந்திரன் என்ற தமிழ் யுவதி, இரண்டு பொலிசாரின் துணையுடன் மன்னார் ஊடாக இந்தியாவிற்கு உயிருடன் தப்பிச் சென்று தலைமறைவாய் உள்ளதாகச் சொல்லப்படும் கதைகளும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கன. அவரை மன்னார் வரை அழைத்துச் சென்றதாக அப்போதைய காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன.

மேலும் மன்னார் வளைகுடாப் படுக்கையில் கனிய எண்ணெய் வள ஆய்விற்காகவும் அகழ்வு நடவடிக்கைகள் தொடர்பில் திட்டமிடவும் வருகைதந்திருந்த சீன விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் சிலர் சங்றிலா ஹொட்டலில் இடம்பெற்ற இரண்டு தற்கொலைத் தாக்குதல்களிலும் இலக்கு வைக்கப்பட்டதாகப் பரவலாக அவதானிப்புகள் முன்வைக்கப்பட்டன. இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்ததாக பிபிசி அறிக்கையிட்டுள்ள செய்தியில் ஒருவர் இறந்துள்ளதாகவும், ஐவர் காணாமல் போயுள்ளதாகவும், ஐவர் படுகாயமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களுடன் துருக்கியைச் சேர்ந்த இரண்டு பொறியியலாளர்களும், போர்த்துக்கல் நாட்டைச்சேர்ந்த பொறியியலாளர் ஒருவரும் இறந்ததாக பிபிசி அறிக்கையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***அமெரிக்க ஏகாதிபத்தியம் இதில் தொடர்புபட்டிருக்க வாய்ப்பில்லையா?***

இத் தாக்குதலில் இறந்தவர்களில் இருவர் அமெரிக்கர்.

அதேநேரம், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் ஏனைய இஸ்லாமிய இயக்கங்கள் போன்று இஸ்ரேலுக்கு எதிராக எந்த முன்னெடுப்புகளையும் மேற்கொள்ளவில்லை என்பதும், சிரியாவின் முன்னைய பசார் அல் அசாத் ஆட்சிக்கு எதிராகவும், குர்திஸ்தான் விடுதலைப் போராளிகளுக்கு எதிராகவுமே பெரியளவில் யுத்தத்தினை முன்னெடுத்தார்கள் என்பதும் சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் சந்தேகத்தினைக் கிளப்பிய விடயமொன்றாக விளங்கியது. எனவே, அவர்களுக்குப் பின்புலமாக இஸ்ரேலியப் புலனாய்வு அமைப்பான மொசாட் இருந்திருக்கலாம் என்ற சந்தேகமும் வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ஆகவே, இஸ்ரேலின் இரட்சகராக உள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பின்புலம் இதற்குள் இருப்பதற்கு வாய்ப்புகள் இல்லாமல் இல்லை.

அத்துடன் இத்தாக்குதலின் சாதக விளைவு, அமெரிக்க குடியுரிமை பெற்றவரான கோட்டாபயவுக்கு அனுகூலமாய் அமையும் என்ற கணிப்பீடு அனேகரிடம் தெளிவாக இருந்துள்ளது. ஏனென்றால், அடுத்து வர இருந்த சனதிபதித் தேர்தலில் இலங்கை மக்களிடம் வேறு தெரிவு இருந்திருக்கவில்லை.

அதன் பின்னர் இடம்பெற்ற அரகலய போராட்ட காலத்திலும், அடுத்த சனாதிபதியாக முதலாளித்துவ அமெரிக்க அதிகார பீடத்தின் முழுமையான விசுவாசியான ரணில் விக்கிரமசிங்கவைப் பதவிக்குக் கொண்டுவருவது வரையில், இலங்கையில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளின் அளவுக்கு அதிகமான தலையீடும் அனைவரும் அறிந்ததே.

நிறைவாக நோக்குகின்றபோது, மிகவும் அவசியமானதொரு நேரத்தில் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் தெளிவைக் கொடுக்கவும் இந் நூல் மூலமாக சுனந்த தேசப்பிரிய அவர்கள் முக்கியமானதொரு வரலாற்றுப் பணியை முன்னெடுத்துள்ளார் என்பது பாராட்டுக்குரியது. இப் புத்தகம் இன்னுமின்னும் அதிகமாகப் பரவலடையவெண்டியது காலத்தின் கட்டாயம்.

இயற்கையை ரசிக்க ரசிக்க
இந்த வாழ்க்கையில் நம்பிக்கை அதிகமாகிறது.
அதனால் தான் ஒரு விவசாயி
இயற்கை எழில் மிகுந்த கிராமத்தில்
மிகுந்த நம்பிக்கையுடன் வாழவும்
சாதிக்கவும் முடிகிறது.

– லூயி பாஸ்டர்

*சிறுகதை :*

# செவ்வாய் தோஷம்

**இதயராசன்**



காற்றோடு காற்றாக மெல்லிய ஒலி அலைகள், செவிப்பறைய ஊடறுத்து, மூளையில் பதிவதை என்னால் உணர முடிகின்றது. விழிகளைத் திறந்து பார்ப்பதற்கு முடியவில்லை என்று, என்னால் திடமாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் எதனையும் கண்திறந்து பார்க்கும் துணிச்சல் எனக்கு அறவே இல்லை என்பதே உண்மை நிலைமையாகும்.

கண்ணைத் திறந்து பார்க்க அச்சப்படும் என்னால், உடல் உறுப்புக்களை அசைத்துப் பார்க்கும் துணிச்சல் வருமா? கையில் குளுக்கோசோ, மருந்தோ ஏறிக்கொண்டிருப்பதான மெல்லிய வலியை என்னால், உணர முடிகின்றது.

நான் இப்பொழுது மருத்துவ மனையில் நவீன மருத்துவ உபகரணங்களோடு, கண்காணிக்கப் படுகின்றேன் என்பதைச் சுற்றாடலிலுள்ள ஒலி அலைகள் உறுதியாகத் தெரிவிக்கின்றன. எனக்கு இப்போது உடலாற்றலும் மனவாற்றலும் நிறையவே தேவைப்படுவதை உணர்கின்றேன்.

அறிதுயில் நிலையில், சுற்றாடலின் ஒலி அலைகளை உள்வாங்கியபடி, எனது நிலையின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதற்காக, அறிவையும் அனுபவத்தினையும் துணையாக இறுகப் பற்றிக் கொள்கின்றேன்.

எல்லாமே கைமீறிப் போன பின்னரே, ஞான நிலை வாய்க்கும் என்று புத்தகங்களில் வாசித்தது, ஞாபகத்தில் உதைக்கின்றது.

'எல்லாம் தெரிந்த பல்லி, கூழ்ப்பானையில் விழுந்தது போல'

என்று, ஆச்சி அடிக்கடி சொல்லும் பழமொழி, ஞாபகத்திற்கு வந்து தொலைக்க, ஆச்சி என்னைப் பார்த்து முறைப்பது போல் தோன்றுகின்றது.

பட்டதாரி ஆசிரியை ஆகிய எனது வாழ்வினைச் சரியாக அமைத்துக் கொள்ள முடியாத, அபலையாகிப் போனதை, நினைத்துப் பார்க்கவே என்மீது, மீண்டும் மீண்டும் வெறுப்பு அலைகள் திரண்டெழுந்து, அந்தகார இருளில் மூழ்கடிக்கின்றது.

பிஞ்சுக் கால்களில் தளர்நடை பயின்ற பொழுதில் உற்சாகமூட்டி, ஆசையோடு அப்பாவும் அம்மாவும் அணைத்துக் கொண்ட சுகமான நினைவுகள், பட்டாம் பூச்சியாகச் சிறகடிக்க, வாழ்வின் மீதான ஒட்டுதல் மீண்டும் துளிர்க்கின்றது.

எனக்கென்று பிரச்சினை வரும்போது, எல்லாமே முடிந்ததென தற்கொலைக்கு எப்படித் துணிந்தேன் என்பதை, என்னால் இப்பொழுதும் ஜீரணிக்க முடியவில்லை. எனது பெற்றோர் நிலை எப்படி இருக்கும் என்பதை நினைக்கவும் முடியவில்லை.

நான் எனது பெற்றோருக்கு ஒரேயொரு செல்லப் பெண். ஆனால் என்னிடம் எப்பொழுதுமே அகங்காரம் எட்டியும் பார்த்ததில்லை.

அப்பா அம்மா சொந்தமாக விவசாயம் செய்கின்றனர். நாம் கிராமத்திலே ஓரளவு வசதியான குடும்பமாக வாழ்கின்றோம். எனது விருப்பப்படி நகரத்திலுள்ள பிரபல்யமான பெண்கள் பாடசாலையில் படிக்க ஆரம்பிக்கும் பொழுதே, அப்பா, நகரத்தில் ஓரளவு வசதியான வீட்டினை விலைக்கு வாங்கியதோடு, கொஸ்ரல் வாழ்க்கைக்கு முழுக்குப் போட்டு அம்மாவுடன் எல்லா சௌகரியங்களையும் அனுபவித்தே வாழ்கின்றேன்.

அம்மா அடிக்கடி என்னிடம் சொல்வார் நாங்கள் ஆரம்பத்தில் கூலி விவசாயிகளாகவே வாழ்க்கையைத் தொடங்கினோம். ஆனால் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஒரு கனவானின் நிலத்தை குத்தகைக்கு எடுத்து, கடின உழைப்பை நல்கியதோடு, அப்பாவுக்கு

உதவியாகத் தானும் உழைத்ததால், சொந்தமாக நிலம்வாங்கி, வசதியாக வாழமுடிந்ததைச் சொல்வார்.

நான் சிறுமியாக இருக்கும் பொழுதிருந்து சாதாரண மக்களுடனும் சிறுவர்களுடனும் பழகுவதையே பெற்றோர் விரும்பினர். உயர்வகுப்பிலிருந்து, பல்கலைக் கழகம் வரை சென்ற போதிலும் எனது நண்பிகள் எத்தகையவர்கள் என்று ஆராய்ந்து பார்ப்பதில், எவ்விதமான நாகரிகமும் அம்மா பார்க்கமாட்டார். எனது நண்பிகள் வாழ்வின் கஷ்டம் உணர்ந்தவர்களா? படிப்பின் முக்கியத்துவம் தெரிந்தவர்களா? என்றுதான் பார்ப்பார்.

அம்மாவினதும் அப்பாவினதும் விருப்புக்கு மாறாக நான் எதனையும் செய்ததும் இல்லை. நினைத்ததும் இல்லை. அவர்கள் எனக்காகவே வாழ்கின்றனர் என்ற நினைப்பு எப்பொழுதுமே என் சிந்தையில் நிறைந்திருந்தது

நான் என்னவோ சொல்லவந்து, என்னமோ சொல்கின்றேன். எனக்கு இருபத்தாறு வயது முடியும் போதே, திருமணத்திற்கு வரன்தேடும் படலம் ஆரம்பமாகியது. அம்மா அடிக்கடி சொல்வார் எதுவும் காலாகாலத்தில் நடக்கவேண்டும் என்று. அம்மாவின் உபதேசத்திற்குப் பயந்தே திருமணத்திற்குச் சம்மதம் சொல்லிவிட்டேன்.

புறோக்கரிடம் சாதகம் கொடுத்த போதே, வீட்டிற்கு அதிஸ்ட தேவதையான நான், செவ்வாய் தோஷம் பிடித்த, மணவாழ்வுக்கு உதவாதவள் என்ற விஷயம் தெரியவந்தது. எனது இலக்கினத்திற்கு ஏழாம் வீட்டில் செவ்வாய் நிற்பதோடு, ஏழரைச் சனியும் தொடர்வதால், அப்படியான மாப்பிளையின் சாதகத்தைத் தேடிப்பிடித்தே பொருத்தம் பார்க்க வேண்டும். அப்போதான் திருமணம் நிலைக்கும் என்று, பிரபல்யமான சோதிடர்கள் சொன்னதற்கு மேல் யார் பேச்சு, பல்லக்கேறும்.

எனது விதியை நோவதைத் தவிர வேறொரு வழியுமில்லை. ஒவ்வொரு தோஷத்திற்கும் பரிகாரம் உண்டென்று, பரிகார பூஜைகளைக் கோவிலில் பார்த்த ஞாபகங்கள் வந்தபோது, அம்மாவிடம் கேட்டும் பார்த்தேன். அழுத மூஞ்சியுடன் அம்மா மறுத்து தலையாட்டியதைச் சகிக்க முடியாமல் அந்தப் பேச்சை ஒருநாளும் எடுத்ததே இல்லை.

இளமையிலிருந்து கேட்காமலே கிடைத்த வசதிகள் வாய்ப்புக்கள் எல்லாம் கானல்நீராகிப்போனது. அறுசுவை உண்டியைக் கையருகில் கொண்டுவந்து பக்கத்துப் பந்திக்குப் பரிமாறுவது போலிருந்தது. எனது மன அழுத்தம் தலையைக் குடைவது ஒருபுறம் இருக்க, அம்மா அப்பாவின் வேதனை தோய்ந்த முகத்தினை ஆற்றுவதற்காக, சிரித்து நடிக்க வேண்டிய கட்டாய நிலையும் ஏற்பட்டது.

கவலைகள் சூழ்ந்த வீட்டில் மகாலட்சுமி சென்று பல வருடங்களாகி, எனக்கு முப்பத்து மூன்றாவது பிறந்ததினமும் கடந்துபோக, நள்ளிரவு பிறந்நாள் வாழ்த்துகள், கேக்வெட்டுதல் இல்லாமல், ஏன் பிறந்தாய் மகளே! என்ற சோக கானம் என்னைச் சூழ்ந்து கொண்டது.

ஒரு நாள் பக்கத்து ஊர் புறோக்கர் புழுகத்துடன் வீட்டிற்குள் வலது காலை எடுத்துவைத்த வாறே, தனது புராணத்தைத் தொடங்கினார்.

."அம்மா! சீதேவிக்கு நல்ல வரனொன்று வந்திருக்கு, பத்துப் பொருத்தமும் இருக்கு, பொடியன் வெளிநாட்டிலை இருந்து தாய் தேப்பனைப் பார்க்கிறதுக்காக நாட்டுக்கு வந்திருக்கு, அங்க உழைச்ச காசில ஏதோ 'பிசுனஸ்' பண்ணப்போகுதாம். அவையள் பரம்பரைப் பணக்காரர். பொடியனுக்கும் செவ்வாய் தோஷம் இருக்காம்."

எதை எப்படிச் சொல்ல வேண்டும், எப்போது அதைச் சொல்லவேண்டும் என்பதில் 'பீ.எச்.டீ' முடித்த புறோக்கரின் சாணக்கியம் அம்மா, அப்பாவிடம் பலித்தது. பிறகென்ன ...

"பொடியனுக்கு முப்பத்தெட்டு வயதுதானே! சினிமா நடிகன் தோற்றுப் போவான். உங்கட மகள் ரீச்சருக்கு எண்டே பிறந்தவன்..."

புறோக்கரின் புழுகு மூட்டைக்கு என்ன குறைச்சல், பெற்றோர் மட்டுமல்ல நானும்தான் மயங்கிவிட்டேன். பிறகென்ன. ஒரே ஒரு பெட்டை எல்லாமே மாப்பிளைக்கு என்பதால் தடங்கலேது. மாப்பிளை வீட்டில வசிக்க வேண்டும் என்ற கண்டிசன் மட்டும்தான் நெருடலாக இருந்தது.

தடல்புடலாக, பெரும் எடுப்பில் கலியாணம். மாப்பிளையின் பிரயாணக் கஷ்டம் போக்கக் கார் அன்பளிப்பு. (நான் தினமும் 'ஸ்கூட்டியில்' போவது பெற்றோருக்கும் கஷ்டமாக தெரியவில்லை) வீடு, காணி எல்லாம் திருமணத்தன்று சீதனமாக எழுதி, ஐம்பது பவுணில் நகை, பல இலட்சங்கள் பணமாக கைமாறி, முப்பத்து முக்கோடி தேவர்கள் ஆசீர்வாதத்துடன் திருமணம் இனிதே நிறைவேறியது.

நான் விருப்பம் இல்லாமல் வேறு வழியின்றி, திருமணம் செய்ததாகச் சொல்ல முடியாது. ஆனால் மாப்பிளை வீட்டார், மாப்பிளை எப்படிப்பட்டவர் என்பதெல்லாம் சோதிட சாத்திரத்தின் பத்துப்

பொருத்தத்தால், மேற்கொண்டு தேடாததும் எனது பக்கத்துத் தவறென, எனக்கு இப்பொழுது நன்றாகவே புரிகின்றது.

செவ்வாய் தோஷம் என்பதால் திருமணம் தள்ளிப்போன தருணத்தில், கிடைத்த மாப்பிளையைத் தவறவிடக் கூடாது என்ற, அவதியால் வந்த வினை எல்லாம் என்று சொல்ல முடியாது. திருமணம் என்பது நம்பிக்கையின் மீதான ஒப்பந்தம். அதை யார் மீறினாலும் அவர்கள் அயோக்கியரே.

திருமணம் முடிந்து, எனது மனம் ஒன்றா விட்டாலும் இயல்பாகவே உள்ள உடலியல் தேவைகள் நிறைவேறின. ஆனால் ஒன்றுமட்டும் ஆரம்பத்திலிருந்தே புரிந்தது, அவர்கள் பணத்திற்கு வழங்கும் மரியாதை, மனிதர்கள் மீதோ! அவர்தம் உணர்வுகள் மீதோ! எள்ளளவும் இல்லை என்பது. இருப்பினும் இந்த உலகின் யதார்த்தம் புரிந்த ஆசிரியையான என்னால், அதனைக் கடந்து போக, சகித்துக்கொள்ள முடிந்தது.

எனது தொலைபேசிக்கு ஏன் 'பாஸ்வேட்' போட்டு வைத்திருக்கின்றாய் என்று, கடுமையாக கேட்டபொழுதே முதலாவது முரண்பாடு தொடங்கியது. ஏன் பிரச்சினை என்று அதனை நான் நீக்கிய பின்னர்தான், அவனை உன்னிப்பாக அவதானிக்கத் தொடங்கினேன். தனது தொலைபேசி உரையாடலை இரகசியமாக வைத்திருப்பதையும், அதற்குப் 'பாஸ்வேட்' வைத்திருப்பதையும் அறிந்தபின்னர் எனது துப்பறியும் மூளை வேலைசெய்ய ஆரம்பித்தது.

இத்தனைக்கும் இடையில் ஆறுமாதங்கள் கடந்து, ஒரு மாதக் கர்ப்பிணியும் ஆகிவிட்டேன். எனது பள்ளித் தோழி ஒருவர் மூலம் வெளிநாட்டில் அவனது கடந்தகால வரலாறைத் தேடிய பொழுதே பூதம் வெளிப்பட்டது.

அந்த நாட்டு பிரஜாவுரிமை பெறும் சுயநலனுக்காக, அங்கே ஒரு வெள்ளைக்காரியைக் காதலிப்பதாக ஏமாற்றிக் கலியாணம் கட்டி, ஐந்துவயதில் ஒரு பொம்பிளைப் பிள்ளையும் இருக்குதாம், அவளுடன் சண்டைபிடித்து நாடு திரும்பி, இங்கொரு கலியாணம் கட்டி, இரட்டை வாழ்க்கை வாழ்கின்றான்.

இந்தச் செய்தியை, வயிற்றிலே கருவைச் சுமந்தவாறு, எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? படித்தவள், பலபேருக்கு புத்தி சொல்பவள் ஏமாந்து போனதை என்னால் ஏற்க முடியவில்லை. அந்த அயோக்கியனுடன் சண்டை பிடித்து என்ன பயன்?

செல்ல மகளுக்குத் திருமணம் ஆகவில்லை என்ற, ஒரே காரணத்திற்காகக் கவலையில் மூழ்கிய பெற்றோரிடம், வாழாவெட்டியாகச் சென்றால் எவ்வளவு வேதனையுறுவர் என்று நினைத்த பொழுதே, வாழ்க்கையை முடிக்கின்ற துணிச்சலான முடிவைச் சடுதியாக எடுத்தேன்.

சில நாட்களாக ஏற்பட்ட மன உழைச்சலுக்கான மாத்திரைகள் அப்போதைக்கு உதவியது, வீட்டில் இருந்த எல்லா மாத்திரைகளையும் அள்ளியெடுத்து விழுங்கி, எனது கோபத்தை நிறைவேற்றிக் கொண்டேன்.

எனக்கு எத்தகைய பக்க விளைவுகள் ஏற்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் நான் விழுங்கிய மாத்திரைகள், எனது வயிற்றிலுள்ள கருவைக் கலைத்திருக்கும் என்பதை நிச்சயமாக என்னால் சொல்லமுடியும். அந்தச் சிசுவுடனேயே மரணிக்க விரும்பினேன். ஆனால் விதி வேறுவிதமாக அமைந்துவிட்டது.

காதலின் சின்னமாக என்றால் சந்தோஷமாக அந்தக்கருவைச்சுமந்து, தாய்மையை உணர்திருப்பேன். ஆனால் எனது காதலைச் சூறையாடிய, அவனது காம நஞ்சினைப் புனிதமான கருப்பையில் சுமப்பது, தாய்மைக்கே இழுக்கு.

திருமணத்தின் போது கணவனின் சொத்தில் மனைவிக்கு உரித்து இல்லாத போது, மனைவியின் சொத்தில் கணவனுக்கு உரித்து வருவது, என்ன நியாயம்? இது ஆண் ஆதிக்கத்திற்கான விதை என்பதைப் பெண்கள் புரிந்துகொள்ளாதவரை, சீதனமாகக் கொடுத்த சொத்துக்கான, விவாகரத்துக்கான வழக்குகள் தொடரவே செய்யும். எனது சொத்துக்களை அந்த அயோக்கியனுக்குச் சீதனமாக எழுதிவைத்த பெற்றோரின் முட்டாள் தனத்தை யாரிடம் சொல்லி அழுவேன்.

இருவரும் கணவன் மனைவியாக வாழும்வரை இவ்வாதனம் செல்லுபடியாகும். இல்லாவிட்டால் பெண்ணுக்கே சொந்தமாகும் என்றாவது எழுதித் தொலைத்திருந்தால் வீண் அலைச்சல் வந்திருக்காது. எனது மனவேதனையுடன், வேண்டாத கேள்விகளுக்கு யார் யாருக்கோ பதில் சொல்வதற்கும் எனது தலையில் எழுதியுள்ளது.

சிறு விடயங்களுக்குக் கூட புத்தியையும் அறிவியலையும் பிரயோகிக்கும் நம்மிடையே, மூடப்பழக்கவழக்கங்கள் பண்பாட்டின் பேரால் ஒட்டிக்கொண்டிருப்பதை விளங்காத, விலக்காத வரைக்கும் செவ்வாய் தோஷமும் ஏழரைச் சனியும் தொடரவே செய்யும்.

சாதகப் பொருத்தம் பார்க்காமல், இரண்டு மனமும் இணைகின்ற பண்டைய காதல் வாழ்வைத் தொலைத்து, சாத்திர சம்பிரதாயங்களுக்குள் மூழ்கிப்போன சமூகம்

மீள்வது, எங்கள் ஒவ்வொருவரதும் விழிப்புணர்வுமிக்க வாழ்விலும், சமூகப் பணியிலும் தங்கியுள்ளது. எனது வாழ்வு அதை நோக்கியதாகவே இருக்கும்.

நான் மறு ஜென்மம் எடுத்துவிட்டேன். அம்மாவும் அப்பாவுமே பக்கத்தில் இருக்கின்றார்கள் என்பதை என்னால் உணர முடிகின்றது. பகலோ! இரவோ! ஒன்றுமே புரியவில்லை. மெல்லக் கைகளை அசைத்துப் பார்க்கின்றேன். நிச்சமாக வைத்தியர்களுக்கு நான் அறிதுயில் கொள்வது தெரிந்திருக்கும் ஆனால் அம்மாவும் அப்பாவும் இன்னமும் பதட்டத்திலேயே இருப்பர் என்பதால், வெளி உலகை எதிர்கொள்ளும் துணிச்சலுடன் கண்களை மெல்லத் திறக்கின்றேன்.

கயல்! என்ற அம்மா, அப்பாவின் தழுதழுத்த பரிவான குரலுடன், அவர்களது தளர்ந்த கைகள் எனது இரு கரங்களையும் ஏக காலத்தில் பற்றுகின்றன. அவர்களின் விழிகளை நேருக்கு நேராக உற்றுப் பார்க்கின்றேன்.

மூவரின் விழிகளும் ஒரு புள்ளியில் சந்திக்கின்றன. நான் என்ன நினைக்கின்றேன், தங்களிடம் என்ன கேட்க விளைகின்றேன் என்பதற்கான புரிதலை, அவர்களின் விழிகளில் காண்கின்றேன்.

அந்தப் பார்வையின் மொழிகளில் எத்தனை அர்த்தங்கள். அவர்கள் விழிகளில் பனித்த கண்ணீர்த் துளிகள் வற்றி, விழிகள் ஒளிர்வதைப் பார்த்துப் புன்னகைக்கின்றேன். வைத்தியரும் செவிலியரும் எமது விழிகளின் சங்கமத்தைப் பார்த்துப் புன்னகைக்கின்றனர்.

---

# கண்டேன் கண்கள்

*கண்ணிமைத் தோகையெழில்*
*கண்கள் வெட்டி மயிலாட்டம்*
*மயங்குமென் நெஞ்சு*
*மாண்டதேன்.*
*விழிகளா இவை*
*அம்பும் மேலும் தாக்கும்*
*படையணியிது*
*பார்க்கப் பார்க்கத் தாக்குதே*
*காலனைக் காணேன் நான்*
*கண்கள் வீசும் பாசக்கயிற்றில்*
*என்னையே இழந்தேன்.*
*பார்க்கப் பார்த்தேன் பாயுதே படையணி*
*கண்டார் உயிரெடுக்கும்*
*காதலரின் கண்கள் இவை*

*உறவை ஊட்டி உயிரைப் பறிக்கும்*
*கூர்வீச்சுக் காதல நோக்கு*
*இமைகள் கண்களை மறைக்கும் நேரம்*
*நடுங்காது தப்பினேன் நான்*

*மார்புக் கொம்புகள் நிமிர்ந்து திணற*
*மதயானையின் மடியில்*
*மண்டியிட்டேன் நான்.*

*சண்டையில் திமிறும் என் தோள்கள்*
*நிண்டுபிடிக்கத் தயங்கித் தோற்கிறதோ.*

*கண்களுடையார்க்கு ஆயுதங்கள் ஏன்*
*அலங்கார அணிகள் ஏன்*
*உண்டால் மயக்கும் மதுவைவிடக்*
*கண்டாலே கௌவிப்பிடிக்கும் கண்கள்*
*போதையில் மயக்குமென் நெஞ்சு*
*கண்டேன் கண்கள் காதல் கனிகள்*

திருவள்ளுவரின் 'தகையணங்குத்தல்'

வள்ளுவர்வாழ்வியலில் காதலில் காண்டலை அடியொற்றி எழுப்பட்டது)

***காருண்யா***

தென்புலத்தார் தொழுதேற்றல் :



# பேராசிரியர் சி. தில்லைநாதன்

எம். ஏ. நு.:மான்

தில்லை என்று நண்பர்களாலும், தில்லையர் என்று மாணவர்களாலும் அன்பாக அழைக்கப்படும் பேராசிரியர் சி. தில்லைநாதன் (02. 05. 1937 – 12. 06. 2025) தனது 88ஆவது வயதில் காலமானார் என்ற செய்தி கவலைதருகிறது.

1957ல் தனது இருபதாவது வயதில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் ஒரு பட்டதாரி மாணவனாகச் சேர்ந்த தில்லைநாதன் நான்கு ஆண்டுகள் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று முதல் வகுப்பில் சித்திபெற்று அங்கேயே சுமார் நாற்பது ஆண்டுகள் விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி 2002ல் ஓய்வுபெற்றார். பட்டம் பெற்ற உடனே இடையில் சுமார் இரண்டு ஆண்டுகள்தான் பேராதனைக்கு வெளியே ஒரு பத்திரிகையாளராக கொழும்பில் லேக்ஹவுஸில் பணியாற்றியிருக்கிறார். அவ்வகையில் அவரது வாழ்நாளில் அரைவாசிக் காலத்தை அவர் பேராதனைப் பல்பலைக் கழகத்திலேயே கழித்திருக்கிறார்.

சுவாமி விபுலானந்தர் முதல் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பதவி வகித்த மூத்த தலைமுறையைச் சேர்ந்த முதுபெரும் பேராசிரியர்களுள் கடைசியாக வருபவர் அவர். சுமார் 15 ஆண்டுகள் துறைத் தலைவராகவும் பதவி வகித்து பேராதனையில் தமிழ்த்துறையைப் பலப்படுத்தியவர்.

முதல் தலைமுறையைச் சேர்ந்த பேராசிரியர்கள் க. கணபதிப்பிள்ளை, சு. வித்தியானந்தன், வி. செல்வநாயகம், ஆ. சதாசிவம் ஆகியோரின் மாணவ பரம்பரையைச் சேர்ந்தவர் தில்லை. க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, பொ. பூலோகசிங்கம், மு. தளையசிங்கம் ஆகியோரின் நெருங்கிய நண்பர்.

யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் ஒரு நடுத்தர விவசாயக் குடும்பத்தில் சின்னத்தம்பி – நாகம்மா தம்பதிக்கு மகனாகப் பிறந்தவர் தில்லைநாதன். குடும்பரீதியான பெரிய கல்விப் பின்னணி அவருக்கு இருக்கவில்லை. ஒரு தாய்மாமன் பள்ளி ஆசிரியராக இருந்திருக்கிறார்.

தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியை சுன்னாகத்திலேயே கற்றார். இளமைக் காலத்தில் அவருடைய ஆளுமை விருத்தியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் அதன் அதிபராகக் கடமையாற்றிய ஒறேற்றர் சி. சுப்பிரமணியத்துக்கும் முக்கிய பங்கு உண்டு. ஒறேற்றர் சாதி, மத, இனபேதம் பார்க்காத ஒரு முற்போக்காளர். ஒறேற்றர் பற்றி தில்லைநாதன் அடிக்கடி நினைவுகூர்வார். ஸ்கந்தவரோதயா ஓர் ஆங்கில பாடசாலை. இலங்கையின் பல பகுதிகளிலிருந்து பல்லின மாணவர்களும் அங்கு கல்வி பயின்றனர். எல்லா இனத்தவருடனும் இணைந்துவாழும் பல்பண்பாட்டுணர்வு தில்லைநாதனிடம் அக்காலத்திலேயே உருவாகிவிட்ட தெனலாம்.

பல்கலைக் கழகத்துக்குச் சென்று கல்வி பயிலும் ஆர்வம் தில்லை நாதனிடமோ அவரது குடும்பத்தினரிடமோ இருக்கவில்லை. மகனை ஒரு எழுதுவினைஞராக ஆக்குவதே தகப்பனின் கனவாக இருந்தது. ஒறேற்றரின் வற்புறுத்தலின் பேரிலேயே அவர் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பில் சேர்ந்து கற்றார். முதல் தடவையில் அது சாத்தியமாகவில்லை. எழுதுவினைஞர் பரீட்சையில் சித்திபெற்று கொழும்பில் இராணுவ தலைமையகத்தில் எழுதுவினைஞராக ஒரு வருடம் கடமையாற்றினார். பின்னர் ஒறேற்றரின் வற்புறுத்தலில் இரண்டாம் முறை பரீடசை எழுதி பல்கலைக் கழகம் சென்றார். அது அவரது வாழ்க்கைப் பயணத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது.

சித்தாந்த ரீதியில் தில்லையர் ஓர் உறுதியான இடதுசாரி. பாடசாலைக் காலத்திலேயே அவருக்கு இடதுசாரி அரசியலில் ஆர்வம் இருந்தது. அக்காலத்தில்

சுன்னாகத்தில் லங்கா சமாசமாஜக் கட்சியின் செல்வாக்கு இருந்தது. சிங்கள இடதுசாரி அரசியல் பிரமுகர்கள் அங்கு வந்து உரையாற்றுவதுண்டு. பிரபல கம்யூனிஸ்ட் அரசியல்வாதியாகப் பிற்காலத்தில் புகழ்பெற்ற வி. பொன்னம்பலம் ஸ்கந்தவரோதயாவில் தில்லைநாதனுக்கு ஆசிரியராகவும் வாய்த்தார். இவ்வகையில் இடதுசாரி அரசியலில் இளமையிலிருந்தே இவருக்கு ஆர்வம் ஏற்பட்டது எனலாம். தமிழ்த்தேசிய அரசியலோடு தில்லைநாதன் தன்னை ஒருபோதும் அடையாளப்படுத்தியதில்லை.

தன் இடதுசாரிச் சார்புநிலை காரணமாக தொடர்ந்தும் முற்போக்கு இலக்கிய இயக்கத்தைச் சார்ந்து செயற்பட்டவர் தில்லை. 1960களின் தொடக்கத்தில் பழமைவாதிகளுக்கும் முற்போக்காளர் களுக்கும் இடையே மரபுப் போராட்டம் நடந்தபோது அக்காலத்தில் தினகரனில் உதவியாசிரியராகப் பணியாற்றிய தில்லைநாதனே அவ்விவாதத்தை நெறிப்படுத்தினார் என்பதை சிவத்தம்பி பதிவுசெய்துள்ளார்.

தில்லைநாதன் ஒரு இலக்கியப் படைப்பாளி யுமாவார். பல்கலைக்கழக மாணவ ராக இருந்த காலத்திலேயே கவிதைகளும் சிறுகதைகளும் எழுதி பரிசுகள் பெற்றவர். 1970களின் தொடக்கத்தில் இலங்கையில் நவீன நாடக இயக்கம் எழுச்சிபெற்ற சூழலில் தகுதி (1973), மானுடம் என்பது புல்லோ (1974) ஆகிய நாடகங்ளை எழுதி, தயாரித்து, மேடையேற்றி யிருக்கிறார். இலக்கியம், சமயம், பண்பாடு பற்றி ஏராளமான கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அவற்றுட் சில வள்ளுவர் முதல் பாரதிதாசன்வரை, இலக்கியமும் சமுதாயமும், இலங்கைத் தமிழ் இலக்கியம், பண்பாட்டுச் சிந்தனைகள் ஆகிய நூல்களாக வெளிவந்துள்ளன. மு. வரதராசனின் மேற்பார்வையின்கீழ் அவர் மேற்கொண்ட அவரது முதுமாணிப் பட்டத்துக்கான ஆய்வு சோழர் கால அரசவை இலக்கியம் என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.

பழந்தமிழ் இலக்கியம், இடைக்கால இலக்கியம், நவீன இலக்கியம், இலக்கணம் என எல்லாத் துறைகளிலும் ஆழ்ந்த புலமை உடையவர் தில்லைநாதன். பல்துறை அணுகுமுறையில் தமிழியலை நோக்கும் ஆற்றல் அவரிடம் இருந்தது. அதற்கு வேண்டிய பல்துறை அறிவாற்றலும் அவரிடம் இருந்தது. அவ்வகையில் தில்லையர் எழுதியிருக்கவேண்டியவை ஏராளம். ஆனால், அவர் எழுதியவை குறைவுதான். எனினும் அவை முக்கியமானவை. நூலுருப் பெறாத அவருடைய கட்டுரைகள் பல இன்னும் நூலுருப் பெறவேண்டி உள்ளன.

நான் தில்லையரின் நேரடி மாணவர்களுள் ஒருவன் அல்ல. எனினும், 1970களிலிருந்து கடந்த சுமார் ஐம்பது ஆண்டுகளாக பல்வேறு கலை, இலக்கிய, கல்விசார் அமைப்புகளில் நானும் அவரும் உறுப்பினர்களாகச் செயற்பட்டிருக்கிறோம். 1990களிலிருந்து பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஒரு விரிவுரையாளனாகவும் தில்லையருடன் பணியாற்றி யிருக்கிறேன். மற்றவர்களுடன் புரிந்துணர்வுடனும் நட்புடனும் பழகக் கூடிய ஒரு பண்பாளர் அவர் என்பதே என் அனுபவம். இத்தனை ஆண்டுப் பழக்கத்தில் அவருடன் கசப்பான அனுபவம் எதுவும் எனக்கில்லை.

ஓய்வு பெற்றுப் பேராதனையை விட்டு அவர் கொழும்புக்குப் போனபின்னர், அண்மைக் காலத்தில் அவர் நோயுறும்வரை, தொலைபேசியில் தொடர்புகொள்ளும் போதெல்லாம் "நுஃமான் எப்பிடிச் சுகம்" என்ற அவருடைய குரல்தான் முதலில் கேட்கும். இனி அந்தக் குரல் கேட்காது என்பதை நினைக்க வருத்தமாக உள்ளது.



# வெந்து தணியா நாடு

**புவிநேசன்**

*என்று தணியும் சுதந்திரதாகம் என்று
வீறுகொண்டு பாடிய பாரதியின் வழியில்
வீராப்பாய் கவிபுனையும்
பாரம்பரியக் கவியெனைப் பாடு
வெந்து தணியா நாடு எனில்
நின்று நானிதில் நவில்வது எதுவோ?
பாட்டன் வளவை கொண்டான் சோழனென ஆய்ந்து
பார்க்கத் தெரியும் விடுப்பான காலமதில்
சோலையெழில் ஈழவள நாட்டை
எரித்த அனுமன் மேல் வீறுகொண்டு
ஏன் அவனுக்கோர் ஆலயம் இம்மண்ணிலென
ஏசிடுவேன் நான் எனில் பொங்காரோ
அயோத்தியில் இராமர் ஆண்ட மண்ணில்
இராமர் ஆலயம் கட்டும் வீறுகொண்டோர்
என்மேல் சீறத் தான் துடிப்பரோ?*

*அனுமன் மூட்டிய தீ
இன்னும் வெந்து தணியலையோ
இல்லைத்
தணியாது என்றும் எரியவென
விறகு வைத்து வைத்து
எரிமூட்டுவரோ?
சொந்த நாட்டிலின்று
குவலயம் எங்குமுள மக்கள் நாடி
வந்திந்த நாட்டில் மகிழ்ந்திட முடியா
பகைத் தீயினை மூட்டி மூட்டி எரித்திட
எத்தனை அனுமர் மீண்டும் மீண்டும் பிறப்பர்
எரிமூட்ட மூட்ட மீண்டும் மீண்டும்...?*


*நாட்டில் முட்டி மோதிட
சட்டங்கள் தீட்டியதில்
தீ கொழுந்துவிட்டெரிய
வெந்து வெந்து வேகிட நாம் என்ன
கருவாடா வெறும் பதர் எனும் நினைப்போ?
இந்நாட்டின் குடிகளுக்குள்
வந்தேறி மதங்கள் வந்ததால்
இந்து முஸ்லிம் கிறித்தவம பௌத்தமென
பொல்லாக் கொள்ளி போட்டுத் தீமூட்ட
வெந்து தணியா நாடாய்...*

*டில்லியில் ஆள்பவர் யாரெனத் தேர
கொழும்பு எரித்திட டொலர்கள் பறந்தன
எரியும் தணலில் உயிர்கள் மாயும்
விரியும் உணர்வில் இந்துத்துவம் வென்றிட
மனிதர் நோக நோக இறையர் மகிழ்வர்
மீண்டு மீண்டு எத்தனை இறையர்
வந்து வந்து போயினர்
இறையரைத் தீர்க்க முனையில் முடியுமோ?
மொழியால் கூறுபோட்டு வீறுபெற்ற காலத்தில்
மூட்டிய தீயில் முள்ளிவாயக்காலில் முடிவுற்ற
பத்தாண்டின் பின்னும் மதங்களின் பேரால்
மீண்டும் இறையர் எழுவர் எனில்
இறையரைத் தீர்க்க மார்க்கமும் தேரோமோ?
இந்த நாட்டின் இறைமையைத்
தன்வசம் கொள்ள
மீண்டும் மீண்டும் அனுமர் எழுவர்
தேரரும் உலமாக்களும்
ஆயரும் இந்து வேதியரும்
ஊதி ஊதி மூட்டும் தீயில் காய்வர்
வெந்து தணியா நாட்டில்
வேதனை ஒலி கிளப்பும்
அடித்தட்டு உழைப்பவரையே
அடக்கி அடக்கி
அனுமரின் ஆணைக்கு
அடிபணியப் போட்டியில்
ஆள்பவர் யாரென அறியா மக்கள்
வெந்து தணியா நாட்டுக்குள்
வேதனையில் அழுது அரற்றி
ஓட்டுப் போட்டு
மாற்றம் வேண்டி நாட்டிலினும்
தேற்றம் இல்லையென கூவியே
நின்றிடில் மீளவும் அனுமரே எழுவர்*

*நாடென ஒன்று மக்களுக்கு
வேண்டுமென யாரும் உரைப்பரெனில
வெந்து தணியா நாடென தொடரா
மகிழ்ந்து குலாவி மக்கள் வாழ்ந்திடும்
மாற்றம் நன்றே தொடர்ந்திட
மதச்சார்பற்ற மக்கள் ஆட்சி வேண்டும்
பேதமற்ற மக்கள் கூட்டே நிலைக்க
முந்து தமிழ் மூத்த தமிழ்
இந்து எனத் திகழா
முஸ்லிம் எனத் திகழா
பௌத்தர் எனத் திகழா
கிறிஸ்தவர் எனத் திகழா
கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து
ஆதிப் பொதுவுடமை நெறியினைக்
கீழடியில் கீழ் அடியில்
தோண்டி தோண்டி எடுத்து
ஆய்ந்து அறிந்து
பாமரரும் பாரினில் எழுந்து
பகுத்துண்டு பல்லுயிரோம்பும்
விருத்திநிலை நோக்கி வீறு நடைபோடுவரேல்
அறம் கோலோச்ச
அம்பேத்கார் பெரியார் காரல்மாக்ஸ்
கண்ட பொதுமை பூக்க
இந்து சமுத்திரத்தில் இலங்கு
இலங்கைத் தீவிதனில்
செந்தமிழும் சிங்களமும் சேர்ந்துலவ
வெந்து தணியா நாடும் தணியும்!*

***(சில ஆண்டுகளுக்கு முன் எழுதிய கவிதை திருத்தங்களுடன்)***

*தென்புலத்தார் தொழுதேற்றல் :*



# பேராசிரியர் தில்லைநாதன் நினைவுகள் சில

*சி. சிவசேகரம்*

தமிழ் மொழியியல் பற்றியும் இலக்கியம் பற்றியும் தெளிந்த தடுமாற்றாத் தூரநோக்குடையோரிற் பேராசிரியர் கைலாசபதியை அடுத்துக் கூற ஏற்றவர் பேராசிரியர் தில்லைநாதன். எனினும், அவர் நூலாக எழுதியது குறைவு. தன் விரிந்த அறிவைப் பகிரக் கஞ்சமற்ற அவருடன் உரையாடுவது மகிழ்வான அனுபவம்.

தமிழிலக்கிய மரபு பற்றித் தன்; பரந்த அறிவின் அடிப்படையில், அவர் துணிவுடன் தமிழின் தொன்மையும் துய்மையும் பிற மேன்மைகளும் பற்றிய மிகைக் கூற்றுக்களைச் சான்றாதாரங்களுடன் மறுக்கக் கேட்டிருக்கிறேன். தற்புகழ்ச்சி அறியாத அவருக்குப் பம்மாத்துக்கள் பிடியா. எனினும் யாரையும் தனிப்பட மனம் வருத்தாது உடன்பாடின்மையை வெளிப்படுத்தும் பண்பு அவரின் சிறப்புக்களில் ஒன்று. தம்முள் முரண்படும் உலகு நோக்குடைய பலர் அவருக்கு நண்பர்களாய் இருந்தபோதும், அவர், எவரையும் மகிழ்விக்கத் தன் நிலைப்பாட்டைச் சமரசஞ் செய்ததில்லை.

அவரின் முனைவர் ஆய்வு ஏட்டைச் சில ஆண்டுகள் முன் நூலாக்கிய ஒரு பதிப்பாளர் அவரிடம் சுவடியைப் படிபார்க்கக் கொடாமலே அச்சிட்டதன் பயனாக நூலில் மிகுதியான சொற்பிழைகள் சேர்ந்தன. அது அவரை மனம் வருத்திய போதும் அதைத் திருத்த வாய்ப்பின்மை கருதி யாருடனும் சண்டைக்குப் போகவில்லை. பிறர் மனதைப் புண்படுத்த விரும்பாமை அவரின் பெரிய பலமும் பலவீனமுமாகும்.

பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் முன், அருசகரும மொழித் திணைக்களம் மும்மொழிக் கலைச்சொல்லாக்கப் பணியொன்றிற்கு அவரிடம் தமிழ்ச் சொற் பொறுப்புக்களை ஒப்படைத்த வேளை, அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. கலைச்சொற்களின் செம்மையும் எளிமையும் பற்றிய அக்கறையை ஒவ்வொரு கலைச் சொல்லின் புனைவிலும் அவர் காட்டினார். தமிழின் நவீனமாதலுக்குத் தடையாயிருப்பது தமிழ்ச் சமூகத்தின் பழமைவாதச் சிந்தனை என்பதிலும் நாம் உடன்பட்டோம். அதே வேளை, கலைச் சொற்கள் அன்றாட மொழி வழக்குட் புகாவிடின் அவை கடலிற் பெய்த மழை போன்று பயனின்றிப் போவதையும் இடையிடை கூறுவார்.

சிறு அலுவல்களையுஞ் செம்மையாக ஆற்றுவதில் அவருடைய கண்டிப்புக் காரணமாக பரீட்சைத் திணைக்களம் அவரின் வயதையும் மறுப்பையும் மீறி வினாத்தாள் திருத்தல் மேற்பார்வைப் பெறுப்பை மூன்று நான்கு ஆண்டுகள் முன் வரை அவரிடமே கொடுத்தது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைமைப் பொறுப்பில் அவர் இருந்த காலத்தில் நான் செயலாளராக இருந்தேன். அது மகிழ்வான ஒரு அனுபவம். அவருடைய நிதானமான, அதேவேளை உறுதியான, அணுகுமுறையினின்று நான் மிகவுங் கற்றேன்.

1970களிற் பேராதனையில் தொடங்கிய பரிச்சயம் ஒருநல்லநட்பாகியது. கடந்த இரண்டு மூன்றாண்டுகளாக அவருடைய உடல்நலக் குறைவால் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக்கள் குறைந்தாலும் தொலைபேசி உரையாடல்கள் வழமையான நகைச்சுவையுடனும் உற்சாகத்தடனும் நிகழ்ந்தன.

அவுருடைய இறுதிச் சில மாதங்களில் அவரின் உடல்நலச் சரிவு மனதுக்கு வேதனையாயிற்று. தன் இறுதி வரை அவருக்கு ஒரு வலிய ஆதாரமாயிருந்த துணைவியார் மல்லிகாதேவியின் மறைவு அவருக்கு ஒரு பேரிடியாகி அவரின் வாழ்காலத்தைக் குறுக்கிற்று.

தழிழ்கூறும் நல்லுலகிற்கும் நவீன முற்போக்குச் சிந்தனைக்கும் அவரின் இழப்பு ஈடு செய்ய அரியது

# கனவு மெய்ப்பட வேண்டும்

அ. சந்திரஹாசன்

புலம்பெயர் தேசமெங்கும் கிராம அமைப்புகள் உருவாகி தாயகத்து மக்களின் மீட்சிக்காய் உதவும் பணிகள் துவங்கியுள்ள இந்த காலகட்டம் எமது வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். வெறுமனே நிதி அளிப்பதோடு திருப்திப்படாது நாம் வாழும் நாட்டில் கற்றதை, பெற்ற அறிவை, அனுபவத்தை அங்கு கொண்டு சேர்ப்பதும் எம் பணியே. வரலாற்றை சார்பில்லாமல் கற்று, நிகழ்காலத்தை சரியாகப் புரிந்துகொண்டு, தூர நோக்கோடு தங்கள் எதிர் காலத்தை திட்டமிட்டு கட்டியமைக்க தாயக மக்களுக்கு புலம்பெயர் அமைப்புக்களின் உதவி நிச்சயமாக தேவை.

எமது மக்கள் வரலாற்றில் முப்பது வருடங்களை தொலைத்து விட்டார்கள். இயல்பான வளர்ச்சி துண்டிக்கப்பட்டுவிட்டது. இது ஒரு பாரிய வீழ்ச்சி எனக் கொண்டாலும் புதிய எழுசிக்கான துவக்கமாகவும் எடுத்துக்கொள்ளலாம். இது நாம் கடந்து வந்த பாதையை மீளாய்வு செய்து எம்மை மீண்டும் படுகுழிக்குள் தள்ளாத புதிய பாதை ஒன்றை தெரிவு செய்யும் வாய்ப்பைத் தந்துள்ளது. எமது பண்பாடுகளை சற்று தள்ளி நின்று மதிப்பீடு செய்து ஏற்றுக் கொள்ளவும் மாற்றியமைத்துக் கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. காலத்துகொவ்வாத பண்பாடுகள் பாரம்பரியங்கள் என்ற சுமைகளை இறக்கிவைத்துவிட்டு புதிய உலகத்துள் இலகுவாக முன்னோக்கி செல்ல கிடைத்த சந்தர்ப்பம் இது. பழையன கழித்து புதிய சமுதாயத்தை கட்டியமைக்க வரலாறு தந்த அற்புதமான வாய்ப்பு. இரண்டாம் உலக மகா யுத்தத்தில் தோற்று, உலக நாடுகளாலும் மக்களாலும் வெறுத்து ஒதுக்கி வைக்கப்பட்ட ஜேர்மனியர்களும் ஜப்பானியர்களும் தங்கள் தவறான பழம் பெருமைகளை ஆழப் புதைத்து, புதிய பாதையை தெரிவுசெய்து உலகை வெற்றி கொண்ட வரலாறு எங்கள் முன்னே பாடமாக விரிந்து கிடக்கிறது.

எமது கிராமத்தை அரசினதோ அந்நியர்களினதோ தயவு இன்றி புதிய பொலிவுடன் மீளக் கட்டியமைத்து நாட்டுக்கே முன்மாதிரியாக திகழ முடியும். அதற்குரிய பொருளாதார பலம் இன்று எம்மிடம் உண்டு. எமது வளங்கள் பற்றிய ஆய்வும் (*research on resources* ), கிராம அபிவிருத்தி பற்றிய முழுமையான கொள்கையும் (*mission, aims and objectives* ), சரியான திட்டமிடலும் (*Planning*), செயல் திட்டங்களும் (*Programmes*) அதை நடைமுறைப்படுத்த போதுமான தகுதியான ஆளணியும் இருந்தால் இந்தக் கனவை மெய்ப்படுத்தலாம். வெறுமனே கோயில்களில் காசு வீணாகுதே எனப் புலம்புவதில் அர்த்தம் இல்லை. அதற்கு மாற்றீடாக எதனையும் வைக்காமல் குற்றம் சொல்லவதில் பயன் இல்லை. என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்? என்ற சிந்தனையின் வெளிப்பாடே இந்த சிறு பொறி.

### மக்கள் ஆட்சி

இதுமிகஅடிப்படையானது.எமதுகிராமத்திலுள்ள எல்லா மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச நிறுவனங்களுக்கு மாற்றீடான ஒரு நிர்வாக அலகு உருவாக்கப்பட வேண்டும். இதில் ஊரிலுள்ள சனசமூக நிலையங்கள், கோயில்கள், பாடசாலைகள், விவசாயிகள், தொழிலாளிகள், அரச ஊழியர்கள், வர்த்தகர்கள், புலம் பெயந்தோர் என சகலரும் பிரதிநித்துவப்பட வேண்டும். எமது கிராமத்தின் பொது வேலைத்திட்டங்களில் பொதுமக்கள் தீர்மானிக்கும் சக்தியாக வளர வேண்டுமென்றால், எல்லா மக்களையும் பிரநிதித்துவப்படுத்தும் ஒரு அமைப்பு மிக அவசியமாகும். இந்த நிர்வாக அமைப்பு தனது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் நிறுவிக்கொண்டு ஒரு யாப்பை உருவாக்க வேண்டும்.

பொது சொத்துக்களை மக்கள் நலனுக்கு ஏற்ற விதத்தில் எவ்வாறு கையாள்வது என்பதை தீர்மானிக்கும் பிரதான சக்தியாகவும் மக்களின் குரலாகவும் இந்த அமைப்பு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். புலம் பெயர்ந்த மக்களின் ஆதரவும் இருக்கும் பட்சத்தில் இந்த அமைப்பை அரசோ அல்லது அரச நிறுவனங்களோ உதாசீனம் செய்து விட முடியாது. மேலும் இந்த அமைப்புக்கூடாக பொதுமக்கள் நல திட்டங்களையும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும் உருவாகும்போது அதன் பலம் அதிகரிப்பதோடு அதன் செல்வாக்கும் அதிகரிக்கும். எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் அதிகாரம் எமது மக்களின் கைகளிலே இயல்பாகவே வந்துவிடும். இன்னொரு வகையில் சொல்வதானால் மக்கள் ஆட்சி உருவாகும்.

எதுவுமே செய்யாமல், செய்யவும் தெரியாமல் மக்களை ஆள உரிமை தா என்று உரக்க கத்தும் தொழிலை அரசியல் தலைவர்களிடம் விட்டுவிட்டு, இருக்கும் வசதிகளை, வாய்ப்புகளை கொண்டு புதியன செய்வதன் மூலம் மக்களே தங்கள் உரிமைகளை வென்றெடுக்கும் காலம் வரவேண்டும்.

### வளங்கள் பற்றிய ஆய்வு

எம்மிடம் உள்ள மூன்று முக்கிய வளங்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும்

1. இயற்கை வளங்கள்
2. மனித வளங்கள்
3. பொருளாதார வளங்கள்.

### இயற்கை வளங்கள்

எமது நிலப்பரப்பு அதன் எல்லை, விவசாய நிலங்கள், பொது நிலங்கள், தனிப்பட்ட நிலங்கள், வீதிகள், நீர் நிலைகள், மரங்கள், பனைகள் பற்றிய தெளிவான விளக்கமான வரைபடங்களும் அதன் அளவீடுகளும் தொகுக்கப்படவேண்டும். வளர்சியடைந்த நாடுகளில் இந்தத் தகவல்கள் உள்ளூராட்சி சபைகளினால் விபரமாக தொகுக்கப்பட்டு தொடர்சியாகப் புதிப்பிக்கப்படுகின்றது. ஆனால் இலங்கையில் பெரு நகரங்கள் பற்றிய தகவல்களைக் கூட பெறமுடியாதுள்ளது. இயற்கை வளங்களை பேணுவதற்கும் இயற்கைக்கும் அபிவிருத்திக்கும் இடையே சமநிலையைப் பேணுவதற்கும் இந்தத் தகவல்கள் அவசியமானது. இத் தகவல்கள் எதிர்கால திட்டமிடலின்போது அது எவ்வாறு இயற்கை வளங்களை பாதிக்கிறது என்பதை அறிந்து கொள்ளவும் அதற்கேற்ப திட்டமிடலில் மாற்றங்களைக் கொண்டுவரவும் தேவையானதாகும்.

திட்டமிடல் இல்லாமல் வளர்சியடையும் அல்லது நகரமயமாகும் மூன்றாம் உலக கிராமங்கள் போல் எமது கிராமங்களும் சீரழியாமல் தடுக்க நீண்டகால திட்டமிடல் அவசியமாகும். முறையான திட்டமிடலால்தான் மேலைத்தேச கிராமங்கள் நேர்த்தியாகவும் கிராமியபண்புகள் குலையாமலும் பேணப்படுகின்றன. சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் பிரித்தானியாவைச் சேர்ந்த எபனேசர் ஹவார்ட் என்பவரால் உருவாக்கப்பட்ட *garden city* (பூங்கா நகரம்) என்ற கருதுகோளின் அடிப்படையில் ஐரோப்பா அமெரிக்க அவுஸ்திரேலிய நகரங்களும் கிராமங்களும் திட்டமிடப்பட்டதாலேயே அவை நேர்த்தியாக அமைகின்றன.

மூன்றாம் உலக நாடுகளில் குறிப்பாக இலங்கையில் கிராமிய திட்டமிடல் கிராம அபிவிருத்திச் சபைகளினால் மேற்கொள்ளப்படுவதில்லை. அவ்வாறு திட்டமிட்டாலும் அதை செல்வாக்கானவர்கள் அதிகாரத்தில் உள்ளவர்கள் பொருட்படுத்துவதில்லை. அவர்கள் எந்த இடத்திலும் எதையும் தங்கள் விருப்பத்திற்கேற்ப அமைத்துக்கொள்வார்கள். பொதுமக்களின் விருப்பம் என்று வேறு அழுத்திச் சொல்வார்கள். இதை தடுப்பதற்கு ஆவணப்படுத்தப் பட்ட நீண்டகால திட்டம் அவசியமாகிறது. கிராம அபிவிருத்திச் சபை அதை செய்யாவிட்டால் மேலே குறிப்பிட்ட மக்களால் உருவாக்கப்பட்ட நிர்வாக அமைப்பு நீண்ட கால திட்டத்தை உருவாக்கி யாரும் தங்கள் விருப்பப்படி இயற்கை சூழலை சீர்கேடுக்காமல் தடுத்துக்கொள்ளலாம்.

மேலும் எமது கிராமத்துக்கு தேவையான வீடமைப்புகள், வீதியமைப்புகள், பொதுப் போக்குவரத்துக்கள், பள்ளிகள், முன்பள்ளிகள், விளையாட்டு திடல்கள், பொதுப் பூங்காக்கள், சுகாதார நிறுவனங்கள், வணக்கத் தலங்கள், முதியோர் இல்லங்கள் என்பன பற்றி அறிந்து அவற்றை உருவாக்கவும், கட்டுப்படுத்தவும் திட்டமிடல் அவசியமாகிறது.

### மனித வளம்

மனித வளப் பற்றாக்குறை எமது தாயகத்தில் இப்போது உள்ள மிகப் பெரிய பிரச்சினையாகும். அதனை சரியாகப் புரிந்துகொள்ள எமது தற்போதைய நிலை பற்றிய ஆய்வு அவசியமாகும். குறிப்பாக பல்வேறுபட்ட தொழில்களை கற்ற அறிந்த மக்களின் தொகை, கற்பவர்களின் தொகை, எதிர்காலத்தில் தேவைப்படுவோரின் தொகை பற்றிய கணக்கெடுப்புக்கள் செய்யப்பட வேண்டும்.

முழு நாடுமே தொழில்நுட்பத்தில் மிகவும் பின்தங்கியுள்ளதாக சர்வதேசம் மதிப்பிடுகிறது. குறிப்பாக அயல் நாடான இந்தியாவுடன் ஒப்பிட முடியாதளவுக்கு இலங்கை தொழிநுட்பத்தில் தரம் குறைந்து காணப்படுகிறது. யாழ்பாணத்தின் நிலை சொல்லும் தரமற்றது. சென்ற தசாப்பதங்களில் பொருளாதாரத்தில் வளர்சியடைந்த மேல் நாடுகளே தொழில் நுட்பத்தின் உச்சத்தை எட்டியிருந்தன. ஆனால் இன்றைய கணணி யுகத்தில் மனித வளம் உள்ள நாடுகளே புதியன உருவாக்குவதில் முன்னணியில் உள்ளதை நாம் பார்க்கிறோம். சீனாவும் இந்தியாவும் இதற்கு நல்ல உதாரணம். கல்வியில் உயர்ந்த மனித வளமுள்ள இலங்கை, தொழில் நுட்பத்தில் பின்தங்கியுள்ளமைக்கு யுத்தம் மட்டுமே காரணமன்று. கல்வியமைப்பும் பாரம்பரியத்தில் இறுகிப்போன

பழம்பெருமை பேசுகின்ற சமுக அமைப்பும் புதியன சேர்க்க பெரும் தடையாக உள்ளன. அறிவை பலமாகக் கொண்ட இளைய சமுதாயத்தை வளர்த்தெடுப்பது இன்றைய அவசியமான தேவை. வெறுமனே மனனம் செய்து புள்ளிகள் பெறும் பாடசாலை கல்விக்கு அப்பால் புதிய தொழில் நுட்பத்தை அறிய விரும்புகின்ற மனித வளத்தைப் பெருக்குவதும் அவர்களே எதிர்காலத்தை தீர்மானிக்கும் சக்தியாக உருவாவதுமே எமது இன்றைய தேவை.

எமது கிராமத்திலுள்ள மக்கள் தொகை, வயது, கல்வி, தொழில் பற்றிய தகவல்களை திரட்டி எமது கிராமத்து தேவைகளை நாமே செய்யக்கூடிய மனித வளத்தை உருவாக்க வேண்டும். இல்லாத தொழில் நுட்பத்தை வெளியிலிருந்து எடுத்து அறிமுகப்படுத்தி அதிலிருந்து எம்மவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த வகையில் புலம்பெயர்ந்தவர்கள், அவர்களுடைய பிள்ளைகள் விடுமுறையில் ஊருக்கு போகும்போது தாங்கள் கற்றவற்றை அறிந்தவற்றை தாயகத்தில் உள்ள இளையவர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய செயலமர்வுகளை உருவாக்க வேண்டும். புலம் பெயந்த இளையவர்கள் தாயகத்தை பற்றி அறிந்து கொள்ளவும், தாயகத்திலுள்ள இளையவர்கள் மேல்நாட்டு நுட்பங்களை அறிந்து கொள்ளவும் கருத்தரங்குகள், வகுப்புக்கள், செயல் திட்டங்கள், சுற்றுலாக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

வெறுமனே பரீட்சைகளில் வெற்றிபெறும் மாணவர்களை மட்டும் ஊக்குவிக்காமல் வெவ்வேறு தளங்களில் தங்கள் ஆளுமைகளை வெளிக்கொணரும் இளையவர்கள் ஊக்குவிக்கப்படவேண்டும். உதாரணமாக வருடாவருடம் கல்வி, கலை, விளையாட்டு, சமூக ஈடுபாடு, எழுத்தாற்றல், பேச்சாற்றல் போன்ற அனைத்து துறையிலும் சிறந்த முன்மாதிரியான இளையவர் தெரிவுசெய்யப்பட்டு கவுரவிக்கப்படலாம்.

### பொருளாதார வளம்

ஒருகாலத்தில் மணியோடர் பொருளாதாரத்தில் இருந்த யாழ்ப்பாணம் இன்று சர்வதேச நாணய மாற்று பொருளாதாரத்திற்கு வளர்சியடைந்துள்ளது. சுய பொருளாதாரத்தை வளர்க்க வேண்டிய தேவை நீண்ட காலமாகவே காணப்படவில்லை. ஆனால் இது நிரந்தரமானதல்ல. மேலும் இந்த ஒட்டுண்ணி பொருளாதாரம் ஒரு ஆரோக்கியமான சமுதாயத்துக்கு ஏற்றதுமல்ல.

பல்தேசிய பொருளாதாரத்தின் இராட்சத பிடியிலிருந்து இந்தியா போன்ற பெரிய நாடுகளே தப்ப முடியாமல் விழுங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் சுய பொருளாதாரத்தை எமது கிராம மட்டத்தில் கட்டி எழுப்புவது மிகப் பெரிய போராட்டமே. ஆனாலும் இந்தப் போராட்டம் தோற்கப் படக்கூடாதது. எங்களை அசுர பலத்தோடு இந்தப் பல்தேசிய நிறுவனங்கள் ஆக்கிரமிப்பதை உணர்ந்து கொள்ளாமலே நாங்கள் எங்களுக்குள் மோதிக்கொண்டிருக்கின்றோம். இந்த நிறுவனங்களும் அதன் போசகர்களும் எமது பொருளாதாரத்தை மட்டுமல்ல, எமது பண்பாட்டை, மொழியை, இயற்கையை கூட தின்று தீர்த்துவிடுவார்கள். அவர்களின் தாரக மந்திரமெல்லாம் லாபம், லாபம், மேலதிக லாபமே.

உற்பத்தியோடு உழைப்பவர்க்கு உறவு இல்லாத பல்தேசியப் பொருளாதாரம் மனிதனை வேலை செய்யும் இயந்திரமாக்குகிறது. இதிலிருந்து மனிதன் விடுதலை பெற விலை கொடுத்துத்தான் ஆகவேண்டும். கிராமிய பொருளாதரத்தை கட்டி எழுப்பும்போது அதன் விலை நிச்சயமாக பெரிதாகத்தான் இருக்கும். அதிக விலையானாலும் அது எங்களுடையது என்ற உணர்வில் மக்கள் அதை நுகரும் நிலை வரவேண்டும். அதற்கு எமது பிரதேசத்தில் எழுபதுகளில் பிரபல்யமாயிருந்த கூட்டுறவு முறை ஒரு மார்க்கமாக இருக்கலாம். முன்னே குறிப்பிட்ட மக்கள் நிர்வாக அமைப்புக்கூடாக கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய சிறிய அளவிலான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அதற்கு தேவையான முதலை பங்கு அடிப்படையில் புலம்பெயர்ந்த மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

### நிறைவு

மேலே குறிப்பிட்ட விடயங்கள் பற்றி நீண்ட ஆய்வும் சிந்தனையும் தேவை. இந்தக் கட்டுரை ஒரு முன்னுரை மட்டுமே.

இயற்கை குழப்பம் நிறைந்தது.அது தன் வேலைகளை முடித்து தருவதில்லை..ஒரு நந்தவனத்தை அமைத்து சுவரையும் எழுப்பி மனிதன் தான் அந்த வேலையை முடித்து கொள்ள வேண்டும்.

– ராபர்ட் ப்ரோஸ்ட்

## பெருங்கவிக்கோ

# வா.மு. சேதுராமன்

*ஔவை அருள் நடராசன்*



உலகில் பார்க்காத நாடுகள் இல்லை என்பதனால் திரும்பி வர முடியாத வானுலகம் சென்றுவிட்டாரே பெருங்கவிக்கோ!

போராட்டமே தலைமைக்குணம்.
யாருக்கும் அஞ்சாதவர்.
துணிந்து பேசும் தகுதிச்சான்றோர்.

இரவு தானாகவே தானியில் ஏறிக்கொண்டு அருகிலிருக்கும் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது வேறொரு மருத்துவமனைக்கு செல்லுங்கள் என்று வழிகாட்டி விட்டார்கள் .

அடுத்த மருத்துவமனை சென்று சேர்வதற்குள் அருகில் அமர்ந்து இருந்த தோழர் மீது தோள் சாய்ந்தவுடன் உயிர் நீங்கிவிட்டது என்று மருத்துவர்கள் தெரிவித்து விட்டார்கள்.

சில வாரங்களுக்கு முன்பு மலேசியா செல்ல வேண்டும் என்று திட்டமிட்டபோது மூத்த மகன் திருவள்ளுவன் வேண்டாம் என்று தடுத்தாட்கொண்டார்.

1977 முதல் 2024 வரை தொடர்ந்து 47 ஆண்டுகளாக உலகில் செல்லாத நாடுகள் இல்லை.

10 முறைக்கு மேல் சென்ற நாடுகளை தொடர்ந்து சென்று வந்ததோடு உலகம் சுற்றும் பெரும் தொழிலதிபர்களையும் விஞ்சிய கவிக்கோமானாவார்.

நோபல் பரிசு பெறுவது எப்படி என்று அறிந்து கொள்வதற்காகவே ஸ்வீடன் நாட்டிற்கு நேரில் சென்று பரிசுக் குறித்த நெறிமுறைகளை நுணுக்கமாய் அறிந்து வந்ததோடு

அனைவரும் படிக்கத்தக்க நூலாகப் படைத்து மகிழ்ந்தார்.

சென்னை மாநிலக்கல்லூரியில் இளங்கலை தமிழ் இலக்கிய வகுப்பில் தோழனாய் அறிமுகமானவர் தான்

பெருங்கவிக்கோ அவர்களின் அருமைப் புதல்வர் முத்துராமலிங்க ஆண்டவர் ஆவார்.

அன்று தொடங்கி நாளது வரை ஆல் போல் தழைத்திருக்கும் எங்கள் நட்பு மூத்த தலைமுறையின் உறவின் நீட்சியாகும்.

கடந்த ஏழு திங்களுக்கு முன்பு 9.11.24 அன்று அன்னை சேது அறக்கட்டளை நடத்தும் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் இணையர் அன்னை சேதுமதியின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் தொண்டறச் செம்மல்களுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போது ஓயாத சிரிப்பலையின் மத்தியில் எடுத்த ஒளிப்படம் இன்றும் நினைவில் நீங்காமல் பெரியப்பா சொல்லிக் கொடுத்த பாடங்கள் பசுமையாகவுள்ளது.

### அவருடைய தன்விவரக் குறிப்பு

பெருங்கவிக்கோ
முனைவர்
வா. மு. சேதுராமன்

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள ஆண்டநாயகபுரம் என்னும் ஊரில் 9.2.1935 இல் பிறந்தார்.

கல்வித்தகுதிகள் :

புலவர் பட்டம், பி.எட்., எம் ஏ பிஎச்.டி.,

மக்கட்செல்வம்

மகன்கள் :

வா.மு.சே. திருவள்ளுவர்,
வா.மு.சே. கவியரசன்,
முனைவர் வா.மு.சே. ஆண்டவர்,
– முதல்வர் கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
அண்ணா நகர்
வா.மு.சே.தமிழ் மணிகண்டன்,

மகள் :

வா.மு.சே. பூங்கொடி

வகித்த பதவிகள் :

திருவல்லிக்கேணி இசுலாமிய உயர்நிலைப் பள்ளியில் 34 ஆண்டுகளாக தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

மேனாள் தமிழ்மொழி மேம்பாட்டு வாரியம் (மத்திய செம்மொழி ஆய்வு நிறுவனம்)

உலக அமைப்பாளர் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

நூல்கள்:

1. நெஞ்சத்தோட்டம்
2. தாயுமானவர் அந்தாதி
3. தமிழ் முழக்கம்
4. எண்ணச்சுடர்
5. ஐயப்பன் பாமாலை
6. தாய்மண்(காவியம்)
7. இருபது கட்டளைகள்
8. பற்றிலான் பற்று
9. சிந்தனைச்சுடர்
10. பன்மணி ஒலிகள்
11. உணர்வின் ஊற்று
12. வெற்றி மகள்
13. புதிய பாதை
14. கவிதை மழை
15. இருண்ட மேகங்கள்
16. நெஞ்சத்தோட்டம்
17 ஐயப்பன் பாமாலை,
18 தமிழ் முழக்கம்,
19 தாய் மண்,
20 சேது காப்பியம்,(12 காண்டங்கள்)
21 எழுதுகோலே உனக்கோர் எச்சரிக்கை
22 கோலாலம்பூர் மகாமாரியம்மன் பிள்ளைத்தமிழ்

உள்பட 85 நூல்களை எழுதியுள்ளார்.

ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட கவிதைகளைப் பதிப்பித்தவர்.

விருதுகள் :

1. கலைமாமணி பட்டம் (1990)
(தமிழக அரசால் வழங்கப்பட்டது)
2. இயற்செல்வம் பட்டம்
டாக்டர் கலைஞர் முத்தமிழப் பேரவை அளித்தது
3. அய்யன் திருவள்ளுவர் விருது –2001
(தமிழக அரசால் வழங்கப்பட்டது).
4. கலைஞர் பொற்கிழி விருது (முரசொலி அறக்கட்டளை )
5. உலகின் உன்னதக் கவிஞர்
(2006ஆம் ஆண்டு மங்கோலியா நாட்டில் நடந்த உலகக் கவிஞர்கள் மாநாட்டில் வழங்கப்பட்டது.
6. தினத்தந்தி பத்திரிக்கை சார்பாக இவருக்கு ‘சி. பா. ஆதித்தனார் மூத்த தமிழ்அறிஞர் “விருது” 2015ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

1. சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் 1977–2014 வரை நடைபெற்ற நூற்றுக்கும் மேற்பட்ட கருத்தரங்குகளிலும் பொதுக் கூட்டங்களிலும் பல மாநாடுகளிலும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியமை.

2. மதுரையில் நடந்த 5ஆம் உலகத் தமிழ் மாநாட்டில் முக்கியப் பங்கேற்றல்(1981)

3. மலேசியாத் தலைநகர் கோலாலம்பூரில் நடந்த ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டில் பங்கு கொண்டார்.

4. இந்திய நூலாசிரியர் மன்றம் பீகாரிலுள்ள இராஞ்சியில் நடத்திய 15ஆம் தேசிய மரபொழுங்குக் கூட்டத்தில் பங்கேற்பு (1989).

5. அமெரிக்காவில் சாந்தியாகுவில் நடந்த தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகளில் பங்கேற்பு. அமெரிக்கத் தமிழர்களால் உலகத் தமிழ் ஒளி பட்டம் அளித்து சிறப்பிக்கப் பெற்றார்.

6. பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் நிறுவனராக இருந்தவர்.

7. தமிழ்ப்பணி திங்கள் இதழின் ஆசிரியராக 50 ஆண்டுகளாக நடத்தி வருபவர்.

8. உலகில் உள்ள 100 நாடுகளுக்கு மேல் கவிஞராக சென்று பாராட்டுப்பெற்றவர்.

9. உலகில் தமிழர் நலனுக்காக உலக நாடுகளை ஐம்பது முறைக்கு மேல் பயணம் செய்த கவிஞர்

10. முத்தமிழ் அறிஞர் கலைஞர் மீது தீராப் பற்றுக்கொண்டவர்

மறைவு – 04.07.2025

முகவரி:

எண். 10/2,
தாராசந்த் நகர்,
பிரதானசாலை,
சேது இல்லம்,
சாலி கிராமம்,
ஆஞ்சநேயர் அடுக்ககம்,
விருகம்பாக்கம் அஞ்சல்
சென்னை – 92.

**தேசிய கலை இலக்கியப் பேரவை 25வது புத்தக அரங்கத் திருவிழா - கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி - 27, 28, 29 ஜூலை 2025 - நிகழ்வு காட்சிகள்**



**70வது அகவையை முன்னிட்டு மு. அநாதரட்சகன் 'வாழ்வும் படைப்பும்' வெளியீட்டு விழா**



**தேசிய கலை இலக்கியப் பேரவை முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.தில்லைநாதன் அஞ்சலி நிகழ்வு**



# விசு. க. விமலன்

**14ம் ஆண்டு நினைவு**

**17.07.2025**




***24 ½ ஆண்டுகள் இலங்கையில்:***

இலங்கையில் இருந்தபோது இவர் உளவளம், கல்வியறிவில் மிகச் சிறப்பாக, கணக்காய்வாளராகக் கடமையாற்றினார்.

தனது வட்டாரத்தில் மறுமலர்ச்சி மன்றத்தில் உபசெயாளராக ஒரு வருடமும் செயலாளராக இரு வருடமும் அளப்பரிய பொதுநலப் பணிகளை நண்பர்களோடு கூடி நடத்தி வந்தார்.

***24½ ஆண்டுகள் கனடாவில்:***

23 ஆண்டுகள் கனடிய றோயல் வங்கியில் சிறப்புடன் ஒரு துறை அதிகாரியாக கடமையாற்றி வந்தார். அத்துடன் கனடா பண் கலை பண்பாட்டுக் கழகத்தின் செயலாளராக 20 ஆண்டுகளுக்கு மேலாக நண்பர்களுடன் இணைந்து அளப்பரிய பொதுநலப் பணிகளை நண்பர்களோடு கூடி ஆற்றிவந்தார்

## *17.07.2011 இல் இறைபதம் எய்திய விசு. க. விமலன்*
## *ஞாபகார்த்தமாக அறநெறியில் பணியாற்றிவரும் எமது பணிகள்*

**சுழிபுரம் வடக்கு யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவினை நிதி அனுசரணை வழங்கி தொடர்ந்தும் நடாத்தி வருகின்றோம். அருகிலுள்ள ஐந்து பாடசாலை மாணவர்களிலிருந்து ஒவ்வொரு பாடசாலையிலும் ஐந்து மாணாக்கரைத் தெரிவு செய்து அவர்களுக்கு யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவோடு இணைந்ததாக நினைவேந்தல் நிகழ்வில்சேமிப்பு கணக்கில் ரூபா 5000/= வரவுவைத்து 2019 வரை வழங்கிவருகின்றோம். தந்தையார் கு. வி. கந்தசாமி அவர்கள் இறைபதம் அடைந்ததிலிருந்து விசு. க. விமலன் தரும கருமம் அவரது துணைவியார், பிள்ளைகள் மேற்பார்வையில் தொடர்ந்தும் அறநெறிப் பாடசாலையில் வகுப்பில் தொடர்ச்சியாக வருகைதரும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் வருடந்தோறும் ரூபா 1000/= சிறுவர் சேமிப்பு புத்தகத்தில் வைப்பிடப்பட்டு வழங்கப்படுகின்றது. அத்துடன் தெய்வீக சுற்றுலா மற்றும் மாணவர்கள் போட்டிகளுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் என்பவற்றைச் செய்துவருகின்றோம். கொரொனா பெருந்தொற்றின் போது அவ்விழாவினை நடாத்த முடியாமல் போனதால் அவ்வருடம் (2020) மாணவர்களுக்கேற்ற நிவாரணமாக ரூபா 2000/= வீதம் வழங்கினோம். 2021 இலும் விழா நடாத்தமுடியாது போனாலும் மாணவர்களுக்கான 1000/= ரூபா சேமிப்புகணக்கில் வைப்பிட்டு வழங்கினோம்.**

**காலையடி மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளி கூடம் விசு. க. விமலன் ஞாபகார்த்தமாக 2014இல் உருவாக்கப்பட்டது. இரு வருடங்களாக முன்பள்ளியில் சேருகின்ற மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் ரூபா 1000/= வைப்பிப்பட்டு வழங்கிவருகின்றோம்.**

**யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலை 25வது ஆண்டு நிறைவு விழா (2022) வில் 'பண்பு' எனும் மலரை வெளியிடுவதற்கான நிதி அனுசரணை ரூபா 90000/= வழங்கப்பட்டது.**

**14வது ஆண்டு நினைவைக் குறிக்குமுகமாக மறுமலர்ச்சி மன்றம் வெளியீடாக வெளிவரும் 'எங்கள் முற்றம்' இதழ் அடக்க விலையில் வழங்க, வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் அனுசரணையாக ஜூலை இதழுக்கு ரூபா 25,000/= விசு. க. விமலன் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகின்றது.**

**விசு. க. விமலன் தரும கருமம்**